# தொழிலாளர் பாதை


இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 487 | 1998 ஏப்பிரல் | ரூபா 8.00

உள்ளே


- ஏகாதிபத்திய அரசின் பிரதிநிதிகளின் "தீர்வு" தாகம் ........ 2
- இந்திய வலதுசாரி அரசாங்கம் முழுத் துணைக் கண்டத்துக்கும் ஒரு எச்சரிக்கை ........ 4-5
- தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகள் ........ 6-7
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 8-9
- நள்ளிரவு குழந்தைகள்: தடையும் எதிர்ப்பும் ........ 14
- புதிய ஜனநாயகக் கட்சி தோட்டத்துறையில் செய்வது என்ன? ........ 15
- விடுதலைப் புலிகள் மீதான அரசின் தடையின் பின்னணியில் ........ 17


UNIVERSITY OF JA... PERIODICALS DIVISION

தபால் ஊழியர் போராட்டம் அடித்து கூறுவது :

# தொழிலாளர் போராட்டங்களுக்கு சோசலிச வேலைத்திட்டம் அவசியம்

கடந்த சில கிழமைகளாக பல வேலைத் தலங்களிலும் தொழிலாளர் பிரச்சாரங்கள் வெடித்துக் கிளம்புவதைக் காணக்கூடியதாக உள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் இவற்றில் சிலவற்றை தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் உதவியோடு நிறுத்திக் கொண்ட அதே வேளையில் ஏனையவை தொழிற்சங்க அதிகாரத்துவங்களினாலேயே தடம் புரளச் செய்யப்பட்டன.

> அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க அலுவலர்களை பொலிசார் கைது செய்து சிறைப்படுத்தியதை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சி அவர்களை உடன் விடுதலை செய்யுமாறு வேண்டுகின்றது. பொலிசாரும் ஆயுதப படைகளும் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் நடாத்திய ஆக்கிரமிப்பும் அத்தியாவசிய சேவைப் பிரகடனமும் அ.தொ.தொ.உ. சங்க தலைவர்களின் தொழிற்சங்கவாதத்தின் வங்குரோத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இந்தச் சம்பவத்துக்கு முன்னதாக தொழிலாளர் பாதை முன்பக்கத் தலைப்புச் செய்தியாக அச்சிட்ட அரசியல் ஆய்வு புதிய அரசியல் முன்நோக்கினதும் தலைமையினதும் அவசியத்தை வலியுறுத்துகின்றது.
>
> ஆர்.

• 17 கோரிக்கைகளின் அடிப்படையில் மேலதிக நேர வேலைநிறுத்தத்தில் இறங்கிய அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் பல கோரிக்கைகளின் மீது அரசாங்கத்துடன் சமரசத்துக்கு வந்த அதே வேளையில் தபால் மா அதிபரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற பிரச்சாரம் தடம்புரண்டு போயுள்ளது. தபால் மா அதிபரின் கெடுபிடி வேலைகளால் தபால் ஊழியர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டுள்ளதாக இந்த யூ.பீ.ரீ.ஓ. தலைவர்கள் கூறிக்கொண்டுள்ளனர். இரண்டு மாதங்களை எட்டிப் பிடித்துள்ள இந்தப் பிரச்சார இயக்கத்தை நசுக்கித் தள்ளிவிட பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏப்பிரல் 20 திங்கட்கிழமை நள்ளிரவில் இருந்து மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தினுள் இராணுவத்தையும் பொலிசையும் இறக்கியுள்ளது. இந்தப் பிரச்சார இயக்கத்தை நசுக்கிவிடும் கடைகெட்ட இலக்குடன் சிலர் அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்க அங்கத்தவர்கள் வேலை செய்வோரைத் தாக்கினர் என்ற பொய் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர். எனினும் அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்க அதிகாரிகள் தபால் ஊழியர்களுக்கு எதிராக அரச பலத்தை கட்டவிழ்ப்பது பற்றி மௌனம் சாதிக்கின்றனர். தபால் மா அதிபர் கொட்டகதெனியவை இரண்டு வாரங்களுக்குள் பதவி நீக்கம் செய்வதாக வாக்குறுதியளித்தால் மேலதிக நேர வேலைநிறுத்தத்தை நிறுத்துவதாக இச்சங்கம் ஏப்பிரல் 22ம் திகதி வெளியிட்ட அறிக்கையில் அறிவித்ததோடு இலங்கை வங்கி ஊழியர் சங்கம், டெலிகொம் தொழிற்சங்கம் உட்பட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் இறங்க விருப்பம் தெரிவித்துள்ளது.



மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ஆயுதம் தாங்கிய பொலிசார்

• ஏப்பிரல் — ம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் சுகவீன விடுமுறையில் சென்ற தாதிகள் ஏப்பிரல் 17ம் திகதியில் இருந்து 17 கோரிக்கைகளை வெற்றி கொள்ள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்ததாக அரசாங்க சேவை தாதிகள் சங்கம்

19ம் பக்கம் பார்க்க

## உலக சோசலிச வெப் நிலையத்துக்கு நல்வரவு கூறுவோம்!

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக சோசலிச வெப் நிலையத்தை கடந்த பெப்பிரவரி 14ம் திகதி அமைத்துக் கொண்டுள்ள செய்தியை சோசலிச சமத்துவக் கட்சியினராகிய நாம் எமது மார்ச் தொழிலாளர் பாதையில் அறிவித்திருந்தோம். இது 24 மணித்தியாலங்களும் தொடர்பு கொள்ளத்தக்கது. அதற்கு நல்வரவு கூறும் வகையில் நாம் விடுக்கும் அறிக்கை வருமாறு :

உலக சோசலிச வெப் நிலையத்தின் அபிவிருத்தியோடு அது உலகின் முக்கிய நிகழ்வுகள், அரசியல், கலாச்சார, வரலாற்று, தத்துவ சம்பவங்கள் மீதான கருத்துக்கள், சோசலிச இயக்கத்தின் மரபுரிமை தொடர்பான பத்திரங்கள், ஆய்வுகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும். இந்த உலக சோசலிச வெப் நிலையமானது (WSWS) அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் தீர்க்கமான விவகாரங்கள் மீதான ஒரு கலந்துரையாடல் நிலையமாகவும் பணியாற்றும். இறுதியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு சோசலிச புரட்சியின் உலகக் கட்சி என்ற வகையில் அரசியல் மரபுரிமைகளையும் முன்நோக்குகளையும் விளக்கும்.

இன்று பெரிதும் அவசியமாகியுள்ள சமகால சமுதாயத்தின் புத்திக் கூர்மையான மதிப்பீடுகளை இட்டுநிரப்ப உதவுவதே WSWSன் நோக்கம். இன்றைய சமூக வாழ்க்கை நிலைமைகளுடனும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பிற்போக்குத் தனமான செயற்பாடுகளுடனும் வெறுப்பு அடைந்துள்ள பரந்த மக்களுடன் அது பேசுகின்றது.

உலக சோசலிச வெப் நிலையம் சமூக சமத்துவமின்மையினதும் சில செல்வந்தர்களினால் பிரித்து வைக்கப்பட்டு அதிருப்தி கொண்டுள்ள உலகின் பரந்த மக்களுக்கு அரசியல் தகவமைவினையும் முன்னோக்கினையும் வழங்கும். நிதி நெருக்கடி தொடக்கம் இராணுவவாதம், யுத்தத்தின் வெடிப்பு வரையிலான மாபெரும் குமுறல்கள் இன்றைய வர்க்க உறவுகளின் நிலைமையை உடைத்து எறிகையில் WSWS ஒரு அரசியல் நெறிப்படுத்தலுக்கான மூலத்தை வழங்கும். இதன் உரிமையாளர்கள் அனைத்து நாடுகளிலும் வேலையின்மை, குறைந்த சம்பளம், சிக்கனக் கொள்கை, ஜனநாயக உரிமை மீறல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் பிரமாண்டமான போராட்டங்களை எதிர்பார்க்கின்றார்கள். எவ்வாறெனினும் WSWS இந்தப் போராட்டங்களின் வெற்றி ஒரு சோசலிச அரசியல் இயக்கத்தினதும் ஒரு மார்க்சிச அரசியல் முன்நோக்கினதும் செல்வாக்கின் வளர்ச்சியில் இருந்து பிரிக்க முடியாத வகையில் இணைந்து கொண்டுள்ளது என வலியுறுத்துகின்றது.

இந்த வெப் நிலையத்தின் நிலைப்பாடு முதலாளித்துவ சந்தைக்கு எதிரான ஒரு புரட்சிகர எதிர்ப்பாகும். உலக சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்வதே இதன் நோக்கு. இந்தப் பரிணாமத்திற்கான வாகனம் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் என இது வலியுறுத்துகின்றது. இருபத்தோராம் நூற்றாண்டில் தொழிலாளர் வர்க்கத்தினதும் இறுதியில் முழு மனித இனத்தினதும் தலைவிதி சோசலிசப் புரட்சியின் வெற்றியிலேயே தங்கியுள்ளது.இதன் வாதம் இதுவே.

WSWS ஒரு அரசியல், வரலாற்றுக் களஞ்சியமாகவும் கலாச்சார விமர்சகராகவும் விஞ்ஞானபூர்வமான விளக்கமாகவும் புரட்சிகர மூலோபாயமாகவும் வளர்ச்சி பெறும். இதன் ஸ்தாபகர்களின் தேவை ஒரு நவீன சோசலிச தொழிலாளர் இயக்கத்தின் மறுபிறப்புக்கு இன்றியமையாததாக விளங்கும் அரசியல், கலாச்சார போதனை தரத்தின் மட்டத்தை உயர்த்துவதேயாகும்.

உலக சோசலிச வெப் நிலைய ஆதரவாளர்கள் புறநிலை நிலைமையையும் நியாயமான விவாதத்தையும் தள்ளுபடி செய்து விடவில்லை. இது முதலாளித்துவ அரசியலுக்கும் முதலாளித்துவ பொருளாதாரத்துக்கும் ஒரு பதிலீட்டை நாடும் தொழிலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகளுடன் பரந்த அளவிலான கருத்துப் பரிமாற்றங்களை வரவேற்கின்றது. ஆய்வுகள், விவாதங்கள்,

18ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**

**சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் பாதை

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிசட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# ஏகாதிபத்திய அரசின் பிரதிநிதிகளின் "தீர்வு" தாகம்



பில் றிச்சார்ட்சன்

பொதுஜன முன்னணி அரசாங்கம் மாங்குளம் பகுதியை இராணுவத்தின் பிடிக்குள் கொணரும் இலக்குடன் இனவாத யுத்த தாக்குதலை உக்கிரமாக்கியுள்ள அதே வேளையில் தென்மாகாணங்களில் தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரங்களையும் தீவிரமாக்கியுள்ளது. இதற்கிடையே அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் முன்னணி பிரதிநிதிகள் மூவர் கடந்த வாரத்தில் இலங்கை விஜயத்தை மேற்கொண்டனர். முதலில் ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி பில் றிச்சார்ட்சனும் தென் ஆசிய நடவடிக்கைகளுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் கார்ள் இன்டர்பேர்த்தும் இந்நாட்டுக்கு வருகை தந்தனர். அதைத் தொடர்ந்து பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் இமெகா அன்யொகுகே இலங்கை விஜயத்தை மேற்கொண்டார்.

இந்தியா.பாகிஸ்தான் உட்பட்ட தென் ஆசிய விஜயத்தின் ஒரு பாகமாக இடம்பெற்ற தமது விஜயத்தில் றிச்சர்ட்சனும் இன்டர்பேர்த்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுதுங்க, வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தலைவர்களையும் கொழும்பு நகர முதல்வர் கரு ஜயசூரிய, அனுர பண்டாரநாயக்க, டிரோன் பெர்னாந்து உட்பட்ட யூ.என்.பி.தலைவர்களையும் சந்தித்தனர். அதைத் தொடர்ந்து இவர்கள் தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் செயலாளர் ஆர்.சம்பந்தன், ஈ.பீ.டி.பி.தலைவர் டக்ளஸ் தேவானந்த உட்பட்ட தமிழ் முதலாளித்துவ தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பொதுநலவாய நாடுகளின் சபையின் பொதுச் செயலாளர் இலங்கை ஜனாதிபதி , நீதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கதிர்காமர் ஆகியோரையும் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியான ஏ.சீ.எஸ்.ஹமீட்டையும் சந்தித்து உள்ளார். இந்த ஏகாதிபத்திய பிரதிநிதிகள் மூவரும் இலங்கையின் முக்கிய முதலாளித்துவ அரசியல்வாதிகளுடன் நடாத்திய பேச்சுக்களிலும் இராப் போசன விருந்துகளிலும் பத்திரிகையாளர் மகாநாடுகளிலும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்.

பில் றிச்சார்ட்சனும் கார்ள் இன்டர்பேர்த்தும் வலியுறுத்திய முக்கிய விடயம் என்ன? இலங்கை அரசாங்கம் "இணங்கினால்" அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த நடுவராகச் செயற்பட அமெரிக்கா தயாராக உள்ளதாகக் கூறிக் கொண்டுள்ளனர். அவ்வாறே ஆயுதத்தைக் கைவிட்டு, அத்தகைய ஒரு இணக்கத்துக்கு வருமாறு அவர்கள் விடுதலைப் புலிகளை ஒரு எச்சரிக்கை பாணியில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதிக்கு ஆதரவளித்துப் பேசுகையில் றிச்சார்ட்சன் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நாட்டின் தேசிய மோதுதலை தீர்க்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு நாம் ஆதரவளிப்போம். ஜனாதிபதி குமாரதுங்க தேசிய மோதுதலுடன் போரிடும் அரசியலை சீர்திருத்தம் செய்வது பற்றி பேசுகின்றார். .." இந்தப் பேச்சுக்கு உரமிடும் வகையில் இன்டர்பேர்த் "ஜனாதிபதியின் அரசியல் பிரேரணை சம்பந்தமாக நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆயுதத்தைக் கைவிட்டு, பேச்சுவார்த்தைக்கு வருமாறு நாம் விடுதலைப் புலிகளை அழைக்கின்றோம்" எனக் கூறினார். சனாதிபதியை பெரிதும் மனங்கவரும் ஒரு அரசியல் புள்ளியாக வருணித்த றிச்சார்ட்சன் "அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். அவர் வல்லமை படைத்தவர். அவர் பிரச்சினை பற்றி அறிந்தவர்" எனக் கூறியதாக குறிப்பிடப்படுகின்றது.

தமது ஏகாதிபத்திய எஜமானர்களிடமிருந்து கிடைத்த பாராட்டுக்களைத் தமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகவும் அமெரிக்க, பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கை யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்தை உருவாக்கும் பிரமாண்டமான உள்ளத்துடிப்புடன் அலைந்து கொண்டுள்ளதாகவும் சிருஷ்டித்துக் காட்டும் பிரச்சாரங்களில் அரசாங்கமும் மற்றும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் ஈடுபட்டுள்ளன.

உண்மையில் இந்த விஜயங்களின் நிஜ நோக்கம் என்ன? கடந்த ஆண்டில் இலங்கைக்கு வந்த பிரித்தானிய பிரதி வெளிநாட்டுச் செயலாளர் லியொன் பொக்ஸ் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் இடையே ஒரு உடன்படிக்கையை உருவாக்க செயற்பட்டார். ஆனால் இப்போது இந்தச் சமரசம் தகர்ந்து கொட்டி, அந்த இரு சாராரும் மோசமான மோதுதல்களில் ஈடுபட்டுள்ளனர். நாடு பூராவும் தமிழர் விரோத இனவாதத்தை தூண்டி அரசாங்கம் இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கி உள்ள அதே வேளையில் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தினதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டம் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்த நிலைமைகளின் கீழ் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்திய பிரதிநிதிகளின் தலையீடு இடம்பெற்றுக் கொண்டுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளின் இந்தத் தலையீடுகளின் நிச இலக்குகள் என்ன? தமிழ், சிங்கள இருதரப்பையும் சேர்ந்த முதலாளி வர்க்க பிற்போக்காளர்களையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொணர்ந்து, தமது அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய விதத்தில் ஒரு தீர்வை இரு தேசிய இனங்களதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான எதிர்ப்புரட்சி தீர்வு திணிப்பதே: இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி. முதலாளிகளுக்கும் இடையேயான இழுபறிகளையிட்டு வருத்தம் தெரிவித்த றிச்சார்ட்சனும் இன்டர்பேர்த்தும் அந்த மோதுதலை நிறுத்தி, ஒரு சமரசத்துக்கு வருமாறு தெரிவித்தனர். "எதிர்க்கட்சி இந்த சீர்திருத்த யோசனைகளை(அரசின் பக்கேஜ்) பற்றி மீண்டும் கவனத்தை செலுத்தி, உருப்படியான விதத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யும் என நாம் எதிர்பார்க்கின்றோம் ...அது தீர்க்கமான முறையில் முக்கியமானது." என இன்டர்பேர்த் குறிப்பிட்டார்.

அரசாங்கம் விரைவாக நடைமுறைக்கிடும் தனியார்மயமாக்கம் உட்பட்ட ஏகாதிபத்திய சார்பு பொருளாதார வேலைத்திட்டங்கள் மூலம் தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களும் எதிர்ப்பும் வளர்ச்சி கண்டுவரும் நிலையில் முதலாளி வர்க்கத்தினுள் இருந்து வரும் இத்தகைய கொடிய மோர்துதல்களும் முழு முதலாளி வர்க்க ஆட்சியையும் ஆபத்தில் மாட்டும் அரசியல் ஈடாட்ட நிலைக்குத் தள்ளிவிடும் என ஏகாதிபத்தியவாதிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். ஆதலால் அந்த மோதுதல்களை நிறுத்தி, யூ.என்.பி.மட்டுமல்ல தமிழ் முதலாளித்துவ விடுதலைப் புலிகளையும் மற்றும் பிற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைக்கும் தீர்வை காண்பதன் மூலம் வளர்ச்சி கண்டுவரும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் போராட்டத்தை நசுக்குவதன் மூலம் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடிய உழைப்பு சுரண்டலுக்கு வாய்ப்பான ஒரு நிலையை நாடு பூராவும் சிருஷ்டிக்குமாறு அவர்கள் இலங்கையின் முதலாளி வர்க்கத்திடம் சிபார்சு செய்தனர்.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உழைப்பு சுரண்டல் இலாப கொள்ளையின் கனிஷ்ட பங்காளிகளாகப் பெற்றுக் கொள்ளும் பங்கு இலாபத்தை பகிர்ந்து கொள்வதும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதலை நடைமுறைக்கிடுவதும் எப்படி என்பதையிட்டும் பொதுஜன முன்னணியும், யூ.என்.பி.யும் ஆளுடன் ஆள் போரிட்டுக் கொண்டுள்ளனர். இவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுடன் அணிதிரள முழுமனே தயாராக உள்ளனர். அதையிட்டு இந்த இருதரப்பு முதலாளிகளிடையேயும் எந்த விதமான மூலோபாய வேறுபாடு கிடையாது.இவர்கள் இருசாராரும் றிச்சார்ட்சன், இன்டர்பேர்த், பொதுநலவாய நாடுகள் சபை செயலாளரைச் சந்திப்பதற்கு காட்டிய வேகம் இதை எடுத்துக்காட்டியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பீ.டி.பி.உட்பட்ட தமிழ் முதலாளித்துவ கட்சிகளும் "இனக்குழு பிரச்சினையைத் தீர்ப்பதில் மூன்றாம் தரப்பின் தலையீடு " பற்றி பேசிவருகின்றனர். இதன் மூலம் அமெரிக்க, பிரித்தானிய அல்லது வேறு எந்த ஒரு ஏகாதிபத்திய தலையீட்டுடனும் அணிதிரளத் தமது உஜார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளும் "மூன்றாம் தரப்பின் தலையீட்டுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு விருப்பம் "தெரிவிப்பதாக யாழ்ப்பாணம் பிஷப் ஊடாகத் தெரிவித்துக் கொண்டதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகள் திணிக்கும் எந்த ஒரு சமரசத்துக்கு காட்டும் தமது தயார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளது.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் மற்றும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளதும் பிற்போக்கு தொழிலாளர் விரோத தன்மை அம்பலமாகியுள்ளது. விடுதலைப் புலிகள் யுத்தத்தை, ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உழைப்பு கொள்ளையின் கனிஷ்ட பங்காளிகளாக தமது முதலாளித்துவ கும்பலின் கைகளுக்கு தட்டிக் கொள்ளக் கூடிய பெரிய பங்கிற்கான பேரம்பேசலின் ஒரு பாகமாகவே கொள்கின்றது. அமெரிக்காவும் மற்றும் முன்னணி ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் தமக்கன்றி பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதையிட்டு முனகிக் கொள்ளும் விடுதலைப் புலிகள் அமைப்பு, ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கான அடிமை உழைப்பு சுரண்டலுக்கு வாய்ப்பான நிலைமைகளை வடக்கு கிழக்கில் உருவாக்கும் வல்லமை பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு அல்லாது தமக்கே இருந்து கொண்டுள்ளதாக ஸ்தாபிதம் செய்யத் துடிக்கின்றது.

இந்த நிலையில் ஏகாதிபத்தியவாதிகளின் பிரதிநிதிகளின் தலையீடுகளினதும் அவற்றுடன் தமிழ், சிங்கள முதலாளிகளின் அணிதிரள்வுகளதும் அர்த்தத்தை விளங்கிக் கொள்வதன் மூலம், அவசியமான அரசியல் முடிவுகளை புரிந்து கொள்வதை தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் எது விதத்திலும் ஒத்திப்போட முடியாது. ஏகாதிபத்தியவாதிகளின் திட்டவட்டமான தலையீட்டுடனோ அல்லது இல்லாமலோ தமிழ் சிங்கள முதலாளிகளிடையே உருவாக்கும் சமரசத்தின் மூலம் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து, சிங்கள தமிழ் மக்களை சமாதானத்துடனோ அல்லது நேசத்துடனோ வாழ வைப்பதற்கான நிலைமை ஒருபோதும் உருவாகாது. அதற்குப் பதிலாக அத்தகைய ஒரு சமரசம், ஏகாதிபத்திய மூலதனத்தின் காட்டுமிராண்டி சுரண்டலுக்கு வாய்ப்பாக சிங்கள தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை கூறுபோட்டு வைக்கும் ஒரு பிற்போக்கு தீர்வாக மட்டுமே அது விளங்கும்.

உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டு உள்ள ஒரு நிலைமையின் கீழ் ஏகாதிபத்திய மூலதனங்கள் தமது சுரண்டலுக்கு பெரிதும் வாய்ப்பான நிலைமைகளைத் திணிக்கக் கூடிய ஒரு தீர்வினை நாடுகின்றன. இலங்கை போன்ற அரைக் காலனித்துவ நாடுகளின் ஆளும் வர்க்கத்தினை அத்தகைய ஒரு தீர்வில் இறக்குவதற்கு கை போட்டுக் கொண்டுள்ளார்கள். அத்தகைய ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடுகளுக்கும் இலங்கையில் சிங்கள முதலாளிகளின் இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளிகளின் பிரிவினைவாத விதிமுறைக்கும் எதிராக சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்கும், தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் இரு தேசிய இனங்களையும் சேர்ந்த ஏனைய ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டிக் கொள்ளவும் தலைமை தாங்க வேண்டும். சிறப்பாக ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளர்கள் உட்பட்ட அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்வதற்கு அங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் போராட்டம், அனைத்துலக சோசலிசத்தின் முன்நோக்கையும் வேலைத்திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு உலக சோசலிச புரட்சியின் ஒரு பாகமாக இலங்கையினுள் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, சிறீலங்கா-ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க நடாத்தும் போராட்டம் ஆகும். தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி அதுவே.

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

* ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் போராட்டங்களுக்கு...

1ம் பக்கத் தொடர்ச்சி

அறிவித்தது. பின்னர் மூன்று கோரிக்கைகள் கிடைத்ததாக கூறி, தொழிற்சங்க அதிகாரத்துவம் வேலைநிறுத்தத்தை நிறுத்திக் கொண்டது.

• சம்பள உயர்வு உட்பட்ட சில கோரிக்கைகளின் அடிப்படையில் புகையிரத சாரதிகள் ஏப்பிரல் 7ம் திகதி தொடக்கம் அடையாள வேலைநிறுத்தத்தில் இறங்கப் போவதாக முன்னர் அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் மெதுவாக இந்த அடையாள வேலைநிறுத்தம் நிறுத்தப்பட்டது.

• சில மாதங்களுக்கு முன்னர் நூற்றுக்கு 60 வீதம் சம்பள உயர்வு கோரும் பிரேரணையைக் காட்டிக் கொடுத்து, நூற்றுக்கு 20வீதம் சம்பள உயர்வுக்கு பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் உடன்பாட்டுக்கு வந்த இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் அதிகாரத்துவம் தருவதாகக் கூறிய சில கோரிக்கைகள் வழங்கப்படாத நிலைமையினுள் அங்கத்தவர்களின் பதட்ட நிலையை எதிர்கொள்ள நேரிட்டது. கோரிக்கையை வழங்கி, கூட்டு உடன்படிக்கையில் கையொப்பம் இடும்படி நெருக்குவதற்கு சட்டப்படி வேலை இயக்கத்துக்கு சங்கத் தலைவர்கள் அழைப்பு விடுத்தனர். இதைத் தொடர்ந்து வங்கி நிர்வாகம் தமது கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்ததாகக் கூறி, பிரச்சாரத்தை கைவிட்டனர்.

• மின்சார சபை ஊழியர்களிடையே சம்பள உயர்வு உட்பட்ட ஒரு தொகை கோரிக்கைகளை வென்றெடுக்கும் அவசியம் நீண்டகாலமாக ஏற்பட்டு உள்ளது . மின்சார சபையை தனியார்மயமாக்கும் அச்சுறுத்தலும் அப்படியே இருந்து கொண்டுள்ளது. கோரிக்கையின் பேரில் "கடுமையான பிரச்சாரம்" இடம்பெறுவதாக அதன் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஒரு நாள் மறியல் போராட்டம் நடாத்தி அறிவித்திருந்தது. அந்த தொழிற்சங்க அதிகாரத்துவம் இப்போது "கடுமையான பிரச்சாரத்தை" மெதுவாக சுருக்கிக் கொண்டுள்ளது.

மேற்சொன்ன பிரச்சாரங்கள் எல்லாம் கடந்த பெப்பிரவரியில் 6 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள், அதிக சம்பளம் கேட்டு நடாத்திய வேலைநிறுத்தத்தின் பின்னரே ஏழு நாட்களின் பின்னர் சம்பளக் கோரிக்கையை காட்டிக் கொடுத்து வேலை நிறுத்தத்தை நிறுத்தும்படி தொழிற்சங்கத் தலைவர்கள் விடுத்த சிபார்சையும் உடைத்துக் கொண்டு 4 இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை மேலும் நான்கு நாட்கள் தொடர்ந்தனர். சம்பள அதிகரிப்புக்காக அவர்கள் மீண்டும் போராட்டத்தில் குதிக்க வேண்டிய அவசியம் அங்கு குமுறிக் கொண்டுள்ளது. அதை அடித்துச் செல்லும் பொருட்டு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி தோட்டத் தொழிலாளர் சம்பள ஆணைக்குழுவை அமைக்கும்படி ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

• பியகம் சுதந்திர வர்த்தக வலயத்தில் சீ.அன்ட்.எச் பக்டரியின் 3500 தொழிலாளர்கள் படுமோசமான சேவை நிலைமைகளுக்கும் கதவடைப்பை எதிர்த்தும் கடந்த பெப்பிரவரியில் இருந்து போராட்டம் செய்து வருகின்றனர். இது மோசமான அரச காடைத்தனங்களுடனும் பக்டரி முதலாளிகளுடனும் கைகோர்த்துக் கொண்ட பாசிச ஜே.வீ.பி. தலையீட்டின் மூலம் கரைத்துவிடப்பட்டது.

இந்தத் தொழிலாளர் பிரச்சாரங்கள் வெடித்துக் கிளம்பியதும் இனிவடித்துக் கிளம்ப இருப்பதும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமானர்களதும் தொழில், சம்பள, வாழ்க்கை நிலைமைகள் வெட்டுக்கும் தனியார்மயத்துக்கும் ஜனநாயக உரிமைகள் பறிப்புக்கும் எதிராகவேயாகும். வாழ்க்கை, சேவை நிலைமைகள் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு மோசம் கண்டுள்ளது. 1998ன் முதல் மூன்று மாதங்களுக்குமான வாழ்க்கைச் செலவுப் புள்ளி COL Index எட்டியுள்ளது. தபால் திணைக்களம், மின்சார சபை போன்ற இடங்களில் தொழிலாளர்கள் முக்கியமாக முகம் கொடுத்து இருப்பது தனியார்மயத்தின் மூலம் தொழில், சேவை நிலைமைகள், சம்பளம் ஆபத்துக்கு உள்ளாகும் பிரச்சினையாகும்.

அனைத்துலக மூலதனத்தின் அவசியங்களின் பேரில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் இந்தத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இலாப உழைப்பை சிருஷ்டிப்பது உட்பட்ட உற்பத்தி செலவைக் குறைப்பதன் மூலம் மூலதனத்தை நாட்டினுள் இழுத்துக்கொள்வது அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் கொள்கையாக உள்ளது. அரச சொத்துக்களை விற்றுத்தள்ளி வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை நிரப்புவது, கொமிசன்கள் மூலம் மடியை நிரப்பிக் கொள்வது, அனைத்துலக மூலதனத்தின் சுரண்டலுடன் கூட்டுச் சேர்ந்து கொள்வதன் மூலம் அதில் ஒரு பாகத்தை தட்டிக் கொள்வது ஆதியன இதன் கீழ் முதலாளி வர்க்கம் நடைமுறைக்கிட்டுள்ள வேலைத் திட்டமாகும். கடந்த மூன்று வருடங்களுள் பொதுஜன முன்னணி அரசாங்கம் அரச நிறுவனங்களை விற்றுப் பெற்ற நிதி 36000 கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கை டயர் கூட்டுத்தாபனத்தை விற்றுத் தள்ளுவதன் மூலம் மடியை நிரப்பிக் கொண்ட பணம் 540 கோடி ரூபா என முதலாளி வர்க்கப் பிரிவினர் வெளிப்படுத்தி உள்ளனர்.

## உலக நெருக்கடி

அனைத்துலக மூலதனத்தின் நெருக்கடி உக்கிரமடையும் அளவுக்கு அதன் இலாப வெறியும் அதிகரிக்கின்றது. அதன்படி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதலும் உக்கிரம் அடைகின்றது. தென்கிழக்கு ஆசியாவில் பொருளாதார 'புலிகளாக' அழைக்கப்பட்ட தென் கொரியா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து முதலான நாடுகள் இன்று பெரும் நெருக்கடியில் மூழ்கியுள்ளன. சர்வதேச நாணய நிதியம் பொதுமக்கள் மீது கொடும் தாக்குதலை தொடுக்கும் நிபந்தனை மீதே இவற்றுக்கு இந்நாட்களில் கடன்களை வழங்கி வருகின்றது.

ஜப்பான் முழு உலகினையும் பொருளாதார வீழ்ச்சியினுள் தள்ளி வீழ்ச்சியின் விளிம்பில் இருந்து கொண்டுள்ளதாக சோனி நிறுவனத்தின் அதிபர் நொரியோ டக்கா மார்ச் கடைப்பகுதியில் குறிப்பிட்டார். அந்நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டில் மோசமடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா நீண்ட பொருளாதார பின்னர் பொருளாதார வீழ்ச்சியில் தலைமூழ்கும் அடையாளம் தென்படுகின்றது. கடந்த மார்ச் மாதத்தில் தொழில்கள் 36000ஆல் வீழ்ச்சி கண்டது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அமெரிக்காவின் பெரிய 500 கம்பனிகளின் இலாபம் வீழ்ச்சி கண்டன. அவற்றினுள் பெரும் கணனி கம்பனியும் எரிபொருள் கம்பனியும் அடங்கும்.

உலகின் ஏனைய நாடுகளிலும் இலங்கையிலும் தொழிலாளர்கள் முகம் கொடுத்திருப்பது இதற்குச் சமானமான முறையில் ஆழமாகி வரும் உலக முதலாளித்துவ நெருக்கடியேயாகும். தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இந்த முறையில் தினமும் ஆழமாகி வரும் நெருக்கடியின் தாக்கத்துக்கு முகம் கொடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது. தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகளைக் காக்க ஆரம்பிக்கும் எந்த ஒரு போராட்டமும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமானர்களதும் அவர்களின் கையாட்களதும் இவர்களை ஆட்டிப்படைக்கும் சர்வதேச நாணய நிதியத்தினதும் இலாப வெறியுடன் மோதிக் கொள்கின்றது.

இந்தக் கட்டத்தில் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் செய்வது என்ன? தபால் திணைக்களத்தை பாருங்கள். தனியார்மய ஆபத்து தோன்றியுள்ள ஒரு நிலையில் அதன் விளைவுகளில் இருந்து தப்புவது தபால் ஊழியர்களுக்கு அவசியமாகி உள்ளது. ஊழியர்களின் எதிர்ப்பினால் அரசாங்கம் காலம் கடத்தி வந்தாலும் அது எத்தனை நாளுக்கு ? இதை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் தொழிற்சங்கத் தலைவர்கள் பின்னர் அதை தவிர்த்துக் கொண்டு , மேலதிக நேர வேலைநிறுத்தத்தில் இறங்கியது. வேறு கோரிக்கையின் அடிப்படையிலாகும். அதுவும் கூட இன்று தபால் மா அதிபரை நீக்கும் கோரிக்கையை சுற்றி சுழன்று கொண்டுள்ளது. அரசாங்கத்தை நெருக்குவாரம் கொடுத்து சரிப்படுத்திக் கொள்வதும், கெடுபிடி நிர்வாகத்துக்கு பதிலாக சினேகபூர்வமான நிர்வாகத்தை ஏற்படுத்துவதும் தொழிற்சங்கத் தலைவர்களின் வங்குரோத்து வேலைத்திட்டமாகியுள்ளது. அரசாங்கம் தமது தாக்குதலை தொடுப்பதற்கான காலக்கெடுவுக்கு காத்திருக்கையில் இவர்கள் தமது வேலைத்திட்டங்கள் வெற்றி ஈட்டிக் கொண்டுள்ளதாக துள்ளிப் பாய்வதன் மூலம் அந்த வங்குரோத்து பொறிக்கிடங்கில் தொழிலாளர்களை மேலும் மேலும் மாட்டி வைக்க செயற்படுகின்றனர். சுகாதார சேவை ஊழியர்களின் பிரச்சினை இதில் இருந்து வேறுபட்டதல்ல.

## நிஜ அனுபவம்

தொழிற்சங்கவாத வேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் முன்னோக்கிச் செல்ல முடியாது. இதை இந்தப் போராட்டங்களின் நிஜ அனுபவங்கள் காட்டிக் கொண்டுள்ளன. உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்ட நிலைமையினுள் அனைத்துலக மூலதனம் இலாபத்தை கறந்து கொள்ளத் தொடுக்கும் தாக்குதலின் எதிரில் தொழிற்சங்கங்கள் பலவீனம் கண்டுள்ளன. இப்போது தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு மாட்டும் கால்விலங்குகளாக மாற்றம் கண்டுள்ளன. முதலாளித்துவத்துடன் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து வாழ்க்கை நடாத்த வர்க்க உடனுழைப்புக் கொண்ட சகல போக்குக்களும் - தொழிற்சங்கங்கள், தேசியவாதக் கட்சிகள், அமைப்புக்கள் அதன் ஏஜன்சிகளாக பரிணாமம் கண்டுள்ளன. தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் காட்டிக் கொடுப்புக்களும் முதலாளித்துவ அரசுடனும் எஜமானர்களுடனுமான அவர்களின் கோபரேட்வாத உறவுகளும் இந்த நிலைமையில் இருந்தே பெருக்கெடுக்கின்றன. இன்று இலங்கையிலும் அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களின் பொது அனுபவம் இதுவே.

முதலாளித்துவத்தின் தாக்குதல்களுக்கு எதிராக பல்வேறு வேலைத்தலங்களில் இருந்தும் போராட்டங்களுக்கு ஈர்க்கப்படும் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க வாதத்தில் இருந்து பிரிந்த, பரந்துபட்ட வேலைத்திட்டம் அவசியம் என்பதை இந்த அனுபவங்கள் தெளிவுபடுத்திக் கொண்டுள்ளன. அனைத்துலக மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராக அனைத்துலக் சோசலிசத்தை கட்டியெழுப்புவதன் ஒரு பாகமாக தொழிலாளர்கள் தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. முதலாளித்துவத்துடன் எந்தவிதமான அரசியல் சமரசங்களுக்கு செல்வதையும் நிராகரிக்க வேண்டும். அத்தகைய யோசனைகளை முன்வைக்கும் ஏஜன்சிகளில் இருந்து பிரிந்து தொழிலாளர் தமது போராட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டும்.

முக்கிய முதலாளித்துவ கைத்தொழில்கள், நிறுவனங்கள், தோட்டங்கள், வங்கிகளை இலாபம் கறக்கும் அவசியத்தினால் சுழலும் முதலாளிகளின் பிடியில் இருந்து விடுவித்து, பொதுமக்களின் அவசியத்துக்காக ஒழுங்கு செய்யும் நிலைமைகளின் கீழே மட்டுமே தொழிலாளர் வர்க்கத்தின் தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரங்களையும் மற்றும் உரிமைகளையும் காத்துக் கொள்ள முடியும். முதலாளித்துவத்தினுள் பேரம் பேசுவதன் மூலம் ஏதேனும் ஒரு நாகரீகமான வாழ்க்கை நிலைமையை நடாத்துவதற்கான ஏதேனும் ஒரு நிலைமை இருந்திருக்குமானால் அது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. மேலே குறிப்பிட்ட வேலைத்திட்டத்துக்கு போராடுவதைத் தவிர வேறு மாற்றுவழி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு கிடையாது. அதற்கு தொழிலாளர்-விவசாயிகளின் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர வேண்டும்.

தொழிலாளர் வர்க்கத்தின் எந்த ஒரு பிரிவினரும் சரி போராட்டத்துக்கு தள்ளப்படும் ஒரு நிலையில் இந்த அரசியல் பிரச்சினை தோன்றுகின்றது. ஆதலால் இலாப அமைப்பைக் காக்கும் பொருட்டு முதலாளித்துவ அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் தொழிலாளர் உரிமைகளை வழங்காது இருப்பதோடு மட்டுமன்றி தொழிலாளர் போராட்டங்களை காட்டுமிராண்டித்தனமான முறையில் நசுக்கித் தள்ளவும் திரும்பியுள்ளது. தபால் ஊழியர்களுக்கு எதிராக அரசாங்கம் இராணுவம்-பொலிஸ் படைகளை இறக்கியதன் மூலம் இது வெளிப்பாடாகிக் கொண்டுள்ளது. இலங்கை ஆளும் வர்க்கம் வடக்கு-கிழக்கு தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் இனவாத யுத்தத்தினை நடாத்திவரும் அதே வேளையில் நாட்டின் ஏனைய பாகங்களில் - இராணுவம்-பொலிஸ் - குண்டர் படைகளை கட்டியெழுப்புவதன் நோக்கம், தமது உரிமைகளுக்காக போராட்டத்தில் இறங்கும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளுவதேயாகும்.

போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்களிடமும் ஏனைய இடங்களில் உள்ள தொழிலாளர்களிடமும் நாம் வேண்டுவது இதுதான்: இந்த நிலைமையையிட்டு நனவாக இருங்கள். கவனத்தைச் செலுத்துங்கள். உங்களது உரிமைகளுக்காக தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் சோசலிச இயக்கத்தைக் கட்டியெழுப்புங்கள்!

இந்த விடயத்தில் தொழிலாளர்கள் தமது வேலைத்தலத்துடன் கட்டுப்பட்டு நிற்க முடியாது. ஏனைய இடங்களில் உள்ள தொழிலாளர்களுடனும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடனும் ஐக்கியப்படுவது அவசியம். வடக்கு-கிழக்கு மாகாண இனவாத யுத்தத்தினை எதிர்ப்பதன் மூலம் ஒடுக்கப்படும் தமிழ் தொழிலாளர், விவசாயிகளின் ஆதரவை திரட்டிக் கொள்வது அவசியம். தென் மாகாணங்களில் ஏழை விவசாயிகளதும் இளைஞர்களதும் புத்திஜீவிகளதும் ஆதரவை வெற்றி கொள்ளவும் அவர்களின் போராட்டங்களுக்கு தலைமை வழங்குவதும் அவசியம். இந்தப் பரந்த முன்நோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்டு தமது உரிமைகளுக்கான போராட்டத்தை ஒழுங்கு செய்யுமாறு சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர்களை வேண்டுகின்றது. தொழிற் சங்க விலங்குகளை உடைத்துக் கொண்டு , அந்தப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக நடவடிக்கை குழுக்களை வேலைத்தலங்களிலும் சுற்றாடல் பகுதிகளிலும் அமைக்க நடவடிக்கை எடுப்பது அவசியம் என நாம் பிரேரிக்கின்றோம்.

முதலாளித்துவ ஏஜன்டுகளும் வங்குரோத்து பிற்போக்கு தொழிற்சங்க அதிகாரத்துவங்களுக்கும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளுக்கும் முதலாளித்துவத்தின் ஏனைய ஏஜன்டுகளுக்கு எதிராகவும் இந்த சக்திவாய்ந்த முன்னோக்கையும் வேலைத்திட்டத்தினையும் சோசலிச சமத்துவக் கட்சியே முன்வைக்கின்றது. அந்தக் கட்சியில் சேருங்கள். அதன் முன்நோக்குக்காகப் போராடுங்கள். சகல போராட்டங்களிலும் தலைதூக்கியுள்ள பிரச்சினை தொழிலாளர் வர்க்க சோசலிச முன்நோக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட தலைமை இல்லாமையுமேயாகும். தொழிற்சங்க அதிகாரத்துவமும் முதலாளி வர்க்கமும் சுரண்டிக் கொள்வது, இந்த நிலைமையையேயாகும். அதை ஒரு முடிவுக்குக் கொணர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வலதுசாரி அரசாங்கம் முழுத் துணைக் கண்டத்துக்கும் ஒரு எச்சரிக்கை



இந்திய வலதுசாரி அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகள் - அத்வானி, வாஜ்பாய்

இந்தியாவின் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் எந்த ஒரு கட்சியோ அல்லது முன்னணியோ ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு அவசியமான பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிராத காரணத்தினால் இரண்டு கிழமைகளாக இடம்பெற்ற கயிறிழுப்புக்களின் பின்னர் வலதுசாரி பாரதீய ஜனதா கட்சி (பீ.ஜே.பி. ) அரசாங்கத்தை அமைத்துக் கொண்டுள்ளது. பீ.ஜே.பி.தலைவர் அத்தல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராகியுள்ளார்.

இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகளும் அதைத் தொடர்ந்து வந்த அரசியல் நிலைமைகளும் அந்நாட்டின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியின் ஈடாட்ட நிலைமையையும் பிரமாண்டமான சமூக குமுறல் நிலைமை வெடித்துக் கொண்டுள்ளதையும் அவ்வாறே தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் இருந்து கொண்டுள்ள பாரிய அரசியல் ஆபத்துக்களையும் எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது.

பாரதீய ஜனதா கட்சியானது ராஸ்ட்ரிய சுவயம் சேவக சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) சிவசேனா போன்ற பாசிச அமைப்புக்களைக் கொண்ட 17 கட்சிகளின் முன்னணியில் இருந்து கொண்டுள்ளது. 1947ல் மகாத்மா காந்தியை படுகொலை செய்தது, இந்த ஆர்.எஸ்.எஸ்.என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முன்னணியில் சேர்ந்து கொண்டுள்ள கட்சிகள் யாவும் இன, மத, சாதி அடிப்படையில் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து அமைக்கப்பட்ட கட்சிகள். இந்தப் பிற்போக்குக் கட்சிகளை அரவணைத்துக் கொண்டுள்ள பா.ஜ.க. "ஒரே நாடு, ஒரே இனம், ஒரே கலாச்சாரம்" என்ற இந்து சோவினிச ஆத்திரமூட்டல் சுலோகத்தை முன்னெடுத்துள்ளது. இந்தியாவில் வாழும் பதினொரு கோடியே பத்து இலட்சம் முஸ்லீம் மக்களுக்கு எதிராக மதவெறி இரத்தக் களரியைத் தூண்டும் இக்கட்சி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளும் வலதுசாரி சக்திகளைக் கொண்ட ஆட்சியை நிறுவத் துடிக்கும் ஒரு கட்சியாகும்.

1996 ஜூனில் இருந்து 17 மாத காலங்கள் ஆட்சியில் இருந்துவந்த ஐக்கிய முன்னணி "இடதுசாரி" முன்னணியான முதலாளித்துவக் கூட்டின் ஆசனங்களின் எண்ணிக்கை 179ல் இருந்து 98 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. இக்கூட்டின் முக்கிய கட்சியான ஜனதா தாள் கட்சி 1996 தேர்தலில் 48 ஆசனங்களைப் பெற்றிருந்த போதிலும் இத்தடவை அது 6 ஆசனங்களை மட்டுமே வெற்றிகொள்ள முடிந்தது. இம்முன்னணியின் முக்கியஸ்தர்களாகவும் முற்போக்காளர்களாகவும் இந்தியன் ஸ்டாலினிஸ்டுகளால் தலைமேல் வைத்துக் கொண்டாடப்பட்ட தெலுங்கு தேசம் கட்சித் தலைவரான சந்திரபாபு நாயுடுவின் ஆதரவுடனேயே பா.ஜ.க.அரசாங்கம் அமைத்துக் கொள்வது சாத்தியமாகியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உத்தரபிரடை தோல்வி

காங்கிரஸ் கட்சி தலைமையில் கொண்ட முன்னணிக்கு 167 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தது. காங்கிரசுக்கு தனித்து 141 ஆசனங்கள் கிடைத்துள்ளது. சோனியா காந்தி பிரிவு இணைந்து கொண்டதன் பின் புத்துயிரூட்டப்பட்டதாகக் கூறிக் கொள்ளப்படும் இக்கட்சி கடந்த தேர்தலிலும் பார்க்க ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே கூடுதலாக வெற்றி கொண்டுள்ளது. ஜவஹர்கலால் நேரு குடும்பத்தின்(காந்தி) கோட்டை எனக் கூறிக்கொள்ளப்படும் உத்தர பிரதேச ஆசனத்திற்கு சோனியா காந்தியால் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட காங்கிரஸ் வேட்பாளர் 23261 வாக்குக்களால் தோற்கடிக்கப்பட்டார். இது முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் பெரும் புள்ளியாக கொண்டாடப்பட்ட "சோனியா காந்தி பிரிவு"க்கு கிடைத்த ஒரு பலத்த அடியாகும்.

1996 பொதுத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி தோல்வி கண்டதோடு எந்த ஒரு இந்திய முதலாளித்துவக் கட்சிக்கும் புதுடில்லியில் அரசாங்கம் அமைக்கக் கூடிய அளவுக்கு பெரும்பான்மைப் பலம் கிடடவில்லை. இந்நிலையில் முதலாளித்துவ ஆட்சியைப் பேணிக் கொண்டு, ஒரு முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தை அமைக்க முன்நின்றவை இந்த பாரதீய ஜனதா கட்சியும் இந்திய ஸ்டாலினிசக் கட்சிகளான சீ.பீ.ஐ. சீ.பீ.எம்.என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஸ்டாலினிசக் கட்சிகள் இரண்டும் இத்தடவையும் ஒரு முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தை அமைக்க முன்னின்று உழைத்துள்ளன. தேர்தல் முடிவுகள் வெளியானதும் சீ.பி.ஐ.(எம்) கட்சியின் பொதுச் செயலாளர் ஹரி கிருஷ்ணன் சிங் சுர்ஜித் "காங்கிரஸ் கட்சியின் பொருளாதாரக் கொள்கையுடன் சீ.பீ.ஐ.(எம்) உடன்பட்டுபோகாது விடினும் கூட இனவாத சக்திகளுடன் காங்கிரஸ் சமரசத்துக்கு சென்றாலும் அதை ஒரு இனவாதக் கட்சியாக கருதாதிருப்பதாக" அறிக்கை வெளியிட்டார். இதன்மூலம் காங்கிரசுடன் கூட்டுக்கு தமது தயார் நிலையை காட்டிக் கொண்டது. மார்ச் 4ம் திகதி சீ.பி.ஐ.(எம்) சீ.பி.ஐ., போவார்ட் புளொக், சோசலிசக் கட்சி ஆகியன ஒன்றுகூடி எடுத்த முடிவின் பிரகாரம்," காங்கிரஸ் நிர்வாகக் கூழு கூடி எமது ஆதரவுடன் கூடிய அரசாங்கத்தை அமைக்க எமக்கு அழைப்பு விடுத்தால் எமது கருத்தை நாம் வெளியிடுவோம்" என அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த விதத்தில் ஸ்டாலினிஸ்டுகள் தோள்கொடுக்க முன்நிற்பது யாருக்கு ? ஆறு மாதங்களுக்கு முன் இடதுசாரிக் கூட்டு முன்னணி அரசாங்கத்தை தூக்கிவீசிய காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் ஒன்றுக்கேயாகும். காங்கிரஸ் கட்சி தனது கூட்டை உடைத்து, அந்த அரசாங்கத்தை வீழ்ச்சி காணச் செய்தது. பிரதமர் குஜ்ரால் அரசாங்கமானது 40 இலட்சம் அரசாங்க ஊழியர்களது வேலை நிறுத்தம் வெடிக்குமோ என்ற பயத்தில் 40 வீதம் சம்பள உயர்வு உட்பட 13 கோரிக்கைகளை வழங்கிப் பின்வாங்கியமையே இதற்கான முக்கிய சாட்டாக அமைந்தது.

## தேர்தல் பகிஷ்கரிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளையை நிறைவேற்றி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அடக்குவது தொடர்பாக எந்த ஒரு பின்னடிப்பும் இருக்கக் கூடாது என்பதே காங்கிரஸ் முதலாளிகளின் நிலைப்பாடாக இருந்துவந்தது. இந்தக் காங்கிரஸ் முதலாளிகளின் கூட்டுக்குள் நுழைந்து கொள்ளத் தருணம் பார்ப்பதானது, இந்த ஸ்டாலினிசக் கட்சிகள் ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக மாறி, தொழிலாளர் வர்க்கத்தை அடக்கியொடுக்க தருணம் பார்க்கின்றது என்பதற்கு புதியதோர் எடுத்துக்காட்டாகும். கடந்த தடவைகளில் முதலாளித்துவக் கட்சிகளிடம் இருந்து கிடைத்த அழைப்பை ஏற்காததன் மூலம் இழைத்த "வரலாற்று தவறை" இனிமேல் இழைப்பது இல்லை எனவும், இந்தியாவில் முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதமர் பதவியை பொறுப்பேற்க தாம் ஒரேயடியாக தயாராக இருப்பதாகவும் மேற்கு வங்காள முதலமைச்சரும் சீ.பீ.ஐ.(எம்) தலைவருமான ஜோதிபாசு இத்தடவை தேர்தல் பிரச்சாரங்களின் போது திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்.

இத்தடவை பொதுத் தேர்தலில் கோடிக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொள்ளவில்லை. இது இந்திய ஆளும் வர்க்கம் தொடர்பாகவும் அது நடைமுறைக்கிட்டுள்ள ஏகாதிபத்திய வாதிகளின் சிபார்சுடன் கூடிய வேலைத்திட்டம் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு இடையே வளர்ச்சிகண்டுள்ள வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டிக் கொண்டுள்ளது. இந்தியாவின் 93 கோடியே 60 இலட்சம் ஜனத்தொகையில் 60கோடியே 50 இலட்சம் மக்களுக்கு வாக்குரிமை இருந்து கொண்டுள்ளது. இதில் 33 கோடிக்கு சற்று அதிகமானோரே தமது வாக்குக்களை பாவித்துள்ளனர். 27 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. இந்த விதத்தில் வாக்களிக்காதோர் நூற்றுக்கு 45 வீதமாகும். 1952ல் இருந்து நடைபெற்றுள்ள 11 பொதுத் தேர்தல்களில் பொதுவாக நூற்றுக்கு 60வீதத்தினர் வாக்களித்துள்ளனர். ஆனால் இத்தேர்தலில் நூற்றுக்கு 55 வீதத்தினரே வாக்களித்துள்ளனர்.

இந்தியாவின் "சமகால கல்வி நிலையம்" என்ற அமைப்பின் சமூக விஞ்ஞானியான மஹேஷ் ரங்கராஜன் வாக்காளர்களிடையே பரந்துபோயுள்ள நம்பிக்கையீனம் தொடர்பாக பின்வருமாறு கூறியுள்ளார். "மொத்தத்தில் கட்சிகள் சம்பந்தமாக வாக்காளர்களிடையே ஒரு வகையான அலட்சியப் போக்குக் காணப்பட்டது." இதற்கு காரணம் காட்டுகையில் அவர் கூறியுள்ளதாவது : "எந்த ஒரு கட்சியும் சரி தமது பிரச்சாரங்களின் போது பொதுமக்கள் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினையான அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு, வேலையின்மையின் உயர்வு, அடிப்படை வசதிகள் இன்மை பற்றி ஒரு வார்த்தை தன்னும் கூறாததினால் பொதுமக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள்" என்றுள்ளார். அரசியல் விஞ்ஞானியான ரதனி கொதாரி, சோனியா காந்தியின் தலையீட்டினால் காங்கிரஸ் கட்சிக்கு பலன் இல்லாது போனதற்கான காரணம் என்ன என்பதை ஆய்கையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "சுத்தமான குடிதண்ணீர் இல்லாமை, மகளிருக்கு எதிரான வன்முறை, இளைஞர் வேலையின்மை, வீட்டு, பொது வசதிகள் இல்லாமை தொடர்பாக வாக்காளர்களுடன் சோனியா காந்தி பேசியிருக்கவில்லை."

## முதலாளித்து வ ஆட்சியின் ஐந்தொகை

சகல முதலாளித்துவக் கட்சிகளும் பொதுமக்கள் முகம் கொடுக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாகவும் வாய் திறக்காததும், ஒவ்வொருவரினதும் குப்பைக் கூடைகளையும் கவிழ்த்துக் கொட்டியதன் மூலம் பொதுமக்களை தவறான வழியில் திசை திருப்ப முயன்றதற்கும் காரணம்,இந்த முதலாளித்துவக் கட்சிகளிடம் இந்தப் பிரச்சினைகளுக்கு எந்தவிதமான தீர்வும் இருந்து கொண்டிராததேயாகும். பொதுமக்களின் கண்களில் மண் தூவுவதன் மூலம் இந்த முதலாளித்துவக் கட்சிகள் ஆட்சிக்கு வர முயன்றதற்குக் காரணம், ஏகாதிபத்தியவாதிகளின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவற்றின் ஏஜன்சியாக வயிற்றை நிரப்பிக் கொள்ளும் அதே வேளையில் , பொது மக்களைச் சமூகப் பிரச்சினைகளின் படுகுழியில் தள்ளி வீழ்த்துவதற்கேயாகும்.

கடந்த ஆண்டு சுதந்திரம் எனப்படுவதன் ஐம்பதாண்டு நிறைவை கொண்டாடிய இந்திய முதலாளித்துவ அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் தொழிலாளர், ஏழை விவசாயிகள் மீது தொடுத்துள்ள கொடூரமான சமூகச் சீரழிவுகளையும் துயரங்களையும் வார்த்தைகளில் கூற முடியுமா? 1997 டிசம்பர் முதல் வெளியீட்டில் "பிஸ்னஸ் இந்தியா" சஞ்சிகையானது இந்தியாவின் ஜனத்தொகையில் 52 சதவீதமான மக்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகக் குறிப்பிட்டுள்ளது. முதியவர்களில் ஜனத்தொகையின் 48 வீதத்தினருக்கு எழுத வாசிக்கத் தெரியாது. பெண்களில் 64 வீதத்தினர் இங்ஙனம் படிப்பறிவற்றவர்களாக இருந்து கொண்டுள்ள்னர். ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களில் 53 சதவீதத்தினர் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். ஜனத்தொகையில் 71 வீதத்தினருக்கு குடிநீர், மலசலகூட வசதி போன்ற அடிப்படை வசதிகள் கூடக் கிடையாது. தமது உயிரைப் பிடித்துவைக்க எந்த வழியுமற்று நாளாந்தம் பாலர், பெண்கள் ஆகிய 250 பேர் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டு வருவதாக ஒரு முதலாளித்துவப் பத்திரிகைச் செய்தி குறிப்பிடுகின்றது. 10 கோடி சிறுவர்களைக் கொண்ட சனத்தொகையில் 3 1/2 கோடியினர் வாழ்நாளில் பாடசாலைப் பக்கமே தலைவைத்தும் படுக்க முடியாத தரித்திர வாழ்க்கையைக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினதும் முதலாளித்துவ சமூக விஞ்ஞானிகளதும் சகல அறிக்கைகளும் 1991ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நரசிம்மராவின் காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் இருந்து இந்தியா பூகோளமயமாக்கல் செயற்பாடுகளில் இறங்கியதில் இருந்து இந்த சமூக தரித்திர நிலைமை தீவிரமடைந்துள்ளதையும் தேசிய வருமானத்தில் முதலாளித்துவ வர்க்கம் பறித்துக் கொள்ளும் செல்வம், பாரிய அளவில் அதிகரித்துக் கொண்டுள்ளதையும் காட்டிக் கொண்டுள்ளது. இதனால் சமூக சமத்துவமின்மை தீவிரம் கண்டுள்ளதையும் அம்பலமாக்குகின்றது.

இந்தியாவில் ஒரு சமூகக் குமுறல் வளர்ச்சி கண்டு வருகின்றது. 1997 செப்டம்பர் 24ம் திகதி 40 லட்சத்துக்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர் சம்பள உயர்வு உட்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பொதுவேலை நிறுத்தத்திற்குத் தயாராகினர். கடந்த ஆண்டு ஆகஸ்டில் 15 இலட்சம் இந்தி வங்கி ஊழியர்கள், அரசாங்கத்தின் தனியார்மயமாக்கல் தயாரிப்புக்களுக்கு எதிராக இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் ஸ்டாலினிச மாநில அரசாங்கம் இருந்து வரும் கேரளத்தில் விவசாயத் தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் ஸ்டாலினிச தொழிற்சங்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்களுக்கு மத்தியிலும் வயல்களுக்கு ஊடாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்படி கோரும் கோரிக்கைக்காகப் பிரச்சாரம் செய்தனர். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே இந்த விதத்தில் ஒரு சமூகக் குமுறலுக்கான நிலைமைகளே சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலைமைகளின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளின் திருப்தியீனமும் முதலாளிகளின் குழப்பமும் வெளியரங்குக்கு வந்துள்ளது. முதலாளி வர்க்கம் அப்பட்டமாகக் கூறுவது என்ன? ஏகாதிபத்தியவாதிகள் சிபார்சு செய்துள்ள கொள்கைகளை நடைமுறைப்படுத்த "உறுதியான அரசாங்கம்" அவசியம் என்கிறார்கள். இந்தியத் தேர்தலின் பின்னர் குஜராத்தில் முதலமைச்சர் ஒருவர் வெளியிட்ட கருத்து முதலாளி வர்க்கத்தின் பொது நோக்கை எடுத்துக் காட்டுகின்றது: "எமக்கு அவசியமாகியுள்ளது ஐந்து வருடகால அரசாங்கத்தைக் கொண்டு நடாத்த முன்நோக்குள்ள பலம்வாய்ந்த தலைமையே ஆகும்." பா.ஜ.க. அரசாங்கத்திற்கு இந்தியாவிலும் வெளிநாட்டிலும் முதலாளிகளிடையே பொதுவான ஆதரவு வலுப்பட்டு வருவதாக 'ரொய்டர்' அறிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார். பம்பாய் பங்குமுதல் சந்தையின் தலைவர் கோபால் தமானி என்ற முதலாளி.

ஏகாதிபத்தியவாதிகள் பா.ஜ.க. அரசாங்கத்தை தமது கொள்கைகளின் பேரில் வழிநடாத்த தற்சமயம் திரும்பி உள்ளது. இந்த வருடத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் இந்தியாவில் சுற்றுலாவில் ஈடுபடுவதற்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் பா.ஜ.க. அரசாங்கம் முன்னொருபோதும் இல்லாத விதத்தில் கொடிய தாக்குதல்களை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுப்பது நிச்சயம். கடந்த சில வருடங்களாக இந்தியாவில் நரசிம்மராவ் அரசாங்கமும் பின்னர் ஸ்டாலினிஸ்டுகளின் முண்டுபலத்துடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கமும் பொருளாதாரத்தின் கதவுகளை மேலும் மேலும் திறந்து விடுவதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததோடு ஏகாதிபத்தியவாதிகளின் கோஷம் "இது காணாது" என்பதாக விளங்கியது. 1997 டிசம்பரில் முழு இந்தியாவுக்கும் விஜயம் செய்த யப்பானிய வர்த்தகத் தூதுக் கோஷ்டியின் தலைவர் ஹொண்டா கம்பனி தலைவர் நொபுஹித்தோ மோட்டோ "உறுதியான ஆட்சி"யையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அதே வேளையில் மற்றோர் முதலாளி கூறியதாவது : "சில தடைகள் இன்னமும் இருந்து கொண்டுள்ளதால் இந்தியாவில் முதலீடுகள் ஆபத்தானவை" எனக் கணிப்பதாக. இந்தச் சகல நெருக்குவாரங்களும் குறைந்த செலவில் இலாபத்தையும் வளங்களையும் கொள்ளையடிக்க குறைந்த செலவுடன் கூடிய நிலைமையை உருவாக்க முயலும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் இருந்தும் அவற்றின் ஏஜன்டுகளிடம் இருந்துமே ஏற்பட்டது. கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் இந்தியா ஜெனீவாவில் கையொப்பம் இட்ட உலக வர்த்தக அமைப்பின்( ) உடன்படிக்கைக்கு இணங்க, 1999ல் இந்தியாவில் காப்புறுதி, வங்கி துறைகள் முழுமனே அனைத்துலக மூலதனத்துக்குத் திறந்து விடப்படவேண்டும்.

## பா.ஜ.க. தயார் நிலை

முன்னர் தேசியவாத கதைகளை வாந்தி எடுத்து வந்த பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரம் ஆரம்பித்ததுதான் தாமதம் தாம் வெளிநாட்டு மூலதனத்தின் கையாளாகத் தொழிற்படப் போவதை அப்பட்டமாக உத்தரவாதம் செய்து கொண்டது. இதன் மூலம் இந்திய முதலாளிகளதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் ஆதரவை வென்று கொள்ளும் அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியது. பெப்பிரவரி 9ம் திகதி புதுடில்லியில் நடந்த பத்திரிகையாளர்க கமாநாட்டில் பேசிய பாஜ.க.தலைவர் எல்.கே.அத்வானி பின்வருமாறு குறிப்பிட்டார்: "பா.ஜ.க. பொருளாதார சீர்திருத்தங்களை நிறுத்திவிடப் போவதில்லை. ஏதாவது செய்ய வேண்டுமாயின் அது இந்த வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தவே செய்யும்" என்றுள்ளார். நுகர்வு பண்ட உற்பத்தியில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டுக் கம்பனிகளை நாட்டில் இருந்து ஓட்டிக் கலைக்கப் போவதாக இன்றைய பாதுகாப்பு அமைச்சரான ஜோர்ஜ் பெர்டினண்ட்ஸ் அமைச்சரவை கயிறிழுப்புக்கள் இடம்பெற்ற வந்த சமயத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்த அறிக்கையை வாபஸ்பெறுமாறு அவரை பா.ஜ.க. கடுமையாக நிர்ப்பந்திப்பதாக அச்சஞ்சிகை குறிப்பிட்டிருந்தது.

ஆட்சிப்பீடம் ஏறும் வாய்ப்புக்கள் இருந்து வந்த ஒரு நிலையில் இக்கட்சி இன, மத, சாதி பிரிவினைகள் மூலம் ஆத்திரமூட்டல்களைத் தூண்டிவிட்டு வந்தது. இதன் மூலம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்குவதற்கான வலதுசாரி தாக்குதலை நடாத்த உள்ளது.

இத்தேர்தலின் மூலம் இந்தியாவில் வெளிப்பட்டுள்ள அரசியல் நிலைமை, தொழிலாளர், வறிய விவசாயிகள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர், புத்திஜீவிகளிடையே மிக முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளது. புதிய முன்நோக்கும் தலைமையும் இல்லாமல் இந்தப் பொதுமக்கள் எதிரில் தோன்றியுள்ள எந்த ஒரு ஆழமான சமூக, அரசியல் பிரச்சினைக்குமே தீர்வு கிடைக்குமா?

ஸ்டாலினிச சீ.பீ.ஐ.(எம்), சீ.பீ.ஐ., சீ.பீ.ஐ.(மார்க்சிச, லெனினிச) கட்சிகளும் பல்வேறு குட்டி முதலாளித்துவ கும்பல்களும் பொதுமக்களைத் திசைதிருப்பவும் அடக்கி வைக்கவும் , ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்களை பலிகொடுக்கவும் முதலாளித்துவ ஏஜன்டுகளாகச் செயற்படுகின்றன.

ஸ்டாலினிஸ்டுகள் இனவாத, மதவாதச் சக்திகள் ஆட்சிப்பீடம் ஏறாவண்ணம் தாம் தடுப்பதாகக் கூறிக் கொள்கின்றன. இங்ஙனம் கூறியபடி காங்கிரஸ் கட்சியினர் உட்பட்ட பல்வேறு முதலாளித்துவ கட்சிகளுடன் பாராளுமன்ற கூட்டுக்குள் நுழையும் தீர்மானத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். இது தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்திற்குக் குழிபறித்து, முதலாளி வர்க்கத் தாக்குதலுக்கு இட்டுச் செல்லும் ஒரு பொறிக்கிடங்காகும். தற்சமயம் இந்த ஸ்டாலினிஸ்டுகள் முதலாளித்துவக் கூட்டு மூலம் ஒழித்துக் கட்டிவிட முடியும் எனக் கூறிக்கொண்ட பா.ஜ.க.உட்பட்ட சக்திகள் புதுடில்லியின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுள்ளன. இது எந்த விதத்திலும் இந்திய வலதுசாரி கன்னை தொடர்பாகவும் ஏனைய முதலாளித்துவக் கட்சிகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு இடையே இருந்து வந்த ஆதரவு மேலோங்கிக் கொண்டுள்ளதைக் குறிக்காது. ஸ்டாலினிஸ்டுகளின் காட்டிக்கொடுப்புடன் குழம்பிப் போன சில குட்டி முதலாளித்து, மத்தயதர வர்க்க பகுதியினரின் தோள்களில் ஏறிக் கொள்ள முதலாளிகளுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதையே இது காட்டுகின்றது.

இந்திய முதலாளி வர்க்க ஆட்சியின் ஸ்திரமின்மையும் நெருக்கடியும் உலக யுத்த கால ஏகாதிபத்தியவாதிகளினால் உலக ரீதியில் சிருஷ்டிக்கப்பட்ட அரசியல், பொருளாதார இயந்திரத்தின் தகர்வினால் ஏற்பட்டவை. யுத்தம் நிறுத்தப்பட்டதும் இந்திய உப கண்டம் பூராவும் வெடித்தெழுந்து காணப்பட்ட பொதுஜனப் போராட்டங்களை நசுக்கிவிட பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் , ஆட்சியை 1947ல் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்திடம் மைமாற்றினர். ஒரு கோடி மக்களை மதவாத இரத்தக் களரி கொலைகளுக்கு கீழ்ப்படுத்துவதன் மூலம் இந்தியா-பாகிஸ்தான் என்ற இரண்டாக பிரித்துவிட பிரித்தானிய, இந்திய, பாகிஸ்தானிய முதலாளிகளால் செய்யப்பட்ட சதியைத் தொடர்ந்து இது இடம் பெற்றது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஸ்டாலினிஸ்டுகளுக்கு வாய்ப்பான முறையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்களியக்கத்துக்கு தோள்கொடுக்க இந்திய முதலாளிகளின் இந்திய தேசிய காங்கிரசினால் முடிந்தது.

கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்த முதலாளித்துவ வர்க்கமானது சோவியத் அதிகாரத்துவத்தின் தோளில் கைபோட்டுக் கொண்டு தேசியவாத வேலைத்திட்டங்களைக் கொண்டு நடாத்த ஏகாதிபத்தியவாதிகளுடன் பேரம்பேசுவதில் ஈடுபட்டிருந்தது. இந்திய முதலாளிகள் கொழுத்தாலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களது எந்த ஒரு சமூகப் பிரச்சினையுமே தீர்க்கப்படவில்லை. தமது வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தும் பொருட்டு , இந்த முதலாளிகள் இன, மத, சாதி பிளவுகளை தூண்டுவதன் மூலம் மக்களை அடக்கி வைத்திருப்பது தொடர்ந்ததைக் காணலாம்.

ஒரு புறத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு கூச்சல்களில் ஈடுபட்டனர். மறுபுறத்தில் சோவியத் அதிகாரத்துவத்தின் பக்கம் சாய்ந்து கொண்ட இந்திய காங்கிரஸ் கட்சி, முதலாளித்துவ ஆட்சியைப் பெரிதாகக் காட்டியது. சோவியத் ஸ்டாலினிஸ்டுகள், இந்தியா உட்பட உலகம் பூராவும் இருந்து வந்த ஸ்டாலினிஸ்டுகள் மட்டுமன்றி, நான்காம் அகிலத்தில் இருந்து விட்டோடிய பப்லோவாதிகளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஏமாற்றுவதற்கு இந்த முதலாளித்துவ ஆட்சியினை முற்போக்கானதென வர்ணித்தனர்.

ஏகாதிபத்திய உற்பத்தி பூகோளமயமாக்கத்துக்கு உட்பட்டதன் பின்னர் தமது இலாபப் பொதியைக் காக்கும் அமைப்பினைப் பேணுவதற்கான தாக்குதலில் இறங்கியதும் இந்தத் தேசிய முதலாளிகளது தேசியவாத வேலைத்திட்டம் குழிபறிந்து போயிற்று. இப்போது இந்த முதலாளிகள் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுடன் சேர்ந்து, சுரணடலைத் தொடரும் போட்டாபோட்டியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 50 ஆண்டுகளாக அவமானத்துக்கு உள்ளான இந்த இந்திய தேசிய காங்கிரஸ் இறுதியில் பொறிந்து வீழ்ந்தது, பூகோளமயமாக்க வேலைத்திட்டத்திற்கு முற்றாகத் தொடர்பு பூண்டு இயங்கிய காலகட்டத்திலேயே ஆகும். ஆளும் வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் தற்போது புதிய ஒரு ஏஜன்டு தேவைப்படுகின்றது. காங்கிரஸ் முதலாளிகள் எஞ்சியுள்ள பிரிவையும் கட்டிக்காக்கும் அவசியத்தை நிறைவேற்றி வைக்க ஆட்சிக்கு வரத் துடிக்கும் போது பா.ஜ.க. இந்து மதவெறி மூலம் உருவான அரசியல் குழப்பநிலையை பாவித்து ஆட்சிப்பீடம் ஏறப் போட்டியிட்டது. "தீவிர தேசியவாதிகள்" ஆகக் காட்டிக் கொண்ட பா.ஜ.க.முதலாளிகள் இப்போது ஏகாதிபத்தியவாதிகளின் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த பகிரங்கமாக வாக்குறுதி தந்து அரசாங்கம் அமைத்துக் கொண்டுள்ளனர். இது தேசியவாதம், இன்று தொழிலாளர், ஒடுக்கப்பட்டும் மக்களுக்கு எதிரான பாசிச வெறியாக மாறிக் கொண்டுள்ள விதம் மீண்டும் உறுதியாகி உள்ளதைக் காட்டுகின்றது.

## முன்நோக்கு

ஏகாதிபத்தியத்தினாலும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தினாலும் ஆழமாக்கப்படும் சமூகச் சிக்கல்களில் இருந்து தலையெடுக்க மக்களுக்கு இருந்து கொண்டுள்ள ஒரேயொரு முன்நோக்காக நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையிலான தொழிலாளர் வர்க்க முன்நோக்கே விளங்குகின்றது.

இந்தியா பூராவும் பெரும் சமூக சமத்துவமின்மை பரந்து பட்டுள்ளது. பெரும் செல்வந்தர்கள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் தரகு பெற்றுக் கொண்டும் சுரண்டலுக்கு கூட்டுச் சேர்ந்து கொண்டும் எழுச்சி கண்டு வருகின்றனர். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஒரு வேளை உணவுக்கு ஆலாய்ப் பறக்கும் நிலைக்கு இழுத்துத் தள்ளப்பட்டுள்ளனர். உலக ஜனத் தொகையில் ஏழில் ஒரு பங்கினரும் நூற்றுக்கு 14 சத வீதத்தினருமான இந்திய பொதுமக்களுக்கு இந்த சமூக சமத்துவமின்மை தரித்திர நிலைக்குள்ள தள்ளியுள்ளது. சமூக சமத்துவத்தின் அடிப்படையிலான நாகரீக வாழ்க்கைக்கு அவசியமான நிலைமைகளை ஸ்தாபிதம் செய்ய உற்பத்திச் சக்திகளின் உரிமையை முதலாளிகளின் கைகளில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தின் கைகளுக்கு கொணர்ந்து, பொதுமக்களின் அபிலாசைகளை இட்டுநிரப்புவதன் மூலம் பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். இலாபம் சுரண்டும் முதலாளிகளின் அவசியங்களுக்குள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள உற்பத்தி சக்திகளை பொதுமக்களின் அடிப்படை அவசியங்களை சிருஷ்டிக்க கட்டவிழ்த்து விட வேண்டும்.

இதற்கு தொழிலாளர் வர்க்கமானது ஏழை மக்களையும் , விவசாயிகளையும் இன, மத, சாதி அடிப்படையில் விடுதலை செய்து வைக்கும் தலைவனாக கிளர்ந்து எழுந்து, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியை தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தின் மூலம் -அதாவது இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினால் பதிலீடு செய்ய வேண்டும். இந்தியாவில் தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் தலைவனாக அந்தப் போராட்டத்தில் ஈடுபட ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றுபட்டாக வேண்டும். அதனை அனைத்துலக சோசலிசத்துக்கான நனவான போராட்டத்தின் ஒரு பாகமாக மட்டுமே நடாத்த முடியும். இன்று இந்த வேலைத் திட்டத்துக்காக இந்தியாவினுள் போராடி வருவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதியாக சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சோசலிச தொழிலாளர் கழகமேயாகும்.

இந்தியாவின் அரசியல் அபிவிருத்திகள் இலங்கைத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்துடன் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொண்டுள்ளது. கடந்த சில தினங்களாக பொதுத் தேர்தல் இடம்பெற்று வந்த ஒரு நிலையிலும் அதன் பின்னரும் இலங்கை முதலாளி வர்க்க அரசாங்கமும் முதலாளித்துவக் கட்சிகள், முதலாளிததுவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இதைக் சுட்டிக் காட்டிக் கொண்டன. தமது ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக இந்தியாவில் புதிதாக அமைக்கப்படும் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் அரசியல் முண்டுகோலையிட்டு இலங்கை முதலாளிகள் கணித்துக் கொண்டதை அதில் காண முடிந்தது. அது இலங்கை அரசியல் நிலையையிட்டு இந்திய முதலாளிகள் காட்டும் பிற்போக்கு அக்கறையைப் போன்றது. தமது இலாப அமைப்பைக் கட்டிக் காக்கும் பொருட்டு, ஏகாதிபத்தியவாதிகள் பூகோளமயமாக்கத்தின் மூலம் தூண்டிவிடும் தாக்குதல்கள் இலங்கை முதலாளி வர்க்கம் மூலம் நடைமுறைக்கு விடப்படும் நிலைமையினுள் இலங்கையிலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் தொழிலாளர்கள் முகம் கொடுத்திருப்பது ஒரே பொதுப் பிரச்சினைக்கேயாகும். இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தினதும் இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தினதும் போராட்டங்களை இணைப்பதற்காக இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி நடாத்தும் போராட்டமும், இந்தியாவினுள் சோசலிச தொழிலாளர் கழகத்துடன் சேர்ந்து புரட்சித் தலைமையை ஸ்தாபிதம் செய்வதற்காக நடாத்தும் போராட்டமும் இன்று பெரிதும் தீர்க்கமானதாகியுள்ளதற்குக் காரணம் இதுவே. இந்தியாவின் அரசியல் அபிவிருத்திகள் தொடர்பாக இந்த பரந்த பார்வையை செலுத்துமாறும் புரட்சிகர முன்நோக்கினை ஸ்தாபிதம் செய்யவும் தலைமையைக் கட்டி எழுப்பவும் சோசலிச சமத்துவக் கட்சி நடாத்தும் போராட்டத்துடன் இணையுமாறும் நாம் உங்களை வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகள்

**சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை**
**1998 மார்ச் 27**

பதின்மூன்று நாட்களாக ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் முன்னெடுத்த போராட்டம், ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களும் இந்நாட்டு முதலாளிகளும் யூ.என்.பி பொதுஜன முன்னணி அரசாங்கத்தைக் கொண்டு தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், ஜனநாயக உரிமைகளை ஒழித்துக்கட்டுவதற்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே மீண்டும் மீண்டும் தோன்றி வளர்ச்சி பெறப் போகும் போராட்டங்களின் புதிய கட்டத்தைக் குறித்து நிற்கின்றது. தோட்டத் தொழிலாளர் போராட்டம், வெகு விரைவில் வெடிக்கவுள்ள பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்களின் முன்னறிகுறியாகும்.

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் காட்டிக்கொடுப்புக்களை எல்லாம் தாண்டி, தமது உரிமைகளைக் காக்கப் போராட இருந்து கொண்டுள்ள வலிமையை இப்போராட்டத்தினுள் தொழிலாளர்கள் பிரத்தியட்சமாக்கினார்கள். வேலை நிறுத்தத்தை நிறுத்தி அரசாங்கத்துடனும் முதலாளிகளுடனும் சோந்துதாம் திணித்துக் கொண்ட ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டு, வேலைக்குத் திரும்புமாறு தொழிற்சங்க அதிகாரத்துவம் செய்த சிபார்சுகளை ஆரம்பத்தில் தொழிலாளர்கள் நிராகரித்தனர். ஆனால் தமது உரிமைகளை நசுக்கித் தள்ளிய முதலாளித்துவ எஜமானர்கள், அரசாங்கம், தொழிற்சங்க அதிகாரிகள் மீதான கோபம் கொதித்துக் கொண்டிருந்த போதிலும், இறுதியில் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிச் செல்ல நேரிட்டது. இது கசப்பான போதிலும் உண்மை இதுவே. அதற்குக் காரணம் என்ன? பதிலிறுக்க வேண்டிய கேள்வி இதுதான். கடந்து சென்ற சுமார் இரண்டு தசாப்த காலங்கள் கிட்டத்தட்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தினுள் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் அனைத்து போராட்டங்கள் தொடர்பாகவும் தலைநீட்டும் கேள்வி இதுவே.

தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தில் இருந்து படிப்பினை பெற்று, எதிர்காலத்துக்குத் தயாராகுவோம் என சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது.

பெப்பிரவரி 5ம் திகதி தொழிலாளர் போராட்டம் வெடித்தது, சம்பள கோரிக்கையை முன்வைத்தபடியாகும். சிறப்பாக மத்திய மலைநாட்டிலும், ஏனைய இடங்களிலும் பரந்து வாழும் ஆறு இலட்சத்துக்கு அதிகமான சிங்கள, தமிழ் தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு கிளர்ந்தது, தொழிற்சங்கத் தலைவர்களின் எதுவிதமான ஆயத்தங்களும் இல்லாத நிலையிலாகும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் தோட்டக் கம்பனிகளதும் தாக்குதல்களுக்கு எதிராக போராடும் அவசியத்தைத் தொழிலாளர்கள் உச்சத்தில் காட்டிக் கொண்டனர்.

போராட்டத்தினுள் சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் மேற்கொண்ட தலையீடுகளில் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் துரோகப் பாத்திரம் இல்லாது போயிருக்குமானால் நகர்ப்புறத் தொழிலாளர்கள், ஏழைப் பொதுஜனங்களுடன் முன்னணிக்கு வரும் நிலைமைகள் தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது என்பது தெளிவாகிறது. தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் செய்தது என்ன? தொழிலாளர்களை அரசியல் ரீதியிலும் வேலைத்திட்ட ரீதியிலும் நிராயுதபாணியாக்கி இறுதியில் தொழிலாளர்களின் முதுகில் கத்தியால் குத்தியதேயாகும்.

பெப்பிரவரி 13ம் திகதி அலரி மாளிகையில் அரசாங்கத்துடனும் தோட்டக் கம்பனிகளுடனும் ஒப்பந்தம் செய்து கொண்ட தலைவர்கள், சொற்ப சம்பள உயர்வுக்கு தொழிலாளர்களை கீழ்ப்படியச் செய்து, தொழிலாளர் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர். தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் காட்டிக் கொடுப்பை அடியோடு நிராகரித்த தொழிலாளர்கள், மேலும் மூன்று நாட்கள் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சித்தனர். தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் காட்டிக் கொடுப்பின் பேரில் கொதித்த ஆத்திரம், காட்டிக் கொடுப்பின் கடைகெட்ட பாத்திரத்தை இட்டு நிரப்பிய தொண்டமானின் கொடும்பாவியை இழுத்துச் சென்று அட்டன் நகரின் மத்தியில் வைத்துத் தீமூட்டியதன் பின்னரே தணிந்தது. தொழிலாளர்களிடம் திடசங்கற்பமும் போர்க்குணமும இருந்த போதிலும் மூன்று நாட்களுக்குப் பின்னர் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புமாறு அவர்கள் தள்ளப்பட்டனர். தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தில் சோசலிச சமத்துக் கட்சி தனது முன்னோக்குப் பத்திரத்தினுள் வலியுறுத்திய பின்வரும் விடயம் மீண்டும் ஒரு தடவை தீர்க்கமான முறையில் தலைநீட்டுகின்றது: "பொதுமக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளும் சரி அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் சரி முன்னோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது."

தோட்டத் தொழிலாளர்களுக்கும் சரி, ஏனைய தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எந்த ஒரு பகுதியினருக்கும் சரி தலைமை, முன்னோக்கு பற்றிய பிரச்சினையை தீர்த்துக் கொள்ளாமல் முதலாளித்துவ தாக்குதலுக்கு எதிராக வெற்றிகரமான முறையில் ஒரு போராட்டத்தை ஒழுங்கு செய்ய முடியாது.

## தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்து க்கு தள்ளப்பட்டது என்?

சம்பளக் கோரிக்கையை முன்னணியில் கொண்டிருந்தாலும் தோட்டத் தொழிலாளர் போராட்டம் வெறும் சம்பளப் போராட்டமாக விளங்கவில்லை. சம்பளப் போராட்ட மட்டத்துக்கு அது குழிபறிக்கப்பட்டது தொழிற்சங்க அதிகாரத்துவங்களாலாகும். தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் வெடித்தது, கடந்த இரண்டு தசாப்தங்களினுள் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களும் இந்நாட்டு முதலாளிகளும் யூ.என்.பி. பொதுஜன முன்னணி அரசாங்கங்களும் தமது தலையில் கட்டி அடித்துள்ள வேலையின்மை, வறுமை, சமூக தரித்திர நிலை, ஜனநாயக உரிமை மறுப்புக்களுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்குள் குமுறிக் கொண்டுள்ள கிளர்ச்சியின் ஒரு பாகமாகவாகும்.




தோட்ட பெண் தொழிலாளர்கள்

வேலையின்மை, வறுமை, பட்டினியினதும் வீடு, குடிநீர், உட்பட்ட அடிப்படை வசதிகள் இல்லாமையாலும் ஜனநாயக உரிமைகளை நசுக்கி வைத்ததன் மூலமும் தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரமாண்டமான பிரச்சினைகள் வெடித்தன. தோட்டத் தொழிலாளர்களிடையே பாரதூரமான கிளர்ச்சிகள் வளர்ச்சி கண்டன. இவை எல்லாம் அவர்களைப் பேரழிவுக்குள் தள்ளிய இந்த சமூக நிலைமைக்கு எதிராகவே. தொழிற்சங்கங்கள் பெப்பிரவரி 5ம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்காவிட்டாலும் தொழிலாளர்களின் போராட்டம் வெடித்துப் பரவும் அளவுக்கு நிலைமை உருவாகி இருந்தது. தொழிற்சங்கத் தலைவர்கள் செய்தது, தொழிலாளர்களின் இந்தக் கிளர்ச்சியின் மீது பாய்ந்து அவர்களின் கொதிக்கும் பிரச்சினைகளை கீழ்படுத்த தொழிலாளர்களின் போராட்டத்தை ஒரு வெறும் சம்பளப் போராட்டத்தினுள் சிறைப் பிடித்ததும் இறுதியில் சொற்ப சம்பள உயர்வுக்கு கீழ்ப்படுத்தி, கேவலமான முறையில் காட்டிக் கொடுத்ததுமேயாகும்.

## தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் சமூக நிலைமைகள்

1994ன் இறுதியில் மனித அபிவிருத்தியின், ஆசிய ஒத்துழைப்பு அமைப்பின் அறிக்கையின்படி மாதத்துக்கு ரூபா.3000 க்கு அதிகமான வருமானம் பெறுவோர் தோட்டத் தொழிலாளர்களில் நூற்றுக்கு 5 வீதத்தினர் மட்டுமே. ரூபா.1500 2000க்கும் இடையே வருமானம் பெறும் எண்ணிக்கை நூற்றுக்கு 42 வீதமாக இருப்பதோடு ரூபா.1000 1500க்கும் இடையே வருமானம் பெறும் எண்ணிக்கை நூற்றுக்கு 30 வீதமாகும். நூற்றுக்கு 9 வீதமானோருக்குக் கிடைப்பது ரூபா.500 1000க்கும் இடையிலான மாத வருமானமாகும். தொழிலாளர்களுக்கு கிடைக்கும் இந்தப் பணம் முழுமனே செலவாகுவது உணவுக்கு. அதுவும் ஓரளவுக்கு வயிற்றுப் பசியை தணித்துக் கொள்வதற்கே தவிர போசாக்கு நிறைந்த உணவை பெற்றுக் கொள்வதற்காக அல்ல. மேலே குறிப்பிட்ட அறிக்கையின்படி போஷாக்கு நிறைந்த இறைச்சி, மீன் அல்லது முட்டை போன்றவற்றை நுகரமுடியாத தோட்ட மக்கள் நூற்றுக்கு 41 வீதம். தோட்ட சனத்தொகையில் நூற்றுக்கு 46 வீதத்தினர் படுமோசமான போஷாக்கின்மைக்கு பலியாகிப் போயுள்ளனர். தோட்டத் துறையில் ஒழுங்குமுறையான கல்வியோ அல்லது சுகாதார வசதிகளோ கிடையாது. 1994ல் தோட்டத் துறையில் பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 45 வீதமாகும். ஆண்டு 1ல் இருந்து ஆண்டு 5 வரை படித்தவர்கள் எண்ணிக்கை நூற்றுக்கு 13 வீதம். ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 8 வரை படித்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 19 வீதமாக விளங்கியது. க.பொ.த.(சாதாரணம்) வரை படித்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 9 வீதமாக இருந்ததோடு உயர்தரம் வரை கல்வி கற்றோர் நூற்றுக்கு 1 வீதத்தினர் மட்டுமே.

நாட்டின் மத்தியில் தோட்டத் துறையில் வாழும் முழுக் குடும்பங்களின் எண்ணிக்கை 4 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் 98 வீதமானவர்கள் வசிப்பது, பல தசாப்தங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட 16 X 8 அல்லது 12 X 16 லைன் அறைகளிலாகும். சமீபகால புள்ளி விபரங்களின்படி தோட்டத் துறையில் இப்போது இருந்து கொண்டுள்ள முழு வசிப்பிடங்களின் எண்ணிக்கை வருமாறு:

| | |
|---|---|
| ஒற்றை லைன் அறைகள்........ | 104556 |
| இரட்டை லைன் அறைகள்...... | 108825 |
| தற்காலிக குடிசைகள்............. | 22410 |
| குடிசைகள்............................ | 30600 |
| தற்காலிக வீடுகள்.................. | 35100 |

இவற்றில் ஓரளவுக்கேனும் மனித ஜீவியத்துக்கு ஏற்றவை எனக் கூறக் கூடியது 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இரட்டை வீடுகளாகும். சிங்களக் கிராமங்களில் இருந்துவரும் சுமார் 35100 குடும்பங்கள் வாழ்வது தோட்டங்களுக்கு அண்மித்தாக உள்ள கீழ் டிவிசன்களில் அமைத்துக் கொண்ட வீடுகளிலாகும்.

தோட்டங்களில் தொழிலாளர்களும் இளைஞர்களும முகம் கொடுக்கும் பிரமாண்டமான பிரச்சினை வேலையின்மை. தோட்டத் தனியார்மயத்துக்கு முன்பு இளைஞர்களுக்கு தோட்டங்களில் தொழில்



சோ.ச.க. பண்டாரவளை அங்கத்தவர் உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க கடைப்பிடிக்கப்பட்டு வந்த விதிமுறை நீக்கப்பட்டதோடு தோட்டத் துறையில் வேலையின்மை இரண்டு மடங்காகியது. தோட்டங்களுக்கு வெளியே போய் ஏதேனும் ஒரு வேலையைச் செய்து உயிரைப் பிடித்துக் கொள்ள முயற்சி செய்யும் வேலையற்ற தோட்டத் தொழிலாளர் இளைஞர் யுவதிகள் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் கடைப்பிடிக்கும் இனவாத அடக்குமுறைகளுக்கும் வேட்டைக்கும் இடைவிடாமல் பலியாகி வருகின்றனர்.

1949ல் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை ஒழிக்கப்பட்டது. 1964ல் சிரிமா சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் இவர்களில்ஒரு பகுதியினரை இந்தியாவுக்கு தள்ளி, ஒரு பகுதியினருக்கு "குடியுரிமை" வழங்கினாலும் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் அவர்களை இரண்டாம் தர பிரஜைகளாகவே கணித்தது. இன்னமும் 160,000 தொழிலாளர்களுக்கு பேரளவிலான. குடியுரிமை தன்னும் வழங்கப்படவில்லை.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ சுரண்டலின் ஒரு பாகமாக ஒரு நூற்றாண்டுக்கும் அதிக காலத்துக்கு முன்னர், உழைப்பு அடிமைகளாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொணரப்பட்ட இந்தத் தொழிலாளர் நான்கு, ஐந்து தலைமுறையின் பின்னர், இன்னும் முகம் கொடுக்கும் இந்தத் துன்பகரமான நிலைமையை அமுக்கி வைக்கும் முதலாளிகளும் இனவாதிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏனைய தொழிலாளர்களைக் காட்டிலும் வசதி வாய்ப்புக்கள் இருந்து கொண்டுள்ளது என்ற நச்சுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## பொது ஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ்

பொதுஜன முன்னணி அரசாங்கம் நலன்புரி சேவைகளை மேலும் மேலும் வெட்டியதாலும் விலைவாசிகளை உயர்த்தியதாலும் தோட்டத் தொழிலாளர்கள் தாச்சிக்குள் இருந்து அடுப்புக்குள் தள்ளப்பட்டனர்.

பாணும் பாண் மாவினால் தயாரிக்கப்பட்ட ரொட்டியும் தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய உணவாகும். ஒரு கிழமைக்கு தனியாளின் பொது பாண் மா நுகர்ச்சி 5 1/2 கிலோ எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பாண் மாவு விலையை கிலோ ரூபா.7.50ல் இருந்து ரூபா.20 ஆக உயர்த்தியதன் மூலம் தொழிலாளர்களின் பாண் மாவுக்கான செலவு மாதாந்தம் ரூபா.90ஆல் அதிகரித்தது.

1997 நவம்பர் தொடக்கம் 1998 ஜனவரி வரையிலான மூன்று மாதங்களுள் மட்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 205 அலகுகளால் ஏறியுள்ளது. 1997 ஜனவரியில் 2106 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1998 ஜனவரியில் 2311 ஆகியது.பாண், மாவு, அரிசி, கருவாடு, பருப்பு முதலான அத்தியாவசியப் பொருட்களின் விலை , சாதாரண தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இத்தகைய ஒரு நிலையில் தொழிற்சங்க அதிகாரத்துவங்களினால் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள ரூபா.95 நாட் சம்பளம், பாய்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு உயர்வை ஈடுசெய்ய மட்டுமல்லாது. முன்னர் போல் உயிரைப் பிடித்து வைக்கவும் கூடப் போதியது அல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்துக்கு குறைவாகக் கிடைக்கும் வேலைநாளின்படி மாத முடிவில் கைக்கு கிடைப்பது ரூபா.1400-ரூபா.1500 சம்பளமேயாகும். உணவு, உடை, மருந்து , கல்வி செலவுகளை இப்பணத்தைக் கொண்டு ஈடுசெய்வது எப்படி? தொழிலாளர்களைக் கொண்டு போய் தாக்கினாலும் பரவாயில்லை என முடிவு செய்து கொண்டுள்ள தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தோட்டக் கம்பனிகளுடன் சம்பள உடன்படிக்கையைச் செய்து கொண்டது, முதலாளிகளின் இலாப மூட்டையை பாதுகாப்பதற்காகவேயாகும்.

## தொழிற்சங்க அதிகாரத்து வம்

சம்பள கோரிக்கைக்கு முடிச்சுப் போட்டது தொழிற்சங்க அதிகாரத்துவங்களே. சம்பள கோரிக்கை போதுமானதா எனத் அவர்கள் தொழிலாளர்களிடம் கேட்டதும் கிடையாது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் யூ.என்.பி.தொழிற்சங்கமான லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் முன்வைத்தது ரூபா.115 நாட் சம்பளம் அல்லது ரூபா.32 சம்பள உயர்வு. செங்கொடிச் சங்கம், ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், என்.யூ.டபிள்யூ., மலையக மக்கள் முன்னணி ஆகிய அமைப்புக்களைக் கொண்ட தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் கோரிக்கை ரூபா.125 நாட் சம்பளம் அல்லது ரூபா.42 சம்பள உயர்வு. தோட்டச் சொந்தக்காரர்கள் சீறிப்பாயும் போது இந்தக் கோரிக்கைகளையும் வெட்டிக் கொட்டிய தொழிற்சங்கத் தலைவர்கள், ரூபா.105 நாட் சம்பள கோரிக்கைக்கு குழிபறிந்து போயினர்.

இப்போது இந்த அதிகாரத்துவங்கள் அதில் இருந்து மேலும் ரூபா.10 வெட்டிக் கொத்தி ரூபா.95 சம்பளத்துக்கு இணங்கியுள்ளனர். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் தேயிலை விலை ஏற்றங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட ரூபா.6 போணஸ் இத்துடன் சேர்க்கப்படும். இறப்பர், தெங்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு அவற்றின் உற்பத்தியும் விலையும் வீழ்ச்சி கண்டதால் இந்தப் போணஸ் கிடையாது. தொழிலாளர்களை இரண்டாகப் பிரித்து, சம்பள உடன்படிக்கை திணிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுதான்.

1992ல் இருந்து தோட்டத் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரித்து வந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு வழங்கி வந்த 04 சதம் அலவன்சை நீக்கிவிட தோட்டக் கம்பனிகளுடனும் அரசாங்கத்துடனும் சேர்ந்து உடன்படிக்கை செய்து கொண்டனர்.அந்த வெட்டு இம்முறையும் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இந்தச் சொற்ப வாழ்க்கைச் செலவுப் புள்ளி அலவன்சு தன்னும் இருந்திருக்குமானால் தொழிலாளர்களின் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் புள்ளி அலவன்சுடன் இந்த பெப்பிரவரி மாதத்தில் ரூபா.109 ஆகியிருக்க முடியும். உண்மையில் ரூபா.95 சம்பளத்தையும் ரூபா.6 போணசையும் தொழிலாளர்கள் மீது திணிப்பதன் மூலம் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை ரூபா. 8ஆலும் இறப்பர், தெங்கு தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 14ரூபாவினாலும் வெட்டித்தள்ள முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அலவன்சை அகற்றி தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொண்டுள்ளது என்ன? மலேசியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நடைமுறைக்கிடப்படும் தோட்டத்துறை கொடுப்பனவு முறையை இலங்கையினுள்ளும் அமுல் செய்வதேயாகும். இதன்படி தொழிலாளர்களின் சம்பளத்தை தீர்மானம் செய்வது அவனின் வாழ்க்கையை நடாத்துவதற்கு அவசியமான குறைந்தபட்ச செலவும் அல்ல. முதலாளி அவசியெமனத் தீர்மானம் செய்யும் ஏதேனும் ஒரு இலாப மட்டத்தைவிட கூடுதலான இலாபத்தை வழங்குவது வர்த்தக நிலையத்தில் முதலாளியின் உற்பத்திகளுக்கு உயர்ந்த விலை கிடைக்கின்றதா அல்லது இல்லையா என்பதைக் கொண்டாகும். ஒன்றரை வருடங்களுக்கு தொழிலாளர்களின் சம்பளம் பற்றி வாய்திறக்க மாட்டோம் எனத் தொழிற்சங்க அதிகாரிகள் கம்பனி முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

## அனைத்து லக முதலாளித்து வம் தூண்டும் தாக்குதல்

இலங்கையில் முதலாளி வர்க்கமும் அதன் பொதுஜன முன்னணி அரசாங்கம் ,யூ.என்.பி.உட்பட சகல முதலாளித்துவ கட்சிகளும் இன்று ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், மத்திய வங்கி தூண்டிவிட்டுள்ள ஏகாதிபத்திய முதலாளித்துவ இலாப வெறி அவசியங்களுடன் மாட்டிக் கொண்டுள்ளனர். தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் கூட இன்று

(18ம் பக்கம் பார்க்க)

# தோட்டத் தொழிற்சங்கங்கள் தொடர்பான தொழிலாளர் கொதிப்பு வெடிக்கின்றது

தோட்டத் தொழிற்சங்கங்கள் சம்பளப் போராட்டத்தை காட்டிக் கொடுத்ததையிட்டு, தோட்டத் தொழிலாளர்களிடையே ஆத்திரம் வெடித்துக் கொண்டுள்ளது. இதனால் முன்னர் ரூபா.95 சம்பளத்துக்கும் ரூபா.6 போனசுக்கும் உடன்பட்ட இலங்கை தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமியும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பீ.சந்திரசேகரனும் ஒரு குத்துக் கரணத்தில் இறங்கியுள்ளனர். ஏனைய தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் தொழிலாளர்களுக்கு ரூபா.105 நாட் சம்பளமாக வழங்க வேண்டும் என தோட்டக் கம்பனிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.இவர்களின் நிச நோக்கம் என்ன?வேலை நிறுத்தம் காட்டிக் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்களிடையே வெடித்த கொதிப்பையும் வெறுப்பையும் எப்படியேனும் அடித்துத் தள்ளி மீண்டும் இந்த துரோகத் தலைவர்களின் பிடியைத் தொழிலாளர்களின் மீது திணிப்பதேயாகும்.

கடந்த சில தினங்களாக சோசலிச சமத்துவக் கட்சி பல தோட்டங்களிலும் தொழிலாளர்களிடையே தலையிட்டு அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபட்டது. அங்கு எமது தோழர்களுடன் பேசிய சகல தொழிலாளர்களும் தொழிற்சங்கங்கள் இழைத்த காட்டிக்கொடுப்பை ஆத்திரத்துடன் கண்டனம் செய்தனர். சில தொழிலாளர்களின் கருத்துக்களை நாம் தொழிலாளர் பாதையில் பிரசுரிக்கின்றோம்:

**பீ.கிருஷ்ணவேல், சலங்கந்த தோட்டம்**

தொழிலாளர்கள் போராடியது ரூபா.105 சம்பளக் கோரிக்கைக்கு. ஆனால் இப்போது அவர்கள் ரூபா.95 நாட் சம்பளத்துக்கு வேலைக்கு செல்ல நேரிட்டுள்ளது. தொழிலாளிக்கு ஒரு நாளைச் செலவுக்கு ரூபா.150 வேண்டியுள்ளது. இப்போது இந்த அற்ப சம்பளம் தின்று , குடிக்க , உடுக்க எப்படிப் போதும்?

கம்பனிகள் தமது இலாபத்தைக் குறைத்துக் கொள்ளத் தயார் இல்லாததால் சம்பளத்தை கூட்டப்போவதில்லை. தொழிற்சங்கங்கள் தொழிலாளர் போராட்டத்தை இந்தக் கம்பனிகளுடன் சேர்ந்தே காட்டிக் கொடுத்துள்ளன. இலாபத்தை கறந்து தரும் மனித இயந்திரம் சம்பந்தமாக அவர்களுக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது.

வேலைநிறுத்தம் நடைபெறும் காலங்களில் மூன்று கிழமைகளுக்கு தேவையான தேயிலை இருப்பதாக பீ.பீ.சி.நிருபர்களுக்கு கம்பனிக்காரர்கள் கூறியிருந்தார்கள். போராட்டம் தொடருமானால் கம்பனி நெருக்கடிக்குள் தள்ளப்படும். இன்று உலக நிலைமை இதுதான். கென்யாவில் தொழிலாளர்கள் சம்பளம் அதிகரிக்குமாறு கேட்டு போராடுவதாக தெரியவருகின்றது.

தொண்டமானின் அறிக்கையின் பேரில் தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல தயார் ஆகவில்லை. ஆனால் தொழிலாளர்களுக்கு செய்வதற்கு வேறு இருக்கவில்லை. தொழிலாளர்கள் பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இருந்தனர். ஆனால் தற்போது தோட்டத் துறையில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் வேறுபட்ட நிலைமை இருந்து கொண்டுள்ளது. வென்சர் தோட்டத்தில் "தொழிற்சங்கங்கள் ஒழிக" என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

**ஆறுமுகம் தியாகராஜா, பொகவந்தலாவை தோட்டம்**

"தொண்டமான் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள், எம்.பீ.க்கள், அமைச்சர்கள் ஆகுவது கம்பனிகளுக்கும் பெரும் பெரும் இயக்கங்களுக்கும் வாய்ப்பான நிலைமையை உருவாக்கி கொடுப்பதற்கே. கடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வியில் இருந்து தலையெடுக்க இம்முறை சம்பளப் போராட்டத்தில் முயற்சித்தார்கள். ஆனால் காட்டிக் கொடுப்பினால் அது இப்போது வங்குரோத்தாகிவிட்டது. இந்தத் தலைவர்கள் அங்கு அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றார்கள். இங்கே மலையக இளைஞர்களை கைது செய்ய வேண்டாம் என்று மறியல் செய்கின்றனர்."

**யூ.சுப்பையா, பொகவந்தலாவை**

நீண்ட காலமாக இந்தத் தலைவர்களில் நம்பிக்கை வைத்து ஏமாந்தது போதும். தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவர் பணம் கழிக்க வேண்டாம் என நாம் கடிதம் எழுதினோம். 10நாள் வேலைநிறுத்தத்தினால் எமக்கு ரூபா.1000 நஷ்டம். தொழிற்சங்கங்களைப் பற்றிக் கொண்டிருந்த கோபத்தினால் தொழிலாளர்கள் தொண்டமானின் கொடும்பாவியை எரித்தனர். தொண்டமான் சொன்னதும் அவர்கள் வேலைக்கு போய்விடுவார்கள் என நினைத்தார். ஆனால் நாம் எமது எதிர்ப்பைக் காட்ட வேலைக்கு போகவில்லை. எமது பிரச்சாரம் தொடர்ந்து வரும் நிலையில் சந்திரசேகரன் விறைத்துப் போய்க் கிடந்தார். "திங்கட்கிழமை வரை வேலைக்கு செல்லாது , பிறகு வேலைக்கு போங்கள். நாம் கூட்டுக் கமிட்டியில் பேசுகின்றோம் என்றார். ஆனால் செய்தது எதுவும் கிடையாது. நாம் இந்த சங்கங்களில் நீண்ட காலமாக இணைந்து கிடந்ததால் தான் அவை இந்த அதிகாரத்தை காட்டுகின்றன. எமக்கு இந்த தொழிற்சங்கங்களால் பலன் கிடையாது."

தொழிலாளர்கள் கோபாவேசம் கொண்டுள்ளனர். தொழிலாளர்களின் இந்த அறிக்கைகள் இந்த தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாளர்கள் மீது கொண்டிருந்த பிடிக் காலகட்டம் கடந்து விட்டதை காட்டுகின்றது. ஆனால் தொழிலாளர்களுக்கு மாற்று அரசியல் வேலைத் திட்டத்தினதும் அமைப்பினதும் அவசியம் பெரிதும் தென்படுகின்றது. தொழிலாளர்களுக்கு இந்த வேலைத்திட்டத்தையும் அமைப்பையும் வழங்க சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

## விஜே டயஸ்

### பாகம்–10

தமிழ் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் பொருட்டு பிரிகேடியர் வீரதுங்கவின் இராணுவ நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தைக் கொணர்ந்த ஜயவர்தன அரசாங்கம், நாட்டு மக்கள் சகலரையும் வேட்டையாடும் பொருட்டு 1979 ஜூலை 19ம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தை பாராளுமன்றத்திற்குக் கொணர்ந்தது. அன்றைய தினம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி முதலான முதலாளித்துவக் கட்சிகளுக்குக் கடிதம் வரைந்த ஜனாதிபதி ஜயவர்தன, தமிழ் மக்களின் குறைகளை ஆராய ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்க ஆதரவு கோரினார்.

ஜயவர்தனாவின் மோசடி யோசனையை சி.ல.சு.க. மௌனத்தின் மூலம் அங்கீகரித்த அதே வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்தது.

இதே வேளையில் யூ.என்.பி.அரசாங்கத்தின் மிலேச்ச நோக்கங்களை மூடிமறைக்கும் பொருட்டு பிரதமர் பிரேமதாசவுடன் சேர்ந்து கூட்டறிக்கை விடவும் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வந்தது. பிரேமதாசவினதும் அமிர்தலிங்கத்தினதும் கையொப்பங்களைக் கொண்ட இந்த கூட்டறிக்கை, பின்வரும் வாக்கியத்துடன் நிறைவுபெறுகின்றது: "நாகரீகமான மக்கள் என்ற முறையில் நாம் எமது பொதுப் பிரச்சினைகளை சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்ளவும் எமது மாபெரும் மதங்களின் பாரம்பரியங்களுக்கு இணங்கவும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் வெளியுலகுக்கு காட்டவும் சக்தி உள்ளது."

இதில் இருந்து ஒரு சில நாட்களுக்குள் 1979 ஜூலை 29ம் திகதி நச்சுத்தனமான 31 சரத்துக்களைக் கொண்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி செய்தது என்ன? கோழைத்தனமான முறையில் பாராளுமன்றத்தை தவிர்த்துக் கொண்டதே தவிர அதற்கு எதிர்ப்புக் காட்ட முன்வரவில்லை.

தமிழ் மக்களின் பரந்த தரப்பினரின் கடும் எதிர்ப்பு இருந்து வந்த ஒரு நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, யூ.என்.பி. அரசாங்கத்தின் ஒடுக்குமுறை வேலைத் திட்டங்களுடன் ஒத்துழைத்தமை தற்செயலானது அல்ல. தமிழ் முதலாளிகளின் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி கவனத்தில் கொண்டது தமிழ் பொதுமக்களின் மீது திணிக்கப்பட்ட கொலைத் தாக்குதலைப் பற்றி அல்ல. சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து முதலாளி வர்க்க ஆட்சிக்கு அச்சமயத்தில் தொடுக்கப்பட்ட அச்சுறுத்தலையேயாகும். பேசும் மொழி வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் முதலாளித்துவ ஆட்சியைக் கட்டிக்காக்க அரசாங்கத்தின் உதவிக்கு தாம் அழைக்கப்பட்டுள்ளதையும் அதை இட்டு நிரப்புவது தமது கடமை எனவும் அவர்கள் புரிந்து கொண்டிருந்தனர். இத்தருணத்தில் யூ.என்.பி.அரசாங்கம் அரச பயங்கரவாதத்தை பாவித்து கொடூரமான முறையில் நசுக்கி வந்த தமிழ் மக்களின் ஒரு சில ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்ததும் காத்ததும் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தின் சக்திமூலமாகவை என்பதைத் தரிசிக்கவும் அது அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ வர்க்கத் தன்மை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இடமளிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய எஞ்சியுள்ள தலைவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்து நடாத்தி வரும் மோசடி கொடுக்கல்வாங்கல்களின் பிற்போக்கு விளைவுகள் எத்தகையது என்பதை புரிந்து கொள்ளாத குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் இந்த வரலாற்று பெறுபேறுகளை அறிந்ததும் கிடையாது. அதில் இருந்து பாடம் படித்ததும் கிடையாது என்பது தெளிவு. அது அவர்களும் முதலாளித்துவக் கட்சிகளைப் போலவே தொழிலாளர் வர்க்கத்தையும் பெரும் துயரத்துள் தள்ளப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றியும் வேறுபட்ட நிலை இல்லாத நிலையிலாகும்.

யூ.என்.பி.அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து "திறந்த பொருளாதார" கொள்கைகளின் கீழ் வாழ்க்கை நிலைமைகளை தவிடு பொடியாக்குவதில் இறங்கியது. இதற்கு முகம் கொடுத்த பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர்களும் மற்றும் தொழிலாளர்களும் 1979 நடுப்பகுதியில் இருந்து போராடும் அவசியத்தைக் கொண்டிருந்தனர். முதலாளித்துவ் சி.ல.சு.க. மட்டும் அல்லாமல் சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட், நவசமசமாஜக் கட்சிகளும் இ.தொ.கா.மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் தொழிலாளர் வர்க்கத்தின் அவசியங்களுக்கு புறமுதுகு காட்டி வந்தனர். அத்தோடு தகர்க்க முடியாத சக்தி என அவர்கள் கருதிக் கொண்டிருந்த யூ.என்.பி.அரசாங்கத்துடன் அணிதிரண்டு கொண்டனர். 1976ல் கூட்டரசாங்க அரசியலுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த தொழிலாளர்களிடம் இருந்து முதலாளி வர்க்க அரசியலுக்கு எதிராகத் தோன்றக் கூடிய அச்சுறுத்தலை பற்றிக் கணக்குப் போட்டனர். அதனால் இனவாத பிளவுகளைப் போலவே ஒடுக்குமுறையின் ஆயுதமும் தூக்கிய படி வேலையில் இறங்கிய யூ.என்.பி.அரசாங்கம், தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் இருந்துவந்த துரோகத் தலைவர்களிலேயே தங்கி இருந்தது.

## 1980 ஜூலை வேலை நிறுத்தம்

ஆனால் வர்க்கப் போராட்டத்தின் புறநிலை விதிகள், அதிகாரத்துவத்தின் ஆளுமையைக் காட்டிலும் பலம் வாய்ந்தது என லியொன் ட்றொட்ஸ்கி சுட்டிக்காட்டியதை மீண்டும் வலியுறுத்தும் விதத்தில் அதிகாரத்துவங்களின் கால்விலங்குகளை உடைத்துக் கொண்டு தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டம், 1980 ஜூலையில் அரைகுறை பொது வேலைநிறுத்தமாக வெடித்தது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இயற்றியதன் மூலம் மிலேச்ச ரீதியில் தமது ஒடுக்குமுறை விலங்குகளை மாட்டிக் கொண்டு வந்த அரசாங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் எதிரில் தலையெடுக்கும் வகையில் அவசரகாலச் சட்டத்தை 1979 டிசம்பரில் காலவதியாகிப் போக இடமளித்தது. எனினும் அந்த தமிழ் முதலாளித்துவக் கட்சியின் எதிர்ப்பு இல்லாமையே தொழிலாளர் போராட்டத்துக்கு எதிரான அவசரகாலச் சட்டத்தை மீண்டும் பிறப்பிக்கவும் அமுல் செய்யவும் யூ.என்.பி.அரசாங்கத்துக்கு 1980 ஜூலையில் வாய்ப்புக் கிடைத்தது.

தொழிலாளர் அமைப்புக்களான தொழிற்சங்க அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. தொழிலாளர் போராளிகள் கைது செய்யப்பட்டனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் அவசரகால சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவை பிரகடனம் செய்யப்பட்டு, தொழில்களில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

வர்க்கப் போராட்ட வரலாற்றில் இவ்வளவு மோசமான தோல்வியை இந்நாட்டின் தொழிலாளர்கள் இதுகால வரையும் சந்தித்தது கிடையாது. 1977ல் யூ.என்.பி.ஆட்சிக்கு வந்ததைப் போலவே இந்தப் போராட்டத்தின் தோல்வி சம்பந்தமாகவும் முக்கிய பொறுப்பு, கூட்டரசாங்க அரசியலின் துரோகத்துக்கே செல்கின்றது. தொழிலாளர் வர்க்கம் போராட்டத்துக்கு அவசியமான முன்நோக்கினாலும் தலைமையினாலும் ஆயுதபாணியாகி இருந்திராததோடு மட்டும் அல்லாது அது சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களினால் விதைக்கப்பட்ட அரசியல் குழப்பநிலையினுள்ளும் மூழ்கி இருந்தது.

1970-77 கூட்டரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, யூ.என்.பி.ஆட்சிக் காலத்தில் உக்கிரமாக்கப்பட்ட தமிழ் மக்கள் எதிர்ப்பு இனவாதம் அந்த அரசியல் குழப்பத்தின் முக்கிய ஊற்றுவாய் ஆகியது. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை கட்டிக் காக்கும் பொருட்டு கிளர்ந்து எழுந்து இராத வரையில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்ட பலம் பலவீனம் கண்டது. பின்தங்கிய நாடுகளில் தீர்வு காணப்படாத ஜனநாயக பணிகளைத் தீர்த்து வைக்கும் பணியை தம்மிடம் பொறுப்பேற்றுக் கொண்டு, பொதுமக்களின் தலைவனாக தொழிலாளர் வர்க்கம் கிளர்ந்து எழாத வரையில் தொழிலாளர்களால் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வெற்றி கொள்ள இந்தச் சகாப்தத்தில் இடம் கிடைக்காது. தொழிலாளர் வர்க்கத்தினால் வழங்கப்பட வேண்டிய தலைமையில் இருந்து தனிமைப்படுத்தப்படும் குட்டி முதலாளித்துவ ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களின் ஆதரவு தொழிலாளர் வர்க்கத்துக்கு அதனது போராட்டத்தில் கிடைக்காது போவது மட்டும் அல்லாது இந்த மக்கள் குழுக்கள் பல்வேறு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தலைமைகளின் கீழ் தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துக்கு எதிராக ஈடுபடுத்தவும் அதன் மூலம் வழிபிறக்கின்றது. 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் அப்பட்டமாக கருங்காலி வேலையில் யூ.என்.பி.க்கு ஜே.வீ.பி. ஆற்றிய பாத்திரம் இதை நன்கு தெளிவு படுத்தியது.

தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான இந்த புரட்சிகர முன்னோக்கு நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. நான்காம் அகிலம் முன்வைப்பதாகும். இந்தப் பணிக்கு அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே தோள் கொடுத்தது. அதனால் தயார் செய்யப்பட்ட வேலைத்திட்டம் விவசாயிகளதும் இளைஞர்களதும் பிரச்சினைகளுக்கும் அவ்வாறே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தொழிலாளர் வர்க்கத் தீர்வை முன்வைத்தது.

கடைகெட்ட தலைவர்களினால் பலவீனமாக்கப்பட்டு, குழப்பியடிக்கப்பட்டுக் கிடந்த போதிலும் பொதுமக்களுக்கு ஒரு மாற்று புரட்சிகர வேலைத்திட்டத்தின் பேரில் இருந்து வந்த பாரிய அவசியத்தினை புரிந்து கொண்டு போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1980க்கு முற்பட்ட காலத்தில் தொழிலாளர் வர்க்கத்திடையேயும் அவ்வாறே ஒடுக்கப்படும் கிராமப்புற மக்களிடையேயும் ஈர்க்கப்பட்டு வந்தது. சிங்களம் பேசும் கிராமப்புற மக்களை வெற்றி கொள்ள வேண்டுமானால் அவர்கள் கொண்டுள்ள அவலங்களுக்கு இயைந்து போவதன் மூலமும் அதன் தர்க்கரீதியான பெறுபேறாக அவர்களிடையே ஆளுமை கொண்டுள்ள முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதனதும் அவசியத்தினை வலியுறுத்திய சகல துரோகிகளுக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தனது அனைத்துலகவாத சோசலிச விதிமுறைக்காகப் போராடியது. முதலாளித்துவ ஆட்சி முறையுடன் எந்தவிதமான சமரசமும் அற்ற நிலைப்பாட்டில் நின்று தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்க அது நடாத்திய போராட்டத்தின்பால் நனவான தொழிலாளர்களைப் போலவே கிராமப்புற ஏழைகளையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கு இருந்து வந்த ஒரே தடை முதலாளித்துவக் கட்சிகளுடன் சமரசத்துக்குச் செல்லும் அரசியல் அமைப்பு மட்டுமேயாகும். ஆனால் இந்த வர்க்க சமரசக் கட்சிகளின் பிற்போக்கு அரசியல் பிடி பொதுமக்களிடையே ஆட்டம் கண்டுபோய் இருந்தது. இந்த நிலைமைகளின் கீழ் துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ அரச இயந்திரத்துடன் இணைந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகப் போராட்டத்தைத் தாக்க முயன்றனர். நவ சமசமாஜக் கட்சி அனுராதபுர மாவட்டத்தின் தம்புத்தேகமைப் பொலிசாருடன் சேர்ந்து ஆற்றியது சரியாக அத்தகைய ஒரு பாத்திரமேயாகும்.

முன்னைய பந்தியில் நாம் விளக்கிய அனைத்து அரசியல் விடயங்களும் தம்புத்தேகமை பு.க.க.அமைப்பாளராக விளங்கிய தோழர். ஆர்.பி.பியதாச பொலிசாரின் ஆதரவுடன் கைக்கூலி கொலையாட்களால் 1979 ஜூலை 17ம் திகதி கொலை செய்யப்பட்டதன் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

தோழர். ஆர்.பி.பியதாச விவசாய குடியேற்றத் திட்டத்தின் இளைஞராக வாழ்ந்தவர். சிங்கள சோவினிச இனவாதமானது விவசாயிகளை பழைய நிலமானித்துவ அமைப்பினுள் சிறைவைத்து, முதலாளித்துவ ஆட்சியின் கையாட்களாக்கும் ஒரு மரணப் பொறி என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் செய்த விளக்கத்தின் அடிப்படையில் அவர் போராடினார். சமசமாஜ தலைவர்களான என்.எம். பெரேராவும் கொல்வின் ஆர். டி. சில்வாவும் ஜயவர்தனவுடன் ஹெலிகொப்டர்களில் ஏறி எப்பாவில மக்களுக்கு மகாவலி மகிமையை புரிய வைக்க முயன்றுவந்த அதே வேளையில் ஆர்.பி.பியதாச உலக வங்கி முன்னின்று நடாத்திய மகாவலி இயக்கத்தின் நீண்டகால அழிவுகளை மக்களுக்குப் புரியவைக்கப் போராடினார். விவசாயிகளின் விடுதலைக்கு அனைத்துலகவாதத்தின் அடிப்படையிலான சோசலிசத் தீர்வு, தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இந்த அரசியல் சவாலின் ஆபத்தை புரிந்து கொண்ட யூ.என்.பி. அரசாங்கம், நவசமசமாஜக் கட்சியின் அப்பட்டமான ஆதரவுடன் பொலிசாரைக் கொண்டு ஆர்.பி.பியதாசவை படுகொலை செய்தது.

தோழர்.ஆர்.பி.பியதாச பிரதிநிதித்துவம் செய்த ட்ரொட்ஸ்கிச அரசியல் விதிமுறையை நிராகரித்தவர்களும் அதை எதிர்த்தவர்களும் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தை காட்டிக் கொடுப்பது நிச்சயம். 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் மிகவும் துன்பகரமான முறையில் நிரூபிக்கப்பட்டது இந்த தீர்க்கமான உண்மையேயாகும்.

தமிழ் முதலாளித்துவ கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதவியும் அன்று தோன்றி இருந்த தமிழ்க் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் புறக்கணிப்பும் ஜே.வீ.பி.யின் கருங்காலித்தனத்துடன் துரோகத் தலைவர்கள் சுற்றிவளைத்துக் கொடுத்த உதவியுடனும் 1980 ஜூலையில் தொழிலாளர் போராட்டத்தை மிலேச்சமான முறையில் நசுக்கிய யூ.என்.பி.அரசாங்கம், தமது ஏகாதிபத்திய சார்பு வேலைத்திட்டத்துக்கு இனிச் சுதந்திரமாக நாடு பூராவும் பரவ இடமளிக்க முடியும் எனத் தீர்மானம் செய்தது.

முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட தமிழ்க் குட்டி முதலாளித்தவ அமைப்புக்கள் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவிதியை கணக்கில் எடுக்காது விட்டாலும் தொழிலாளர்களுக்கு தோல்வியைப் பெற்றுக் கொடுக்க யூ.என்.பி.க்கு வசதியளித்ததன் பெறுபேறாக சிருஷ்டிக்கப்பட்ட விளைவுகளில் இருந்து விடுபட அவற்றுக்கு இடம் கிடைக்கவில்லை. நச்சுத்தனமான விளைவுகளுக்கு முகம் கொடுத்தது அந்த அமைப்புக்கள் மட்டும் அல்ல; முழுத் தமிழ் மக்களுமேயாகும்.

முக்கிய தமிழ் முதலாளித்துவக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி 1980 ஜூலை வேலை நிறுத்தத்தை உடைத்தத்தையிட்டு யூ.என்.பி.அரசாங்கத்துக்கு தமது நன்றியை 1980 ஆகஸ்ட் 8ம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்த மாவட்ட அபிவிருத்தி சபை மசோதாவுக்கு பூரண ஆதரவு வழங்கியதன் மூலமாகும். திறந்த பொருளாதார கொள்கைக்கு பொருத்தமான விதத்தில் மாகாண ரீதியில் நலன்புரிச் சேவைகளை ஒழித்துக் கட்டும் இலக்குடன் யூ.என்.பி.அரசாங்கம் சமர்ப்பித்த "அபிவிருத்தி சபை" வேலைத்திட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி "நிர்வாகத்தை பரவலாக்கி அபிவிருத்தி திட்டத்தில் மக்களை இணைத்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கை" என அழைத்தது. இந்தக் கேவலம் மசோதாவை "வரலாற்றுச் சட்ட அகாராதி என அழைத்த அமிர்தலிங்கம் அதை அமுல்செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி உதவினால் தமிழ் மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவு கிடைக்கும் என விபரித்தார்.

அமிர்தலிங்கத்தின் வார்த்தைகளை அவரே விழுங்கி ஏப்பமிடும் விதத்தில் இந்த நச்சு வேலைத்திட்டத்தின் கசப்பினை அவரே சுவைத்துக் கொள்வதற்கு - தமிழ் மக்களுக்கு ஒரு வருடம் தன்னும் செல்லவில்லை.

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான முதலாவது தேர்தல் 1981 ஜூன் 4ம் திகதி இடம்பெற இருந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபையை ஆதரிப்பதற்கும் அதன் தேர்தலில் போட்டியிடுவதற்கும் எதிராக தமிழ்க் குட்டி முதலாளித்துவ இளைஞர் இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான பிரச்சாரம் உச்சக் கட்டத்தை அடைந்து இருந்தது. 1981 மார்ச் 16ம் திகதி மூன்று தமிழ் இளைஞர் போராளிகள் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.தர்மலிங்கத்தின் ஜீப் வண்டியை தாக்கினர். இச்சம்பவம் இவர் அமிர்தலிங்கம், இராஜலிங்கம் ஆகியோருடன் வல்வெட்டித்துறையில் இராப்போசன விருந்தில் கலந்து கொண்டிருந்த வேளையில் இடம்பெற்றது. மற்றுமோர் சம்பவத்தில் யாழ்ப்பாணம் அரசடி வீதியில் நிறுத்தப்பட்டு இருந்த இராஜலிங்கத்தின் வாகனம் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது. மன்னாரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பருத்தித்துறை பா.உ. கே.துரைரத்தினம் மற்றுமோர் இடத்தில் தாக்குதலுக்கு உள்ளானார். மாவட்ட சபைத் தேர்தலுக்கு ஒரு கிழமைக்கு முன்னர் மே 26ம் திகதி யூ.என்.பி. மாவட்ட சபை வேட்பாளர் பட்டியலில் முதன்மை வேட்பாளராக விளங்கிய மாஜி.வட்டுக்கோட்டை பா.உ.ஆ.தியாகராசா சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேர்தல் தினம் நெருங்கியதும் குட்டி முதலாளித்துவ இளைஞர் இயக்கப் போராளிகளின் அவஸ்தை நிலை அதிகரித்த அளவுக்கு அவர்களின் தனியார் பயங்கரவாத நடவடிக்கையும் அதிகரித்தது. தொழிலாளர் வர்க்கத்தை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதற்கு முரணாகவும் எதிராகவும் இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைகள், சாய்மனைக் கதிரைகளில் இருந்து கொண்டு ஆயுதப் போராட்டங்களைப் பற்றி வாயடிக்கும் தீவிரவாதிகளின் அவைகள் இவையே என்பதும் எப்போதும் இட்டு நிரப்புவது ஆளும் வர்க்கத்தினதும் அதன் அரச இயந்திரத்தினதும் தீர்வுகளைக் கூர்மையாக்குவதேயாகும். யாழ்ப்பாணச் சம்பவங்கள் இட்டுநிரப்பியது இதில் இருந்து மாறுபட்ட பாத்திரம் அல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ்ப்பாண மாநகர முதல்வர் தலைமையில் நடாத்தப்பட்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டம், குட்டி முதலாளித்துவ போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. கூட்டத்தில் நின்றிருந்த மூன்று பொலிஸ் அதிகாரிகள் அவர்களால் சுடப்பட்டனர். இதில் இருவர் இறந்ததோடு ஒருவர் படுகாயமடைந்தார்.

## படுகொலைகளும் இரத்தக் களரியும்

ஒரு சில நிமிடங்களுக்குள் கூட்டம் நடைபெற்ற இடத்துக்குள் பாய்ந்து விழுந்த பொலிஸ் படையினர் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டிருந்த படுகொலையினதும் இரத்தக் களரியினதும் வேலைத்திட்டத்தினைக் கட்டவிழ்த்து விட்டனர்.

கூட்ட மைதானத்திற்கு அயலில் இருந்த கோவிலுக்கு தீமூட்டிய பொலிசார் அருகில் இருந்த வீடுகளுக்கும் வாகனங்களுக்கும் தீமூட்டியதோடு கடத்திய ஒரு பஸ்ஸில் யாழ்ப்பாணம் பெரியகடையை ஆக்கிரமித்தனர். ஆஸ்பத்திரி வீதியில் கடைகளுக்கு தீவைத்த இவர்கள் அருகில் இருந்த யாழ்ப்பாணம் பா.உ. வி.யோகேஸ்வரனின் வீட்டுக்கும் தீமூட்டியதோடு யோகேஸ்வரனதும் நண்பரதும் வாகனங்களுக்கு தீவைத்தனர். யோகேஸ்வரனும் மனைவியும் வீட்டின் பின்புறமாக இருந்த மதிலால் பாய்ந்து உயிர்தப்பியதாக சொல்லப்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்துக்கு தீமூட்டிய இரத்த வெறியர்களின் காடைத்தனங்களின் உச்சக் கட்டம் அதைத் தொடர்ந்து இடம்பெற்றது.

அது யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையயத்துக்குத் தீமூட்டியமையாகும். அது நூல்களும் மிகவும் அரிதான 95000க்கும் அதிகமான கையேட்டுபிரதிகளும் சேகரித்து வைக்கப்பட்ட ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்கியது. ஆளும் வர்க்கம் ஒடுக்கப்படும் பொதுமக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட பிற்போக்கு யுத்தத்தில் அறிவுச் செல்வத்துக்கு எங்கே மதிப்பு ? அறிவு மனித முன்னேற்றத்தின் ஆயுதமாகும். யாழ்ப்பாணம் நூல்நிலையத்தை தீக்கிரையாக்கியதன் மூலம் ஆகாயத்தில் உயர்ந்து பரந்த புகைமூட்டங்கள் நாடு பூராவும் பரவும் நச்சுப் புகைமூட்டங்களைக் குறித்து நின்றது .

இந்தத் துர்அதிஸ்டவசமான இருளின் ஆரம்ப தூதுவர்களாக ஜனாதிபதி ஜயவர்தன இரண்டு கடைகெட்ட பாத்திரங்களான சிறில் மத்தியூ, காமினி திசாநாயக்க என்ற இரண்டு அமைச்சர்களையும் பாவித்தார். யாழ்ப்பாண கடுகதி புகையிரதம் தரித்துச் செல்லும் சகல புகையிரத நிலையங்களிலும் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட குண்டர்களை தமது சகாக்களாக ஏற்றிக் கொண்ட இந்த காடையர் கும்பலின் முதல்வர்கள் இருவரும் மாவட்ட சபைத் தேர்தலுக்கு முன்னோடியாகவே இரத்தக் களரி, படுகொலை இவற்றின் பேரில் யாழ்ப்பாணத்தில் இறங்கிக் கொண்டனர். மே 31ம் திகதி ஆரம்பமான கொடிய காடைத்தனங்கள் ஜூன்1 ஜூன்3 வரை தொடர்ந்து இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தலில் யூ.என்.பி.படுதோல்வி அடையும் என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டிருந்த இக்காடையர்கள் இப்பிராந்திய நிர்வாகத்தை பலாத்கார்ரமான முறையில் தமது கைக்குள் போட்டுக் கொண்டனர். அவர்களின் குண்டர் இயக்கத்துக்கு சட்டரீதியான போர்வையை வழங்கும் பொருட்டு தேர்தலுக்கு முன்னர் ஜூன் 3ம் திகதி இரவு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அன்று நள்ளிரவு கழிந்து 2மணியும் 45 நிமிடமும் சென்றிராது. பொலிஸ் சீருடை அணிந்த சுமார் நூறு பேர் அமிர்தலிங்கத்தின் வீட்டைச் சுற்றி வளைத்து, அவரைக் கைது செய்தனர். இதற்கு முன்னைய ஆண்டு டிசம்பர் 31ம் திகதி யர்ழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் கொந்தராத்தினை பொறுப்பேற்று நியமனம் பெற்ற பிரிகேடியர் வீரதுங்க தமது தோல்வியின் அதிருப்தியினால் வெறிபிடித்து இருந்தார். கடைகெட்ட இரண்டு அமைச்சர்களும் அமிர்தலிங்கத்தைச் கைது செய்யும்படி வெளியிட்ட உத்தரவை முழுமனதுடன் ஒப்புக் கொண்டனர். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாளித்துவ தன்மையையும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளுவதற்கு அதன் உதவி மீதும் நம்பிக்கை வைத்திருந்த ஜயவர்தன, நல்ல முகத்துடன் ஜூலை 4ம் திகதி சூரியன் உதிக்க முன்னர் அமிர்தலிங்கத்தை விடுதலை செய்யுமாறு கொழும்பில் இருந்து கேட்டுக் கொண்டார்.

இந்த ஒடுக்குமுறையின் மத்தியில் யூ.என்.பி.குண்டர்களின் கள்ள வாக்களிப்பைப் பயன்படுத்திய போதிலும் ஜூலை 4ம் திகதி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் யூ.என்.பி.முழு யாழ்ப்பாணத்திலும் பெற்றது 23302 வாக்குக்கள் மட்டுமே. தமிழர் விடுதலைக் கூட்டணி இதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக 263369 வாக்குக்களைப் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் பத்து ஆசனங்களைக் கைப்பற்றியது.

இதற்குப் பதில் யூ.என்.பி.அரசாங்கத்திடம் இருந்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாக வெடித்தது. உலகப் பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும்.


இதன் பின்னர் 1981 ஆகஸ்டு மாதத்தில் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் மீது நடாத்திய தாக்குதலில் இறந்த ஒரு பொலிஸ்காரரின் சடலத்தை அணைத்துக் கொண்டு, தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு எதிரான கொலைகார இயக்கம் தொடுக்கப்பட்டது. இறக்குவானை, இரத்தினபுரி, பலாங்கொடை கஹவத்த முதலிய இடங்களில் உள்ள தோட்டங்களில் பாய்ந்து விழுந்த இனவாதக் குண்டர்கள் பொலிசாரின் உதவியுடன் தொழிலாளர் வீடுகளுக்குத் தீமூட்டினர். சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். தொழிலாளர் குடும்பங்களைக் கொலை செய்தனர். இவை எல்லாம் சுதந்திரமாக இடம்பெற்றன. இந்தக் காட்டுமிராண்டி நடவடிக்கைகளுக்கு எதிரான பொதுஜன அபிப்பராயமும் எதிர்ப்பும் வளர்ச்சி காண்பதை தவிர்க்கும் பொருட்டு, யூ.என்.பி.அரசாங்கத்துடன் இணைந்து கொண்டிருந்த இ.தொ.கா. கருத்து வெளியிட நேரிட்டது.

அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து வந்த சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஜே.வீ.பி.யும் யூ.என்.பி.யின் தமிழர் விரோத தாக்குதல்களுக்கு தலைப்புக் கொடுத்து அரசாங்கம் விதித்த அவசரகாலச் சட்டத்தையும் பத்திரிகைத் தணிக்கையையும் அங்கீகரித்தனர். பாராளுமன்றத்தில் இருந்து கொண்டிருந்த இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர் எனப்பட்ட ஸ்டாலினிச சரத் முத்தேட்டுவேகம இந்த துரோக விதிமுறையின் முக்கிய புள்ளியாக விளங்கினார்.

## பு.க.க. போராட்டம்

யூ.என்.பி. அரசாங்கத்தினதும் குண்டர்களதும் தாக்குதல்களுக்கும் கேவலம் தலைவர்களின் துரோகங்களுக்கும் எதிராக

18ம் பக்கத் தொடர்ச்சி




1979ல் யூ.என்.பி.யின் பயங்கரவாதச் சட்டத்தை எதிர்த்துப் போராடிய வேலையில் கொலையுண்ட பு.க.க வட மத்திய மாகாண அமைப்பாளர் ஆர்.பி. பியதாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

*அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் இந்த இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகும். அதன் முதல் பாகத்தின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.*

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களின் உலக முதலாளித்துவம், 18ம் நூற்றாண்டின் இறுதியில் இடம்பெற்ற கைத்தொழில் புரட்சியையும் 19ம் நூற்றாண்டின் இறுதியின் ஏகபோக மூலதனத்தினது எழுச்சியுடனும் இடம்பெற்ற மாற்றங்களைப் போல் அடிப்படையானதும் நீண்டதூரம் செல்கின்றதுமான. அடிப்படை மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. உலகளாவிய ரீதியில் தொழிற்படுகின்றதும் நேரடியாக உலக சந்தைக்காக உற்பத்தியில் ஈடுபடுகின்றதுமான ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தோற்றம், முன்னொருபோதும் இல்லாத அளவிலான உற்பத்தியின் பூகோள ரீதியான இணைப்பின் அடிப்படையாகக் கொண்ட ஒரு புதியதும் உயர்ந்ததுமான அனைத்துலக உழைப்புப் பகுப்பின் மையப் பண்பாகும்.

உலகப் பொருளாதாரம் இன்று உலகம் பூராவும் தமது முதலீடுகளுக்கு உயர்ந்த மட்டத்திலான இலாபத்தை தேடி அனைத்துலக நிதி நிறுவ்னங்கள் தேசிய எல்லைகளைக் கடந்து அலையும் பெருவாரியூான சரக்கு முதல்களின் தினசரி நடமாட்டத்தினால் பண்பாக்கம் செய்யப்படுகின்றது. இந்தப் பணத்தொகையானது எந்த ஒரு தேசிய அரசாங்கத்தினதோ அல்லது மத்திய வங்கியினதோ கைகளில் இருந்து கொண்டுள்ள மூலதனத்தை குள்ளனாக்கி விடுகின்றது. டாரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள்( ) பல கண்டங்களையும் அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி, திட்டமிடல், சந்தைப்படுத்தல், முகாமையியல் வசதிகளை ஒன்றிணைப்பதோடு பெரிதும் பூகோளரீதியான பண்பு கொண்ட ஒரு உழைப்புச் சந்தையையும் சுரண்டுகின்றது. நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை கைத்தொழில் புரட்சிக்கு எண்ணெய் வார்த்ததைப் போல Microchip உடனும் intergrated circuit.

உடன் சேர்ந்து தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சிகர முன்னேற்றங்கள் உற்பத்தியை பூகோளமயமமாக்குவதற்கு இடமளித்தன. இவை கணனிகளிலும் தொலைத் தொடர்புகளிலும் பிரமாண்டமான அபிவிருத்திகளுக்கு இட்டுச் சென்றன். பிரயாணச் செலவுகளைக் பிரமாண்டமான அளவு குறைத்ததோடு இந்தப் புதிய தொழில்நுட்பங்கள், கூட்டுத்தாபனங்கள் பண்டங்களின் உற்பத்தியை தேசிய எல்லைகளைத் தாண்டியும் ஒழுங்குசெய்வதைச் சாத்தியமாக்கின. பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களைப் (MNC) போல் அல்லாது இவற்றின் வெளிநாட்டு கிளைகள் அவை அமைந்துள்ள தேசிய சந்தைகளுக்கென்றே உற்பத்தியை நடாத்தின- நவீன ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பரந்த அளவிலான வசதிகள் உலகச் சந்தைக்கென்றே உற்பத்தியை நடாத்துகின்றன.

இலாப முறைக்கென புதிய வரலாற்று சாலைகளை ஆரம்பிப்பதற்குப் பதிலாக இந்த பொருளாதார, தொழில்நுட்ப அபிவிருத்திகள் 20ம் நூற்றாண்டு பூராவும் உலக முதலாளித்துவம் கொண்டிருந்த அடிப்படையான முரண்பாடுகளை முன்னொருபோதும் இல்லாத மட்டத்துக்கு உயர்த்தி விட்டன. அவை உலகப் பொருளாதாரத்துக்கும் முதலாளித்துவ தேசிய அரச முறைக்கும் இடையேயும் சமூக உற்பத்திக்கும் தனியார் உடமைக்கும் இடையேயுமான மோதுதல்களை பிரமாண்டமான முறையில் உக்கிரமாக்கிவிட்டது.

யுத்தத்தின் பின்னைய பொருளாதார செழிப்பின் போது ஒரு தொகை ஒழுங்குமுறையான பொறிமுறைகள் இந்த வரலாற்று நெருக்கடியை அடக்கி வைத்திருந்தன. ஆனால் உற்பத்திப் போக்கிலும் தொடர்புச் சாதனங்களிலும் அனைத்துலக ரீதியிலும் 20 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட பிரமாண்டமான மாற்றங்கள் உற்பத்தி முறை தொடர்பான ஒழுங்குகளை பொறுத்த மட்டில் தேசிய அரச முறையை பெரிதும் காலவதியானவையாக்கிவிட்டன. இது தொழிலாளர் வார்க்கத்தின் பரந்த புரட்சிகரப் போராட்டங்களின் ஒரு புதிய காலப்பகுதியின் தோற்றத்தைக் குறித்து நிற்கின்றது.

150 வருடங்களுக்கு முன்னர் மார்க்ஸ் விளக்கிய்து போல் புரட்சிகளின் மூலம் முதலில் நனவின் மாற்றத்தில் அல்லாது புறநிலையான சமூகப் போக்குக்களிலேயே தங்கியுள்ளது. அவை புரட்சிகரப் போராட்டங்களின் காலப்பகுதியினை குறித்து நிற்கும் பரந்த மக்களின் அரசியல் தகவமைவினதும் நனவினதும் பாரிய மாற்றங்களின் பின்னால் உள்ள உந்து சக்திகளாகும்.

"அபிவிருத்தியின் ஒரு சில கட்டத்தில் சமுதாயத்தின் சட உற்பத்திச் சக்திகள் இன்றுள்ள உற்பத்தி உறவுகளுடன் மோதிக் கொள்கின்றன அல்லது இதுகாறும் அவை இயங்கிக் கொண்டிருந்த கட்டுமானத்தின் உற்பத்தி உறவுகளுடன் மோதிக் கொள்கின்றன- இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தி வடிவங்களில் இருந்து அவற்றின் விலங்குகளாக மாறுகின்றது. அப்போது சமூகப் புரட்சியின் ஒரு சகாப்தம் ஆரம்பிக்கின்றது."

சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடனும் பழைய கட்சிகள், தொழிற்சங்கங்களின் வீழ்ச்சியுடனும் தொழிலாளர் வர்க்கத்தினுள் ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கு அப்பால் பார்வையை செலுத்த முடியாதுள்ள குறுகிய பார்வையாளர்களுக்கு சோசலிசப் புரட்சி முன்நோக்கானது முற்றிலும் யதார்த்தம் அற்றது அல்லது அதை ஒரு நீண்ட காலத்துக்கு தள்ளிவைக்க வேண்டும் என்பது போல் தோன்றுகின்றது.

ஆனால் மார்க்ஸ் மேலும் விளக்கியது போல்

"நாம் ஒரு தனியாளை அவர் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டுள்ளார் என்பதைக் கொண்டு மதிப்பீடு செய்யாதது போல் இத்தகைய ஒரு பரிணாம காலப்பகுதியையும் அங்கு இருந்து வரும் நனவினை கொண்டு எடைபோட முடியாது. ஆனால் அதற்கு முரணாக அந்த நனவை சட வாழ்க்கையின் முரண்பாடுகளைக் கொண்டு விளக்க வேண்டும். உற்பத்தியின் சமூக சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோதுதலைக் கொண்டு விளக்க வேண்டும்."2

ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியும் பாரம்பரிய தொழிலாளர் அமைப்புக்களின் சரிவும் தொழிலாளர் இயக்கத்தினுள் குழப்பநிலைமையை உருவாக்கி விட்டது. ஆனால் இந்தப் போக்கினை நெருக்கமாக ஆய்வு செய்யுமிடத்து இதன் மூலம் உற்பத்தியின் பூகோளமயத்தில் இருந்து உருவான தேசிய அரசுகளின் ஆழமான நெருக்கடியில் தங்கியுள்ளதை அம்பலமாக்குகின்றது. வேறு வார்த்தைகளில் சொன்னால் பழைய அமைப்புக்களின் சரிவும் தொழிலாளர் இயக்கத்தினுள் இது சிருஷ்டித்துள்ள குழப்பமும் இறுதி ஆய்வுகளில் புரட்சிகரப் போராட்டங்களுக்கான ஒரு புதிய காலப்பகுதியை தயார் செய்யும் வரலாற்றுப் போக்கின் பெறுபேறாகும்.

வீழ்ச்சி கண்டது சோசலிச முன்னோக்கு அல்ல, ஆனால் ஒரு முழு வரலாற்றுக் காலப்பகுதி பூராவும் தொழிலாளர் வர்க்கம் சிறைப்படுத்துப்பட்டு இருந்த தேசியவாத வேலைத்திட்டங்களே. ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியான்து தனிநாட்டில் சோசலிசம் என்ற பதாகையின் கீழ் தேசியவாத வேலைத்திட்டத்தின் நின்றுபிடிக்க முடியாத தன்மையை எடுத்துக்காட்டிய அதேவேளையில் பொருளாதாரத்தை விஸ்தரித்து பேணுலும் தொழிற்சங்கங்களதும் தொழிற்கட்சிகளதும் சீர்திருத்த வேலைத்திட்டங்கள் முதலாளித்துவ உற்பத்தி அமைப்பினுள் பாரிய மாற்றங்களால் சிதறுண்டு போயிற்று.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு கடந்த தசாப்தத்தில் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளமயமாக்கம் சம்பந்தமான ஒரு ஆய்வினை நடாத்தியதோடு அதனால் தொழிலாளர் வர்க்கத்திற்கும் புரட்சிகர சோசலிச இயக்கத்துக்கு ஏற்படும் தாக்கங்களையும் ஆய்வு செய்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் 1988 ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்ட உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணிகளும் என்ற முன்னோக்குப் பிரேரணை பின்வருமாறு குறிப்பிட்டது.

"13. நீண்டகாலமாக மார்க்சிசத்தின் அடிப்படைக் கூற்று, வர்க்கப் போராட்டமானது, வடிவத்தில் மட்டுமே தேசிய ரீதியானது என்றும் சாராம்சத்தில் அது அனைத்துலக போராட்டம் என்றும் இருந்தது. என்றாலும் முதலாளித்துவ வளர்ச்சியில் புதிய தோற்றங்களில், வர்க்கப் போராட்டத்தின் வடிவம் கூட ஒரு அனைத்துலக தன்மையை எடுக்க வேண்டியுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் மிக அடிப்படை ரீதியான போராட்டங்கள் கூட அதன் நடவடிக்கைகளை ஒரு அனைத்துலக ரீதியாக ஒருங்கிணைக்க வேண்டிய தேவையை முன்வைக்கின்றது. பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை ரீதியான உண்மை என்னவெனில் நாடுகடந்த கூட்டுக் கம்பனிகள்( ) ஒரு முடிவுப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு பல நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைக்கும் சக்தியைச் சுரண்டுகின்றன. அத்தோடு அவை தமது உற்பத்தியை அதி உயர்ந்த இலாபத்தைத் தேடி ப்லவேறு நாடுகளில் பல்வேறு பண்டங்களில் உள்ள தமது தொழிற்சாலைகளுக்கிடையில் உற்பத்தியை விநியோகிப்பதோடு இடம் மாற்றுகின்றன. .... இதன் மூலம் முன்னொரு போதும் இல்லாது அளவு மூலதனத்தின் அனைத்துலக இயக்கம் வெவ்வேறு நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலவதியாக்கி, முழுமையாகப் பிற்போக்கானதாக்குகின்றது. அப்படியான தேசிய வேலைத்திட்டங்கள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் "அவர்களின்" ஆளும் வர்க்கங்களுக்கு தன்னிச்சையாக வழங்கும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு, உலகச் சந்தையின் "அவர்களின்" முதலாளித்துவ நிலைப்பாட்டைப் பலப்படுத்தும் அவசியத்துடன் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரங்களை வரிசைக் கிரமமாகக் குறைக்கின்றன."

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முன்னின்று நடாத்திய இந்த ஆய்வு தொழிலாளர் வர்க்கத்தின் கசப்பான அனுபவங்களின் மூலமும் உலக முதலாளித்துவத்தின் தொழிற்பாடுகள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட எண்ணற்ற அனுபவரீதியான ஆய்வுகள் மூலமும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

இதை எழுதும் போதும் கூட கிழக்கு ஆசிய புலிகள் நாடுகளின் நிதி நெருக்கடி உலகப் பொருளாதாரத்தின் சகல பாகங்களுக்கும் அதிர்ச்சி அலைகளை அனுப்பியுள்ளது. ஜப்பானில் வங்கிகளையும் கைத்தொழில்களையும் ஸ்தம்பிக்க வைத்துள்ளது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பங்குமுதல் சந்தைகளின் ஸ்திரப்பாட்டை கேள்விக்கிடமானதாக்கி உள்ளது. மேற்கத்தைய வங்கியாளர்களும் அரசியல் புள்ளிகளும் இன்றைய பூகோளமயமான பொருளாதாரத்தின் அராஜக தொழிற்பாடு உலகை 1930பதுகளின் மாபெரும் பொருளாதார மந்த நிலைமைக்குச் சமமான ஒரு பணச்சுருக்க நிலைமைக்குள் தள்ளிவிட அச்சுறுத்துவதாக எச்சரிக்கை அறிக்கைகள் விடுத்துக் கொண்டுள்ளனர்.

எவ்வாறெனினும் "இடது", அல்லது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"தீவிரவாதி" எனப் பொதுவாக வர்ணிக்கப்படும் இயக்கம்- சிறப்பாக 1960பதுகளில் மத்தியதர வர்க்க தட்டினரின் தீவிரவாதத்தின் ஒரு பாகமாக எழுந்த அமைப்புக்களை எடுத்துக் கொண்டால்- முதலாளித்துவத்தின் தன்மையில் அடிப்படையான எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. பூகோளமயமாக்கம் என்பது முதலாளி வர்க்கத்தினால் விதைக்கப்பட்ட ஒரு கட்டுக்கதை மட்டுமே என்பதே பெரும்பான்மையினரின் அபிப்பிராயமாக இருந்தது.

இங்கு அரசியல் 'பதத்தின் மீது ஒரு குறிப்பை புகுத்துவது அவசியமாகியுள்ளது. இந்த அமைப்புக்கள் தொடர்பாக "இடது" "தீவிரம்" என்ற பதங்களை கையாள்வது அவற்றின் அரசியலில் மார்க்சிஸ்ட் இல்லாதது மட்டுமன்றி அவற்றில் எந்தவிதமான நிஜ தீவிரமும் கிடையாது என்பதைப் புரிந்து கொண்டேயாகும். தொழிற்கட்சி, தொழிற்சங்க் அதிகாரத்துவங்களை அவை அரவணைத்துக் கொண்டமையும் முதலாளித்துவ அரசினை அவை தகவமைத்துக் கொண்டமையும் அந்த இயக்கம் ஒரு திட்டவட்டமான சமூக மூலகத்தின் முழுக் காலப்பகுதி பூராவும் வலதுசாரி பக்கம் சென்றதுவேயாகும். அவர்களை சரியான முறையில் வருணிப்பின் குட்டி முதலாளித்துவ மாஜி.தீவிரவாதிகள்.)

உற்பத்தியைப் பூகோளமயமாக்கத்தின் முக்கியத்துவத்தையும் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் மீதான அதன் தாக்கத்தையும் மதிப்பீடு செய்வது மார்க்சிசத்துக்கும் சகல வடிவிலான மத்தியதர வர்க்க தீவிரவாதங்களுக்கும் இடையேயான ஒரு பிரிகோடாகியுள்ளது.

அவர்களுக்கு இடையேயான சிறப்பு வேறுபாடுகள் என்னவாக இருந்த போதிலும் அனைத்து தீவிரவாத போக்குக்களதும் வரையறுக்கப்பட்ட பண்பாக அவர்களின் இயல்பான தேசியவாதம் இருந்து கொண்டுள்ளது. இது தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அனைத்துலக மூலோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவைகள் காட்டிக் கொண்ட ஆழமான வெறுப்பில் திட்டவட்டமாக வெளிப்பாடாகியது.

இவை அத்தகைய முன்நோக்குகளை யதார்த்தமற்ற குழுங்குழுவாதம் எனக் கண்டனம் செய்து கொண்டு, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய ஸ்டாலினிச சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களுடன் இயைந்து போனதோடு பின்தங்கிய நாடுகளில் குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் சோசலிசத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதாகவும் கொண்டாடின.

இந்தக் குழுக்களின் தலைசிறந்த காலமாக தொழிலாளர் வர்க்கத்தின் நீண்டகால வரலாற்று அவசியங்களுக்காகப் போராடுவதற்குப் பதிலாக தேசியவாத முன்நோக்கு பெரிதும் யதார்த்தபூர்வமானது ஏதேனும் ஒரு உடனடி வெற்றியை ஈட்டித் தரும் எனத் தோன்றிய யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியாகும். ஆனால் மீண்டும் ஒரு தடவை முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் சந்தர்ப்பவாதிகளின் முன்நோக்குகளைக் காட்டிலும் மிகவும் பலம் வாய்ந்தது என்பதை நிரூபித்துள்ளது. பூகோளமயமாக்கத்தின் தாக்கத்தின் கீழ் பாரம்பரிய கட்சிகளும் இடது தொழிலாளர், தொழிற்சங்க தலைமைகளும் சிதறுண்டு போனதைத் தொடர்ந்து இந்த மத்தியதர வர்க்க தீவிரவாதப் போக்குக்கள் தேசிய அரசின் நின்றுபிடிக்கும் தன்மைக்கும் அதற்கு நெருக்குவாரம் தரும் தமது வேலைத்திட்டத்துக்கும் ஆதரவாக அவர்கள் ஒரு அவஸ்தையான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பூகோளமயமாக்கம்' தொழிலாளர்களை ஏமாற்றவும் தொழிலாளர் வர்க்கத்துக்கு சாத்தியமாகவுள்ள தேசிய அரசு மீது தொழிற்சங்க நெருக்குவாரக் கொள்கையை கடைப்பிடிப்பதை கைவிடச் செய்யவும் திணிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றார்கள். அனைத்துலகவாதத்தை அவர்கள் நிராகரிப்பது தொழிற்சங்கம் தொடர்பான அவர்களின் மூடத்தனமான போக்கின் ஒரு மையமாகவும் உலகளாவிய பண்பாகவும் விளங்குகின்றது. தொழிலாளர் வர்க்கம் தொழிற்சங்கங்களின் ஆளுமையை அங்கீகரிக்க வேண்டும் என அவர்கள் கோருகின்றனர். தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் பிடியை உடைக்கும் எந்த ஒரு போராட்டத்தையும கண்டனம் செய்கின்றனர்.

ஜேம்ஸ் றொபேட்சன் தலைமையிலான ஸ்பார்ட்ட்சிஸ்ட் லீக் தோற்றத்திலும் அபிவிருத்தியிலும் அமெரிக்க மத்தியதர வர்க்க தீவிரவாதத்தின் முக்கிய ஒரு பிரதிநிதியாகும். மொத்தத்தில் இடது சகோதரத்துவத்தினதும் பிரதிநிதியாக எழுதுகையில் இந்த அமைப்பு கடந்த வருடத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவையும் அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியையும் அதன் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த்தையும் தாக்கும் நான்கு கட்டுரைகளை வெளியிட்டது.

பூகோளமய பொருளாதாரமும் தொழிலாளர் சீர்திருத்தவாதமும் டேவிட் நோர்த் கார்ள் கவுட்ஸ்கியை எப்படித் தழுவிக் கொள்கின்றார்? என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைகள் மத்தியதர வர்க்கத் தீவிரவாதிகளின் சார்பில் வெளியிடப்பட்ட ஒரு முன்நோக்காக அமைந்துள்ளது.

ஸ்பார்ட்டசிஸ்டுகள் முன்வைத்துள்ள மைய நிலைப்பாடுகள் இவைதான்:

1. பூகோளமயமாக்கம் உலக முதலாளித்துவ அமைப்பில் ஒரு பண்புரீதியான மாற்றத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. தேசிய அரசின் பொருளாதார, அரசியல் பலம் உடையாது இருந்து வருகின்றது. பூகோளமயமாக்கம் ஒரு கற்பனை. சம்பளம், வாழ்க்கைத்தரம் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக எதிர்ப்புக் காட்டுவது பயனற்றது எனத் தொழிலாளர் வர்க்கத்தை நம்பச் செய்ய முதலாளி வர்க்கம் ஆரம்பித்துள்ள பிரச்சார இயக்கமாகும்.

2.ஆதலால் தேசிய அரசுக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் சீர்திருத்தங்களை பெற்றுக் கொள்ள தொடுக்கப்பட்ட தொழிற்சங்க வேலைத்திட்டம் தொடர்பாக நின்றுபிடிக்கத்தக்கதாக உள்ளது.

3.தொழிற்சங்கங்களின் காட்டிக் கொடுப்புக்கள் உலக பொருளாதாரத்தினுள் வேரூன்றியுள்ள புறநிலைப் போக்கின் பெறுபேறு அல்ல. அது தொழிற்சங்கத் தலைவர்கள் எடுத்துள்ள அகநிலை முடிவுகளின் பெறுபேறாகும்.

4.மாஜி.காலனித்துவ நாடுகளில் இருந்து கொண்டுள்ள குட்டி முதலாளித்துவ தேசியவாத சக்திகளே நிஜ புரட்சிகர சக்திகள் தொழிலாளர் வர்க்கத்தை ஒரு சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டும் முன்நோக்கு ஒரு யதார்த்தமற்ற கற்பனை.

இந்தச் சகல அரசியல் நிலைப்பாடுகளதும் பின்னணியில் அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் உள்ள புறநிலை மாற்றங்களை தொடர்ந்து அம்பலப்படுத்த முயலும் வரலாற்றுச் சடவாத மார்க்சிச விதிமுறையை நிராகரிப்பது விளங்குகின்றது. மாறாக ஸ்பார்ட்டசிஸ்டுகள் ஒரு அகநிலை விதிமுறையுடன் முன்னேறிச் செல்கின்றனர். இங்கு அரசியல் தனிப்பட்ட தலைவர்களது நோக்குக்களதும் தீர்மானங்களதும் பெறுபேறாக குறைக்கப்படுகின்றது.

ஆதலால் ஸ்பார்ட்டசிஸ்ட் கட்டுரையை ஆய்வு செய்வதானது மார்க்சிச வேலைத்திட்டட்டத்துக்கும் குட்டி முதலாளித்துவ தீவிரவாத நோக்குக்கும் இடையேயான வர்க்க ஆதாள பாதாளத்தை தெளிவுபடுத்துவதோடு அந்த விதத்தில் ஒரு புதிய புரட்சிகரத் தலைமுறைக்குக் கல்விபுகட்டவும் பங்களிப்புச் செய்கின்றது.

## பாகம்–1. பூகோளமயமாக்கமும் முதலாளித்துவ அபிவிருத்தியின் சலனமும்

பூகோளமயமாக்கம் என்பது தொழிலாளர் வர்க்கத்தைக் குழப்பியடிப்பதற்கான ஒரு பிரச்சார இயக்கமே தவிர வேறொன்றும் அல்ல என்பதே ஸ்பார்ட்டசிஸ்டுகளின் மையக் குற்றச்சாட்டாகும். இதன்படி உலகப் பொருளாதாரத்தினுள் இதுகாறும் இடம்பெற்றுள்ள மாற்றங்களின்படி இது ஒரு பண்புரீதியான பரிணாமத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என அவர்கள் வாதிடுகின்றார்கள். நிதி மூலதனத்தின் அனைத்துலகமயமாக்கம் புதியது அல்ல எனக் கூறும் அவர்க்ள் பலவிதத்தில் உலகப் பொருளாதாரம் இன்றையதை விட முதலாம் உலக யுத்தத்துக்கு முன்னைய காலப்பகுதியில் பெரிதும் பூகோளமயமாக்கப்பட்டுவிட்டது என வலியுறுத்துகின்றார்கள்.

"கடந்த சில தசாப்தங்களாக... உலக முதலாளித்துவப் பொருளாதாரம் , 1914க்கு முன்னைய ஏகாதிபத்திய முறையை நோக்கி திரும்பிக் கொண்டுள்ளது. ஒரு முன்நோக்கு உணர்வை கொண்டிருக்க வேண்டின் ஒருவர் 1970பதுகளின் ஆரம்பப் பகுதியில் மட்டுமே பூகோளரீதியான உற்பத்தியுடனான உலக வர்த்தக விகிதம் மீண்டும் முதலாம் உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் தறுவாயில் 1914ல் அடைந்திருந்த மட்டத்தைத் திரும்பவும் எட்டியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்."

1914க்கு முன்னர் இருந்து வந்த 'தங்க நியமமுறையும் அனைத்துலக வர்த்தகத்தின் துரித வளர்ச்சியும் உலகப் பொருளாதாரத்தை எந்தளவுக்கு இணைத்துள்ளது. அது நிதி மூலதனத்தின் அனைத்துலகமயமாக்கம் சமகால இலாப அமைப்பின் ஒரு செல்வாக்கு வாய்ந்த பாண்பாகும். இது ஒன்றும் புதிதல்ல என ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாதிடுகின்றனர்.

தங்க நியம முறையின் தொழிற்பாடு இதுகாறும் ஒப்பிடமுடியாத அளவுக்கு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிடையே ஒரு நிதி இணைப்பு தொழிற்பாட்டினை உத்தரவாதம் செய்ததாக அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் வாதங்கள் ஒரு கட்டத்தில் பெரிதும் சிரிப்புக்கிடமானது. அனைத்துலகத் தொலைபேசி அழைப்புக்கள்- மிகவும் கஷ்டத்துடன்- ஆரம்பித்திருந்த பொருளாதாரமான அந்தப் பொருளாதாரம், தேசிய எல்லைகளைத் தாண்டும் முழு உற்பத்திப் போக்கினையும் நடைமுறைப்படுத்த உலகின் ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்கு பில்லியன் கணக்கான டாலர்கள் மூலதனத்தை மாற்றவும் தொலைத் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படும் பொருளாதார அமைப்பைக் காட்டிலும் எந்தவிதமான அர்த்தமான முறையும் பூகோள ரீதியில் ஒன்றிணைக்கப்பட்டு இருந்தது என்ற கருத்தை ஸ்தாபிதம் செய்வது எதுவிதத்திலும் சாத்தியமானது அல்ல.


அதுமட்டுமன்றி 1914க்கு முந்திய பொருளாதாரம் இன்றையைவிட பெரிதும் அனைத்துலகமயமாக்கப்பட்டு இருந்தது எனக் கோர அனைத்துலக வர்த்தகம் அல்லது முதலீட்டு பெருக்கெடுப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யின் ஒரு உயர்ந்த வீதாசாரத்தைக் கொண்டிருந்தது என்பதை அடிப்படையாகக் கொள்வதானது இன்னமும் பூகோளத்தின் பெரும்பாகம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாளித்துவ பொருளாதாரத்தினுள் இணைக்கப்படத் தொடங்கியிருந்தது என்ற உண்மையைப் புறக்கணிப்பதாகும்.

முதலாளித்துவ பூகோளமயமாக்கத்தின் இன்றைய கட்டம் கடந்த காலத்தை நோக்கித் திரும்பும் ஒரு போக்கினையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. எவ்வாறெனினும் இருபதாம் நூற்றாண்டின் பொருளாதார வரலாற்று ஆய்வு இது தேசிய அரசினதும் தொழிற்சங்க வடிவிலான அமைப்புக்களதும் தாக்கிப் பிடித்து நிற்கும் தன்மை தொடர்பான ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் வாதத்தினை நிராகரிக்கின்றதே தவிர ஊர்ஜிதம் செய்யவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

புள்ளிவிபரங்களை அவற்றின் வரலாற்று அடிப்படையில் இருந்து பிய்த்து எடுத்து ஒரு காலப்பகுதியை மற்றொன்றுடன் நிலையான முறையில் ஒப்பிடும் ஸ்பார்ட்டசிஸ்ட் விதிமுறையில் இருந்து எதையும் கற்றுக் கொள்ள முடியாது. முதலாளித்துவ அபிவிருத்தியின் சலனத்தை ஆய்வு செய்வது அவசியமாகின்றது. அத்தகைய ஒரு ஆய்வானது முதலாம் உலக யுத்தத்துக்கு முந்திய காலப்பகுதியில் உலக முதலாளித்துவம் பெரிதும் பூகோளரீதியானதாக இணைக்கப்பட்டு இருந்ததைக் காட்டவில்லை.மாறாக அது ஒரு அடிப்படை அர்த்தத்தில் உலக முதலாளித்துவம் ஒரு உயர்ந்த மட்டத்தில் அக்காலத்தில் அது ஆரம்பித்த அபிவிருத்தியின் பாதைக்கு மீண்டும் திரும்பிக் கொண்டுள்ளதை வெளிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு சமீபகால அறிக்கையானது முதலாம் உலக யுத்தத்துக்கு முந்திய காலப்பகுதியில் உலகப் பொருளாதாரத்தின் சலனத்தின் வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடக்கம் முதலாம் உலக யுத்தம் வரையிலான காலப்பகுதி உலக வர்த்தகத்தில் சார்பு ரீதியான துரித வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. ஏற்றுமதிகளின் பரம்பல்(ஆண்டுக்கு 3.5 வீதம்) நிஜ வெளியீட்டை (ஆண்டுக்கு 2.7 வீதம்) தாண்டியது. உலக

(12ம் பக்கம் பார்க்க)



தாய்வானில் கணனி உற்பத்தி நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்



தாய்லாந்து டைனமிக் விளையாட்டு பொருள் பக்டரியுள் நுழையும் இளம் தொழிலாளர்

வெளியீட்டில் ஏற்றுமதிகளின் பங்கு 1913ல் உச்சக் கட்டத்தை அடைந்தது. இது 1970வரை தாண்டப்படவில்லை. வர்த்தகத்திலான பெருக்கம் ஓரளவுக்கு குறைந்த சுங்க வரியினதும்( ) பெருமளவுக்கு குறைந்த போக்குவரத்து செலவுகளதும் பெறுபேறாக இடம் பெற்றது. இது புகையிரதப் பாதையினதும் நீராவிக் கப்பல்களதும் புதிய தோற்றத்தைப் பிரதிபலித்தது. அவ்வாறே இக்காலப்பகுதி, பண்டங்களின் விலைகள் நாடுகளுக்கு ஊடாக ஒரு சமநிலைக்கு கொணரப்பட்டதையும் தரிசித்தது.

முதலாம் உலக யுத்தத்துக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கு ஐரோப்பாவின் ஒரு' தொகை நாடுகளில் இருந்து பிரமாண்டமான மூலதனப் பெருக்கெடுப்பு துரித அபிவிருத்தி கண்டு வரும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நாடுகளின் பொருளதாரங்களுக்கு இடம்பெற்றது. இதன் உச்சக் கட்டத்தில் பிரிட்டனில் இருந்து தேறிய மூலதன வெளியேற்றம் 9 வீத மொத்த தேசிய உற்பத்தியாக விளங்கியது ( ) இது கிட்டத்தட்ட பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்தில் இருந்து வெளியேறிய அளவுக்கு உயர்ந்து காணப்பட்டது. இது 1980பதுகளின் நடுப் பகுதியிலும் கடைப் பகுதியிலும் ஜேர்மனியிலும் யப்பானிலும் நடைமுறைக் கணக்கு உபரிகள் நூற்றுக்கு 4.5 வீதம் வரை அதிகரித்திருந்த அளவுடன் ஒப்பிடுகின்றது.முதலாம் உலக யுத்தத்துக்கு முன்னர் தனியார் மூலதனம் கட்டுப்பாடற்ற விதத்தில் நகர்ந்தது. கணிசமான அளவு வெளிநாட்டு நேரடி முதலீடு இருந்த போதிலும் இதில் பெரும்பகுதி புதிய உலகத்தின் புகையிரத பாதைகளையும் மற்றும் கட்டுமானங்களையும் நிதியீட்டம் செய்யும் கடன்பத்திரங்களாகப் பாய்ந்து வந்தது. "

ஆனால் இந்த அனைத்துலகமயப் போக்கானது உற்பத்திச் சக்திகளை ஒரு அமைதியான அபிவிருத்திக்கு இட்டுச் செல்லவில்லை. மாறாக இது உலக முதலாளித்துவம் வீழ்ச்சி காணச் செய்ததோடு முதலாம் உலக யுத்தத்தையும் வெடிக்கச் செய்தது. அத்தோடு இது ஒரு பாரதூரமான அரசியல் விளைவுகளையும் கொண்டிருந்தது. யுத்தத்துக்கு முன்னைய காலப்பகுதியில் 'தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் மேலாதிக்கம் கொண்டிருந்த இரண்டாம் அகிலத்தின் கட்சிகளதும் தொழிற்சங்கங்களதும் தேசிய சீர்திருத்தவாத முன்நோக்கின் நிச உள்ளடக்கம் யுத்தத்தின் வெடிப்புடன் இந்த அமைப்புக்கள் தமது சொந்த ஆளும் வர்க்கங்களை ஆதரிக்கச் சென்றதும் அம்பலமாகியது.

மேலும் பொருளாதாரப் போக்கின் அனைத்துலகமயமாக்கத்தினால் உருவான முதலாளித்துவத்தின் வரலாற்று நெருக்கடியின் வெடிப்பும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான யுத்த வடிவினை எடுத்தமையும் சமூக குமுறல் வெடிப்புக்களின் எழுச்சியை உருவாக்கிய இது தொழிலாளர் இயக்கத்தில் தேசிய சந்தர்ப்பவாதத்துக்கும் சோசலிச அனைத்துலகவாதத்துக்கும் இடையேயான சக்திகளின் சமபலநிலையை மாற்றிவிட்டது. யுத்தத்தின் ஆரம்பத்தில் ஒரு தனிமைப்பட்ட சிறுபான்மையினராக விளங்கிய லெனின், ட்ரொட்ஸ்கி தலைமையிலான அனைத்துலகவாதப் போக்கானது , ரூஷ்யாவில் ஒரு கிளர்ந்து வந்த தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைக்கு வந்ததோடு, முதலாவது வெற்றிகரமான சோசலிச புரட்சிக்கும் தலைமை கொடுத்தது. இது ஒரு புதிய அகிலத்தை மூன்றாம் அகிலத்தை ஸ்தாபித்தது. இது ஒரு சில வருட கால இடைவெளிக்குள் உலகம் பூராவும் இருந்த மிகவும் வர்க்க நனவு கொண்டதும் புரட்சிகர உணர்வு கொண்டதுமான தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் விசுவாசத்தை கொண்டிருந்தது.

1920பதுகளும் 1930பதுகளும் ஒரு புறத்தில் உலக முதலாளித்துவ அமைப்பின் யுத்தத்துக்கு முன்னைய சமபலநிலையை மீளப்பெற்றுக் கொள்ள முடியாத முதலாளி வர்க்கத்தின் இயலாமையையும் மறுபுறத்தில் தலைமையின் காட்டிக் • கொடுப்புக்கள் காரணமாக முதலில் சமூக ஜனநாயகமும் பின்னர் ஸ்டாலினிசமும் அனைத்துலக முதலாளி வர்க்கத்தை தூக்கிவீச முடியாத தொழிலாளர் வர்க்கத்தின் இயலாமையையும் குறித்து நின்றது.

ஒரு தங்க நியமத்தின் மூலம் யுத்தத்துக்கு முன்னைய நிலைமையை மீள நிர்மாணிக்க எடுத்த முயற்சிகள் தகர்ந்து போயின. கடந்த காலத்தைப் போல பிரிட்டன் தொடர்ந்தும் உலக நிதி அமைப்பை ஆதரிக்கக் கூடிய இயலளைபைக் கொண்டிருக்கவில்லை. அமெரிக்காவினால் இன்னமும் அதைச்செய்ய இயலவில்லை. அனைத்துலக வர்த்தகம் வீழ்ச்சி கண்டது. 1929க்கும் 1932க்கும் இடைப்பட்ட காலத்தில் அது மூன்றில் இரண்டு பங்காகச் சுருங்கியது. அனைத்துலக மூலதனத்தின் பாய்ச்சல்கள் நின்று போயிற்று. உலகம் பொருளாதார மந்தத்தினுள்ளும் பின்னர் யுத்தத்தினுள்ளும் மூழ்கடிக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஆரம்பித்த பொருளாதார மீள்நிர்மாண போக்குக்கள் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் யுத்தத்துக்கு முன்னைய கூட்டு அமைப்பை மறுசீரமைப்பதில் வெற்றி பெறவில்லை. பல வழிகளில் இது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் உலக முதலாளித்துவத்தை வீழ்ச்சிக்கு இட்டுச்சென்ற அதே அனைத்துலகப் போக்கின் இயக்கத்தைத் தடுக்க தேசிய அரசினைப் பயன்படுத்தும் ஒரு முயற்சியாக விளங்கியது.

அமெரிக்காவின் நெறிப்படுத்தலின் கீழ் யுத்தத்துக்கு முன்னைய வர்த்தக கூட்டுக்கள் வளர்ச்சி கண்ட விதத்தில் கலைக்கப்பட்டது. கார்ட்டல்களினாலும் சுங்க வரிகளினாலும் பிரிக்கப்பட்ட ஐரோப்பிய சந்தை இணைக்கப்பட்டது. 1930பதுகளில் அடியோடு ஸ்தம்பித்துப் போன அனைத்துலக வர்த்தகம் மீண்டும் விரிவுகாணத் தொடங்கியத்து. பிரெட்டன்வூட் அமைப்பு-இதைப் பற்றி நாம் பின்னர் விரிவாக ஆராய்வோம் வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றதோடு அழிவுமிக்க நாண்ய மதிப்பிறக்க யுத்தங்களின் அச்சுறுத்தல்களை நீக்கி, ஒரு நிலையான விகிதத்தில் நாணயங்கள் மாற்றப்படுவதை ஊர்ஜிதம் செய்தது.

எவ்வாறிருப்பினும் மூலதனத்தின் அனைத்துலக நகர்வு 1914க்கு முன்னைய காலப்பகுதியின் பண்புகளை கொண்ட காலப்பகுதி புதுப்பிக்கப்படவில்லை. உண்மையில் புதிய அமைப்பின் சிற்பிகள்-குறிப்பாக ஹரி டெக்ஸ்டன் வைட்டும்( ) ஜோன் மேனார்ட் கீன்சும்( ) மூலதனத்தின் அனைத்துலக நகர்வானது 1930பதுகளின் வீழ்ச்சிக்கு நேரடியாக இட்டுச் சென்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். சமூக சேமநல நடவடிக்கை வேலைத்திட்டங்களும் அரசாங்க செலவினங்கள் மூலம் கேள்வியை (demand) ஊக்குவிப்பதும் பிரமாண்டமான வேலையின்மை ஏற்படுவதைத் தடுக்க அவசியம் என இவர்கள் வாதிட்டனர். மூலதனம் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்கு சுதந்திரமாக நகர இடம் கிடைக்குமானால் இதைத் தடுக்க முடியும் என்றனர். 1930பதுகளில் தமது கோட்பாடுகளை.முன்வைத்து பேசுகையில் கீன்ஸ் வலியுறுத்தியது போல் பண்டங்களும் கருத்துக்களும் அனைத்தலக ரீதியாக நகர்கையில் மூலதனம் "கைத்தறி"யாக அவசியம் என்றார்.

யுத்தத்தின் பின்னைய உலக முதலாளித்துவத்தின் மறுநிர்மாணத்தின் மையத்தில் மூலதனத் திரட்சிக்கான கவர்ச்சிப் புள்ளியாக தேசிய பொருளாதாரத்தின் புனருத்தாரணம் விளங்கியது. இது அதற்குப் பதிலாக சமூக ஜனநாயகக் கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் அரசினை இயக்குவதில் இணைத்துவிட்டது. அவர்கள் சமூக சீர்திருத்தவாத கீன்சிய வேலைத்திட்டங்களதும் தேசிய பொருள்ாதார விதிகளதும் நிர்வாகிகளாகினர்.

பிரெட்டன்வூட்ஸ் அமைப்பானது 1914ல் முதலாளித்துவத்தை வீழ்ச்சிக்கு இட்டுச் சென்ற பொருளாதாரச் சக்திகளை தடுக்கும் ஒரு முயற்சியாக இருந்த வேளையில் அதனால் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் முரண்பாடுகளில் இருந்து தலையெடுத்துவிட முடியவில்லை.1971ல் அமெரிக்க டாலருக்கு இருந்து. வந்த தங்க பின்னணி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் அடிப்படை தகர்க்கப்பட்டதோடு 1973ல் இருந்து மிதக்கும் நாணய மாற்றுவீதம் கடைப்பிடிக்கப்பட்டது.

## தேசிய விதி

நிலையான நாணயமாற்று வீதம் மீறப்பட்டு தேசிய விதிகளின்வரம்புகள் உடைக்கப்பட்டது.அதைத் தொடர்ந்து வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. பெரும் முதலாளித்துவ நாடுகள் மூலதன நுகர்ச்சி மீது தாம் கொண்டிருந்த கட்டுபபாடுகள கககவிட்டன.ஜேர்மனியும் அமெரிக்காவும் 1975-75லும் பிரித்தானியா 1979லும் ஜப்பான் 1980ம் ஆண்டிலும் ஏனய ஐரோப்பிய நாடுகள் 1980பதுகளிலும் கவிட்டன.அபிவிருத்தியையும் நாடுகள் எனப்பட்டவை அதிகரித்த விதத்தில் மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொணர்ந்தன. அவற்றின் தேசிய ஒழுங்கமைப்பு பொறிமுறைகள நிறுத்திக் கொண்டன.

1971 73ல் பிரெட்டன்வூட்ஸ்அமைப்பு வீழ்ச்சி கண்டதும் கீன்சும் ஏனயோரும் முதல்ாளித்துவ ஒழுங்கு நிலைப்பாட்டுக்கு ஒரு ஆபத்தானதாகக் கண்ட அனத்துலக மூலதனப் பாய்ச்சல் போக்கானது துரிதமான வீதத்தில் அதிகரிததது.

1980ல் பல முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 வீதமாக விளங்கிய எலல்லகளுக்கு ஊடான பொண்டுகளதும் பங்குகளதும் கொடுக்கல் வாங்கல்கள் 1995ல் 100 வீதங்களையும் தாண்டின.1980பதுகளின்அர இறுதியிலும் 1990களின் முதல் அர இறுதியிலும் கடதாசி முதலீடுகளின் பாய்ச்சலும் வெளிநாட்டு முதலீடுகளும் முன்னேறிய நாடுகளில் மூன்று மடங்காக பெருகியது. அதேவேளையில் இதற்கிடையே 1984 90க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெரும் கைத்தொழில் நாடுகளில் இருந்து நேரடி வெளிநாட்டு முதலீடு நான்கு மடங்காகியது.

இந்த நூற்றாண்டின் பொருளாதார வரலாற்றை சுருக்கமாக ஆய்வு செய்யுமிடத்து அது இன்று இடம்பெற்றுவரும் பூகோளரீதியான பரிணாமங்களின் சிறப்பு முக்கியத்துவத்ந்த தெளிவுபடுத்துகின்றது. ஒரு தொக பொருளாதார, அரசியல் காரணிகளால் பல தசாப்தங்களாக அனைத்துலகமயமாக்கல் போக்குக்கள் தடைசெய்யப்பட்டதன் பின்னர் கடந்த இரண்டு தசாப்தங்களாக உலக மூலதனம் 1914க்கு முன்னர் இது ஆரம்பித்த பாதையக் காட்டிலும் பெரிதும் துரிதமான முறையில் அபிவிருத்தி கண்டுள்ளது. இதன் பெறுபேறுகள் பெரிதும் குமுறல் மிக்கவைகள்ாக விளங்கும்.

—தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னாம் ஏற்றுமதி வலயத்தில் வேலைநிறுத்தம்

வியட்னாம் ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தில் வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெடித்துள்ளன. இது வியட்னாம் ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை மேலும் சிக்கலாக்கி உள்ளது. உலகிலேயே குறைந்த சம்பளம் வழங்கப்படுவதும் ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் முதலீடுகளால் பெரிதும் கவரப்பட்டுள்ளதுமான வியட்னாமில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி வேலைத்தலங்களில் ஒரு இராணுவமயமாக்கப்பட்ட ஆட்சிமுறையைக் கொண்டுள்ளது. குறிப்பாக ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களில் இது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களில் வேலைநிறுத்தங்கள் அரசாங்கத்தினாலும் தொழிற்சங்க அமைப்புக்களாலும் ஒழுங்கு முறையாக நசுக்கப்பட்டு வருகின்றது.

இருந்த போதிலும் 1997ல் இந்த ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தில் 2000க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். 1995ல் இருந்து பல வேலைநிறுத்தங்கள் தெற்கு கைத்தொழில் வலயங்களில் இடம்பெற்ற போதும் ஹொசிமின் நகரில் (சைகோன்) உள்ள ஏற்றுமதி வலயங்களில் 400க்கும் அதிகமான தொழிலாளர்கள் இரண்டு வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டனர். இப்போராட்டங்கள் 1997 ஜூன் 24ல் ஆரம்பமாகின.

இந்த இரண்டு வேலைநிறுத்தங்களும் நூற்றுக்கு நூறுவீதமும் தாய்வானியருக்கு சொந்தமான பக்டரிகளிலேயே இடம்பெற்றுள்ளன.டெல்பி: இது ஒரு சப்பாத்து பக்டரி. ரோன் மை: இது ஒரு கையுறைத் தயாரிப்பு பக்டரி. இங்கு இடம்பெற்றுள்ள சம்பவங்கள் ஸ்டாலினிஸ்டுகளால் இந்த வேலைத்தலங்களில் திணிக்கப்பட்டுள்ள காட்டுமிராண்டி வேலைநிலைமைகளைக் காட்டுகின்றது. இவர்கள் பெரும் கம்பனிகளுடன் கூட்டாகவோ அல்லது அவற்றின் சார்பிலோ இவற்றை செய்கின்றனர்.

டுவான் துவான் ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தைப் பொறுத்தமட்டில் ஸ்டாலினிச அரசாங்கம் தாய்வானின் பேர்போன கம்யூனிச எதிர்ப்பு ஆளும் கட்சியான குவாமிங்டானுடன் நேரடியாகக் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளது. அக்கட்சி இந்த வலயத்துக்கான நிதியீட்டம் செய்வதோடு அதைக் கட்டுப்பாட்டிலும் கொண்டுள்ளது.

1997 ஜூன் 24ம் திகதி 200க்கும் அதிகமான தொழிலாளர்கள் டெல்பி வேலைதலத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். தாய்வானிய மேற்பார்வையாளர்களால் தம்மீது விதிக்கப்பட்ட மானக்கேடான தண்டனைகளை எதிர்த்தே அவர்கள் வெளிநடப்புச் செய்தனர். இது அவமானங்கள் வாய்மூலமும் உடல் ரீதியிலும் ஏற்படுத்தப்பட்டவை. அத்தோடு அவர்கள் நீண்ட நேரம் கியூவில் நிறுத்தப்பட்டு மழையில் நிற்குமாறு தள்ளப்பட்டனர்.

அத்தோடு தொழிலாளர்கள் பலாத்காரமான மேலதிக நேர வேலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியும் வேண்டினர். அதைத் தொடர்ந்து வந்த மாதங்களில் பக்டரி நிர்வாகம் தொழிலாளர்களின்

வேலைத்தலத்தில் ஒவ்வொரு வேலைமுறைக்குப் பின்னரும் மேலதிகமாக 4 மணித்தியாலங்கள் வேலைசெய்யும்படியும் நெருக்கியது. ஆனால் இந்த நேரத்துக்கு எந்தவிதமான மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்பட்டது கிடையாது. இதைச் செய்ய மறுத்தோர் ஒரு நாளைக்கு 20000 டொங்( 2.70 டாலர்கள்) தண்டனை விதிக்கப்பட்டனர். இது நாட் சம்பளத்தை விட அதிகம்.கழிவறையில் நிற்பதாக அல்லது ஓய்வெடுப்பதாக கண்டுபிடிக்கப்பட்டோர் ஒவ்வொரு தடவையும் 50000 டொங்( 6.75 டாலர்) தண்டனை விதிக்கப்பட்டனர். இது அவர்களின் மாதச் சம்பளத்தில் அரைப் பங்கை கழித்துக் கொள்ளச் செய்தது.

டோன் மை பக்டரியின் பணிப்பாளர் ஜூன் 23ம் திகதி ஒரு கட்டளையை விடுத்தார். ஜூன் மாத இறுதிக்கு முன்னர் சம்பளக் கொடுப்பனவு முறை மாற்றப்படும் எனவும் ஏதும் பாக்கிச் சம்பளம் இருப்பின் அது செலுத்தப்படாது எனவும் அறிவிக்கப்பட்டது. மறுநாள் இதனை ஆட்சேபிக்கும் வகையில் 200க்கும் அதிகாமான தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். முழுச் சம்பள கொடுப்பனவை கோரிய தொழிலாளர்கள் சம்பள முறை மாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டும் எனவும் வேண்டினர்.

# ஜேர்மனியில் 40000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

பெப்பிரவரி 6ம் திகதி ஜேர்மனியின் வேலையின்மை அலுவலகத்துக்கு எதிரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடு தளுவிய ரீதியில் சுமார் 40000 மக்கள் கலந்து கொண்டனர். அவர்களின் ஆர்ப்பாட்டமும் அரசாங்கம் வேலையற்றவர்களின் உத்தியோகபூர்வமான புள்ளிவிபரத்தை வெளியிட்டதும் ஒன்றுடன் ஒன்று இணைந்த விதத்தில் இடம்பெற்றன.இறுதியாக வெளிவந்த புள்ளிவிபரங்களின் படி வேலையற்றோர் தொகை 4,823,000 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 20 இலட்சம் வேலையற்றோர் இந்த உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களில் கணிக்கப்படவில்லை.ஏனெனில் அவர்கள் ஒன்றில் பதிவு செய்து கொள்ளவில்லை. அல்லது அவர்கள் முன்கூட்டி ஓய்வு, மறுபயிற்சி திட்டங்கள் அல்லது தொழில் தேடிக் கொள்ள முடியாதவர்களுக்கான அரசாங்கத்தின் திட்டங்கள் மூலம் மூடி மறைக்கப்பட்டு விட்டனர்.

1932 33 ன் பின்னர் ஜேர்மனியில் இவ்வளவு பெருந்தொகையானோர் வேலையின்றி இருந்தது கிடையாது. கிழக்கு ஜேர்மனியில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்து கொண்டுள்ளது. இது 21.1 வீதமாக உள்ளது. 1997 ஜனவரியில் இருந்து கிழக்கு ஜேர்மனியில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 180000ஆல் அதிகரித்துள்ளது. இப்போது இது 1.6 மில்லியனாக இருந்து கொண்டுள்ளது. பல ஜேர்மன் நகரங்களில் வேலைசெய்யும் வயதை அடைந்த நால்வரில் ஒருவர் வேலையில்லாமல் உள்ளனர்.

வேலையற்றோர் தொகையில் இந்த ஆண்டு ஒரு பெரும் அதிகரிப்பு காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் செலவினங்கள் சமஷ்டி அரசாங்கத்தினாலும் மாநில, உள்ளூராட்சி அரசாங்கங்களாலும் கடுமையாக வெட்டப்பட்டு இருப்பதே காரணம். கிழக்கு ஜேர்மனியில் வேலைவழங்கும் திட்டங்கள் எனப்பட்டவை பல ஒரு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மோட்டார் கார் கைத்தொழிலில் சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர் வேலை இழப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.இவர்கள் இன்றைய மோட்டார்க் கார் கைத்தொழில் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர்.

இன்றைய எதிர்ப்புக்கள் பெருமளவுக்கு சான்சலர் ஹெல்மட் கோலின் அரசாங்கத்துக்கு எதிராகவே திருப்பப்பட்டுள்ளன. சமூக ஜனநாயகக் கட்சிக்குப் பதிலாக கோல் 1982ல் ஆட்சிக்கு வந்த போது மேற்கு ஜேர்மனியில் வேலையின்மை 1.8 மில்லியன்களாக இருந்தது. அன்று தொடக்கம் இது மேலும் அதிகரித்துள்ளது. 1991ல் முன்னைய ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில்( ) 900000 பேர் வேலையின்றி இருந்தனர். 1995 96ல் வேலையின்மை 1930பதுகளின் அதிகரித்த மட்டத்தைத் தொட்டபோது சான்சலர் கோல் தொழில்கொள்வோர்களுடனும் தொழிற்சங்கங்களுடனும் சேர்ந்து 'இது 2000ஆண்டுகளில் வேலையற்றோர் வீதம் அரைவாசியாகக் குறைக்கப்படும்' என வாக்குறுதி வழங்கினார்.

சில வேலையற்றோர் குழுக்கள் பிரான்சிய மாதிரியைப் பின்பற்றி ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தன. இதில் சில வேலையற்றோர் அலுவலகங்களும் சமூக பாதுகாப்பு அலுவலகங்களும் மக்களால் உள்ளமர்வுக்கு உள்ளாகின. இங்கு அடிக்கடி ஒலித்த சுலோகம்ட 'பிரான்சிய சூழ்நிலைகளையும் அமெரிக்க நிலைமைகளையும் காட்டிலும் மோசமானது' என்பதேயாகும்.

பல வருடங்களாக தொழிற்சங்கங்கள் இந்த வேலையின்மை குழுக்களுக்கு எதிர்ப்புக் காட்டி வந்தன. ஆனால் இந்தத் தடவை ஆர்ப்பாட்டங்களைத் தம் கட்டுப்பாட்டின் கீழக் கொண்டுவருவதற்காக அவற்றுடன் மென்மையாக நடந்து கொண்டன.

## பொஸ்னியா

# அமெரிக்க படைகளின் காலக்கெடு மீண்டும் நீள்கிறது

அமெரிக்க பில் கிளின்டன் ஆட்சியாளர்கள் பொஸ்னியாவில் தங்கியுள்ள அமெரிக்கப் படைகளின் காலக்கெடுவை மீண்டும் காலவரையறையின்றி நீடித்துள்ளது. இவற்றின் வாபசுக்கான வாக்குறுதிகள் ஏற்கனவே இரண்டு தடவைகள் வெள்ளை மாளிகை ஆட்சியாளர்களால் கௌரவிக்கப்படவில்லை. கடந்த டிசம்பர் 18ம் திகதி வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாடு உலகின் சகல மூலை முடுக்குகளிலும் வாஷிங்டனின் இராணுவத் தலையீடு வளர்ச்சி கண்டுள்ளதை அறிவித்தது.

1995ம் ஆண்டின் டேற்றன் உடன்படிக்கை தொடக்கம் பல்லாயிரக் கணக்கான அமெரிக்கப் படைகள் நேட்டோ படைகளின் கீழ் அமெரிக்கா தலைமையில் இங்கு இருந்து கொண்டுள்ளன. 30000 க்கும் அதிகமான படைகளுள் இவர்களின் எண்ணிக்கை 8500க்கும் அதிகம் எனச் சொல்லப்படுகின்றது.

1996ன் இறுதியில் இந்த அமெரிக்கப் படைகள் வாபஸ்பெறப்பட்டுவிடும் எனக் கிளின்டன் முதலில் வாக்குறுதியளித்திருந்தார். அவர் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டதுதான் தாமதம் இவர்கள் 1998 ஜூன் வரை தொடர்ந்து இருப்பர் என அறிவித்தார்.

இப்போது வெள்ளை மாளிகை, அமெரிக்கப் பயணத்தை பூர்த்தி செய்ய நாள் குறிக்க முடியாது என அறிவித்துக் கொண்டுள்ளது. கிளின்டன் பொஸ்னியாவில் உள்ள அமெரிக்க படைகளை மீளாய்வு செய்ய என 1997 டிசம்பர் கிறிஸ்மஸ் காலத்தில் ஜனாதிபதி பதவி போட்டி வேட்பாளர் பொப் டோலுடன்(குடியரசுக் கட்சி) பொஸ்னியா சென்றிருந்தார்.

இந்தக் கால நீடிப்புக்கு ஆதரவாக கிளின்டன் இருமுனை வாதங்களை முன்வைத்தார். முதலாவது , நேட்டோ ஆக்கிரமிப்பு படைகள் இந்தப் பணியை முடிவுக்குக் கொணர்வதில் மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. வீதிகளையும் பாடசாலைகளையும் அரசியல் விதிமுறைகளையும் மீள அமைக்க உதவி வருகின்றது. அதே சமயம், அவர் இந்த முன்னேற்றம், பின்வாங்கச் செய்ய முடியாதவை அல்ல என வாதிட்டார்.

பொஸ்னியா தொடர்ந்தும் இனக்குழு அடிப்படையில் பிளவுபடுத்தப்பட்ட நாடாக இருந்து கொண்டுள்ளது. இணைந்த தபால் சேவை கூட இல்லாமலேயே அது இருந்து வருகின்றது. உள்நாட்டு யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட 20 இலட்சம் அகதிகளில் 20வீதத்துக்கும் குறைந்தவர்கள் மட்டுமே தமது வீடுகளுக்கு திரும்பிக் கொள்ள முடிந்துள்ளது. சேர்பிய , குரோஷிய, பொஸ்னிய முஸ்லீம் படைகள் ஒரு எதிர்கால மக்கள் படுகொலைகளுக்கான ஆயுத சேகரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன.

பொஸ்னியாவினுள் இந்த அமெரிக்கப் படைகளையும் உள்ளடக்கிய நேட்டோ படைகளின் நடவடிக்கைகள் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு சமானமானதாக இருந்து கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவு குழந்தைகள்: தடையும் எதிர்ப்பும்

வருண அழககோன்

புகழ் பெற்ற எழுத்தாளரான சல்மன் ருஷ்டியின் நள்ளிரவுக் குழந்தைகள் (Midnight Children) என்ற பிரசித்திபெற்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு பீ.பீ.சி.யால் இலங்கையில் இடம் பெற இருந்த தொலைக்காட்சி படப்பிடிப்புக்கள் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் சமீபத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடை இஸ்லாமிய அடிப்படைவாதிகளதும் முதலாளிகளதும் அவர்களது ஒரு பிரிவினரான அரசாங்க அமைச்சர்களதும் யூ.என்.பி.எம்.பீக்கள் உட்பட்ட கும்பல்களதும் தலையீட்டைத் தொடர்ந்தே இடம்பெற்றுள்ளது.

இந்திய அரசாங்கம் அந்நாட்டினுள் இப்படப்பிடிப்பு இடம்பெறுவதைத் தடை செய்தமை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்நடவடிக்கைக்கு சாதகமான ஒரு காரணமாக கூறிக் கொள்ளப்படுகின்றது. நள்ளிரவுக் குழந்தைகள் (Midnight Children) நூலின் ஆசிரியரான சல்மன் ருஷ்டியின் மற்றொரு படைப்பான சாத்தானின் வசனங்கள் (Satanic Verses) மூலம் தமது மதம் அவமானம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறி உலகம் பூராவும் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அவருக்குக் காட்டிக் கொள்ளும் ஆக்ரோஷம் மிக்க தாக்குதல்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் இந்தத் தடைக்குக் காரணமாகி உள்ளது.

வெளிவாரியான நிலைமைகள் இப்படி இருக்க இதற்கு அப்பால் நிஜ காரணிகள் இருந்து கொண்டுள்ளன. இந்த நாடுகளில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இரத்தக் களரிகள் மூலம் தமது உயிரைப் பிடித்து வைக்கத் துடிக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவக் கும்பல்கள் பெரும் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன.

நள்ளிரவு குழந்தைகள் தடை அதை நனவான முறையில் ஆய்வு செய்யும் சகல தொழிலாளர்களதும் கலைஞர்களதும் புத்திஜீவிகளதும் பெரும் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உள்ளாக வேண்டும். இந்தத் தடை கடைகெட்ட தன்மைகளை சூல் கொண்டுள்ளது. அதன் மூலம் இரண்டு விடயங்களைச் சந்திக்குக் கொணர்கின்றது. முதலாவதாக மதம் என்பது, பொதுமக்களின் உரிமைகளை ஒடுக்கித் தள்ளும் அதிகாரத்தை ஊர்ஜிதம் செய்யும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் ஆயுதமாகச் செயல்படுகின்றது. மறுபுறத்தில் மனித இனத்தின் இளமையும் உணர்ச்சியும் கொண்ட துறைகளுக்குரிய எந்த ஒரு கலைப் படைப்புக்கள் சம்பந்தமாகவும் இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் காட்டும் கசப்பு புலனாகின்றது. நிகழ்வில் வெளிப்பாடாகும் கொடியதும் கடைகெட்டதுமான தன்மை முதலாளி வர்க்க சமூக அமைப்பில் இருந்து கொண்டுள்ள நிஜ தன்மையையும் அது கலை தொடர்பாகக் காட்டிக் கொள்ளும் பீதியையும் பிரத்தியட்சமாக்குகின்றது. ஆதலால் அது அப்படி இடம் பெறக் காரணம் என்ன? இதை ஆராய்ந்து பார்ப்பது வீழ்ச்சி கண்டு வரும் முதலாளித்துவத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் கலை, புத்திஜீவி படைப்புக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும், மனித இனத்தின் கலாச்சாரத்தின் மேற்சொன்ன துறைகளின் வரலாற்று மரபுகளையும் கட்டிக் காப்பதற்கு மிகவும் தீர்க்கமானது.

இலங்கையில் படப்பிடிப்பு இடம்பெற இருந்த பீ.பீ.சி. தொலைக்காட்சி நாடகம் சலீமின் கதை (Saleem's Story) எனப் பெயர் சூட்டப்பட்டு இருந்தது. நெக் டெயிலரின் திரைக் கதை வசனத்துக்கு இணங்க இது கிறிஸ்டீன் பவரினால் நெறிப்படுத்தப்பட இருந்தது. ஐந்தரை மணித்தியாலங்கள் நீண்டு செல்லும் இந்த ரெலி நாடகத்துக்கும் சல்மன் ருஷ்டிக்கும் இடையேயான ஒரே உறவு, டெயிலரின் திரைக் கதை வசனத்தின் அடிப்படையான நள்ளிரவுக் குழந்தைகள் நாவலின் ஆசானாக அவர் இருப்பதே.


சல்மன் ருஷ்டி இந்தியாவில் பிறந்த போதிலும் அவர் ஒரு பிரித்தானியப் பிரஜை. அவரின் சாத்தானின் வசனங்கள் என்ற நாவல் வெளியான நாளில் இருந்து அதை எதிர்த்த இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானவர். இதனால் அவர் தலைமறைவாக வாழ நேரிட்டது. 1989ன் ஆரம்பத்தில் ஈரான் தலைவர் அயதுல்லா கொமெய்னியால் ருஷ்டிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவரின் நூல் உலகின் பல நாடுகளிலும் இலங்கை உட்பட தடை செய்யப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்த மரண தண்டனையை அங்கீகரித்ததுடன் மட்டும் நின்றுவிடவில்லை. நாட்டின் புத்தகசாலைகளில் இருந்தும் இந்நூலை அகற்றிவிடவும் இதன் மூலம் வழிவகுத்துக் கொடுத்தனர்.

சல்மன் ரூஷ்டியின் நள்ளிரவுக் குழந்தைகள் என்ற நாவல் இந்திய சுதந்திரப் போராட்டம், இந்திய பிரிவினை, 1971ல் பாகிஸ்தான் பங்களாதேஷ் பிளவு ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். இந்நூலுக்கு 1981ல் புக்கர் பரிசு கிடைத்ததோடு தொடர்ந்தும் ஜனரஞ்சக நூலாக இருந்து வந்ததன் காரணமாக 1993ல் புக்கர் ஒவ் புக்கர்(   ) என்ற பரிசும் சல்மன் ருஷ்டிக்கே கிடைத்தது. இதுவரையில் 25 உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நள்ளிரவுக் குழந்தைகள் 50 இலட்சம் வாசகர்களால் வாசிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ரெலி நாடகமாக தயாரிக்கப்பட இருந்த இந்த நாவல் முதலில் இந்திய முதலாளிகளதும் இஸ்லாம் அடிப்படைவாதிகளதும் எதிர்ப்பினைச் சாட்டாகக் கொண்டு அன்றைய தேவ கௌடாவின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் படப்பிடிப்புக்கள் இறுதி நிமிடத்தில் தடை செய்யப்பட்டன. இதன் பின்னரே இலங்கை பட்டப்பிடிப்புக்கான இடமாகத் தெரிவு செய்யப்பட்டது.

இலங்கையில் முதலில் படப்பிடிப்புக்களுக்கான அங்கீகாரம் கிடைத்து இருந்தது. அமைப்பாளர்கள் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இறுதிக் கட்டத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் படப்பிடிப்பு தடைக் காட்டை எடுத்து அடித்தது.

சுதந்திரம் எனப்படுவதன் பொன் விழாவை கொண்டாடும் இந்திய முதலாளி வர்க்கம் அந்த சுதந்திரத்தின் இரத்தக் களரிகளை பின்னணியாகக் கொண்ட ஒரு நாவல் ரெலி நாடகமாவதையிட்டு கிலி அடைந்ததை இது அம்பலமாக்குகின்றது. இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியாளர்களின் நிலைமையும் இதற்குச் சமமானதே. இலங்கையின் சுதந்திரம் எனப்படுவதன் வங்குரோத்து நன்கு பிரசித்தமானது. இந்த விடயங்களையிட்டு கவனம் செலுத்தும் போது இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு எந்த விதத்தில் இந்த தடை ஒரு முக்கிய அங்கமாக தலை


சல்மன் ருஷ்டி

நீட்டியது என்பது தெரியும். மத அடிப்படைவாதிகள் முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தத் தேவைகளுக்கு தமது சேவையை வழங்க முன்னணிக்குப் பாய்ந்து கொண்டுள்ளனர். பொதுமக்களுக்கு எதிராக இந்த தணிக்கையையும் தடையையும் நடைமுறைப் படுத்த அவசியமான கைத்தேங்காயாக விளங்கி உள்ளன.

## எதிர்ப்பின் வகைகள்

இந்தத் தடைக்கு எதிராக இலங்கையிலும் கலைஞர்கள், புத்திஜீவிகள், கலாச்சார துறை சார்ந்தோர் ஆகியோரிடையே எதிர்ப்புத் தோன்றி உள்ளது. அத்தோடு இன்னும் பல்வேறு குட்டி முதலாளித்துவக் குழுக்கள் பல்வேறு வகையறாக்களைச் சேர்ந்த எதிர்ப்புக்களையும் தூக்கி வீசியுள்ளனர். இந்த நிலைமையினுள் கலைஞர்கள் உட்பட்ட பகுதியினர் கையொப்பம் இட்ட பெட்டிசம் ஒன்றும் இந்த தடைக்கு எதிராக வெளிப்பட்டது. "அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்படும் வெளியீட்டுச் சுதந்திரம் பற்றிய லிபரல் கொள்கை"க்கு அழைப்பு விடுத்து இந்தப் பெட்டிசம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"முன்னர் எடுத்த தீர்மானம் சரியானதெனவும் அதை நீக்குவது பிறர் கருத்துக்களை சகிக்காமையை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாதத்துக்கு கீழ்ப்படும் ஒரு சில முஸ்லீம் அரசியல்வாதிகள் குழுவின் அனாவசியமான நெருக்குவாரத்தின் பெறுபேறாக எடுத்த தீர்மானம் ஆகும் எனவும் நாம் எண்ணுகின்றோம்"

இது முழுப் பிரச்சினையையும் குழப்பியடித்து அத்தாக்குதலுக்கு எதிராகத் தலைநீட்டக் கூடிய நிச எதிர்ப்பினை செயலிழக்கச் செய்வதை இலக்காகக் கொண்டது. இந்த எதிர்ப்பு எனப்படுவது தடையை சாட்டாகக் கொண்டு இனவாத, மதவாத மோதுதல்களை தூண்டிவிடுவதை இலக்காகக் கொண்டே தலைநீட்டி உள்ளது. இந்த "எதிர்ப்பைக்" கணக்கில் எடுக்காமல் இருந்து விடக் கூடாது. இந்த எதிர்ப்பின் பேச்சாளர்களின் நிலைப்பாட்டை பொதுவில் பின்வரும் விதத்தில் சுருக்கிக் கூற முடியும்.

"முஸ்லீம்கள் என்போர் மதத்தின் அடிப்படையில் உலகம் பூராவும் ஆதிக்கம் செலுத்த முயலும் பெரும் பயங்கரமான ஒரு இனம். அவர்கள் உலகில் எங்கு இருந்தாலும் அதற்காக ஒன்றுபட்டு செயற்படுகின்றார்கள். கடைசியில் சிங்களவர்களுக்கு இதுவும் இல்லாமல் போய்விடும். இந்தத் தடை சாத்தானின் வசனங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட உள்ள ரெலி நாடகத்துக்கு விதிக்கப்பட்டதானால் தடை செய்தாலும் பரவாயில்லை. அதை தயாரிப்பது ருஷ்டி என்றால் எங்கென்றாலும் பரவாயில்லை. ஆனால் அது இரண்டும் இல்லாத பீ.பீ.சி. படைப்பைத் தடைசெய்கையில் கட்சி வேறுபாடு இல்லாமல் அவர்கள் செயற்பட்ட விதத்தின்படி முஸ்லீம்கள் சிறுபான்மையினர் என்றாலும் எந்தளவு பலம் வாய்ந்தவர்கள் என்பதே. இலங்கையின் கிறிஸ்தவர்ளோ அல்லது பௌத்தர்களோ கலைப் படைப்புக்கள் சம்பந்தமாக என்றும் இங்ஙனம் கணித்துக் கொண்டதில்லை."

மற்றொரு சாரார் இதைவிட சற்று ஏறவோ அல்லது இறங்கவோ இன்னொரு வகையான எதிர்ப்பைக் காட்டுகின்றார்கள். அதைப் பின்வருமாறு வடித்துக் கூறலாம்:

இந்த தயாரிப்பை தடை செய்ததன் மூலம் அரசாங்கம் பெரும் நஷ்டம் கண்டுள்ளது. இலங்கைக்குக் கிடைக்க இருந்த 4.5 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கைநழுவிப் போயுள்ளது. இது என்ன கசுக் கொட்டையா? அல்லது பலாக் கொட்டையா? இலங்கையின் சினிமாக் கைத்தொழில் ஆதாள பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. நாளை மறுநாள் டெலி நாடகங்களுக்கும் இதுதான் நடக்கும். கலைஞர்களுக்கு வாழ வழியில்லாது போகும். இந்த பீ.பீ.சி. தயாரிப்பு இடம்பெற்றிருந்தால் எத்தனை பேருக்கு வருமானத்துக்கு வாய்ப்புக்கள் கிடைத்து இருக்கும்? இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களும் இப்போது சங்கடத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இரு வகையறாக்களையும் சேர்ந்த எதிர்ப்புக்களையும் கலை, கலாச்சார நிலைப்பாட்டில் இருந்து அணுகுகையில் அவை பிற்போக்கானவை; நச்சுத்தனமானவை; ஆபத்தானவை.

முதலாவது நிலைப்பாடு இதுகாறும் இந்தத் தடைக்கு காரணமாகி உள்ளதும் எதிர்காலத்தில் உலகில் இடத்துக்கு இடம் கலைக்கு எதிராக ஏவிவிடப் படக் கூடியதுமான இன,மத நோக்கில் இருந்து கலையின் வாழ்க்கையைத் தீர்மானம் செய்கின்ற பிற்போக்கு நிலைப்பாடாகும். அது முன்னர் "இஸ்லாமிய எதிர்ப்பு" எனப்படும் நிலைப்பாட்டில் நின்று மத மோதுதல்களை தூண்டிவிடும் பிற்போக்கு முதலாளித்துவப் பார்வையாகும்.

இங்கு கலைப் படைப்புக்களுக்கு தணிக்கை போடுவது இஸ்லாம் மதத்தினது வேலை மட்டும் தானா என்ற கேள்வி நனவு படைத்த எவரும் எழுப்பும் ஒரு முக்கிய கேள்வியாகும். இலங்கையை எடுத்துக் கொண்டால் இந்த இஸ்லாம் எதிர்ப்பாளர்கள் மறந்து போய்விடும் பல சந்தர்ப்பங்களை நினைவில் கொணர முடியும். இன்று நேற்றல்ல பல தசாப்தங்களுக்கு முன்னர் மார்ட்டின் விக்கிரமசிங்க கௌதம புத்தரின் வாழ்க்கையை பின்னணியாகக் கொண்டு "பவதரணய" என்ற நூலை எழுதிய போது அவர் பௌத்த மதத்தை அவமானம் செய்து விட்டதாக பௌத்த பிக்குகள் துள்ளிக் குதிக்க இல்லையா?

16ம் பக்கம் பார்க்க


இந்து சோவினிஸ்டுகளால் நாசமாக்கப்பட்ட ஹுசேனின் கலைப் படைப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனநாயகக் கட்சி தோட்டத் துறையில் செய்வது என்ன?

கே. ரத்னாயக்க

"மலையக மக்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டுதல், தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரித்தல், மாற்று இடதுசாரி சக்தி ஒன்றை கட்டியெழுப்புதல் எனற மோசடி வார்த்தைகளின் கீழ் கடந்த டிசம்பர் 28ம் திகதி அட்டன் நகர மண்டபத்தில் ஒரு மகாநாடொன்று இடம்பெற்றது.

இதன் முன்னணியில் சமீபத்தில் தோட்டத் துறையில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய ஜனநாயகக் கட்சி என்ற அமைப்பு நின்றுகொண்டிருந்தது. இந்த மாநாட்டில் நவசமசமாஜக் கட்சி, மார்க்சிச தொழிலாளர் போக்கு முதலான அமைப்புக்களும் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது. இந்த அமைப்புக்களுக்கு இடையேயான பொது இலட்சணம் என்னவெனில் இன்றைய ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்ற பாடுபட்டமை, எதுவிதத்திலும் இந்த அரசாங்கத்தை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க முண்டு கொடுத்தல் என்பனவாகும்.

## கூட்டத்தின் நிஜ நோக்கம்

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் செந்தில்வேல் கூட்டத்தின் உண்மை நோக்கத்தை பின்வரும் வார்த்தைகளில் வெளியிட்டுள்ளார்: "மலையக மக்கள் ஒரு தேசிய இனத்தவர். அவர்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீரிக்க சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். !" நவசமசமாஜக் கட்சி, மார்க்சிச தொழிலாளர் போக்கு, தேசிய ஜனநாயக இயக்கம் போன்றவை புதிய ஜனநாயகக் கட்சி என்ற மாஓவாதத்தில் ஊறித்திளைத்த குட்டி முதலாளித்துவ அமைப்புடன் ஆரம்பித்துள்ள மேற்கூறிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் இலக்கிலேயே இம்மகாநாட்டில் கலந்து கொண்டன.

இன்று தோட்டத் துறையில் வளர்ச்சி கண்டுவரும் நிலைமைகளைக் கணக்கில் கொள்ளும்போது "இடதுசாரி மாற்று வேலைத்திட்டத்தை கட்டியெழுப்புவது" என்ற பெயரில் இவ்வமைப்புக்கள் அணிதிரண்டு "மலையக மக்களுக்கு சுயநிர்ண்ய உரிமை வழங்கல் " என்ற பதாகையை உயர்த்திப் பிடிக்கும் பிற்போக்கு நோக்கம் தொழிலாளர்கள் மத்தியில் மேன்மேலும் தெளிவாகின்றது.

யூ.என்.பி.அரசாங்கத்தினைப் போலவே இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழும் தற்போது வாழ்க்கைத்தர வெட்டு, அடக்குமுறைகளை எதிர்த்து தோட்டத்துறையில் கொதிப்பு உருவாகியுள்ளது. விலைவாசி உயர்வினால் சிறப்பாக மாவின் விலை உயர்வினால் தோட்டத் தொழிலாளர் அரைப்பட்டினிக்குள் தள்ளப்பட்டனர்.

கடந்த பல ஆண்டுகளாகத் தொழிலாளர் தமது தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தமது வாழ்கைத் தரம், தொழில், ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பதிலாக அவற்றைப் பறித்தெடுக்க அரசாங்கத்திற்கும் முதலாளித்துவத் தோட்டக் கம்பனிகளுக்கும் கைகொடுப்பவர்களாக மாறியுள்ளதை அனுபவ வாயிலாகக் கண்டுள்ளனர். தோட்டத் துறையின் மாபெரும் தொழிற் சங்கம் என மார்தட்டிக் கொண்ட இ.தொ.கா. உட்பட சகல தொழிற்சங்கங்களும் இன்று தொழிலாளர்களது வெறுப்புக்கு உள்ளாகியுள்ளன.

## அரசாங்கத்திற்கு வால்பிடி

புதிய ஜனநாயகக் கட்சியை முக்கிய அங்கமாகக் கொண்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் சீரழிவு, தொழிலாளர்கள் கிளர்ந்து எழும் நிலைமைக்குள் வெளிப்பட்டு இருப்பதைக் காணலாம். இவர்கள் கிளர்ந்து வரும் தொழிலாளர்களை சிறைப்பிடிப்பதற்காக பிற்போக்கு பொறிக் கிடங்கு தோண்டும் நடவடிக்கையில் குதித்துள்ளனர் என நாம் எச்சரிக்கின்றோம். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் பேரில் வடிக்கும் முதலைக் கண்ணீரினால் தொழிலாளர்கள் ஏமாந்து விடக் கூடாது என நாம் எச்சரிக்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களின் பேரில் கவனம் செலுத்த வேண்டும் என இரங்கும் இந்த புதிய ஜனநாயகக் கட்சி தொடக்கம் நவசமசமாஜக் கட்சி வரையிலான இந்தச் சகல அமைப்புக்களும் இந்த அரசாங்கத்தை பதவியில் இருத்த தலைகீழாக நின்று உழைத்தவை அல்லவா? அன்று இந்த அமைப்பில் உள்ள எந்த ஒரு அமைப்பும் சரி தோட்டத் தொழிலாளர் மட்டும் அல்ல முழுத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களது உரிமைகளும் புறக்கணிக்கப்பட்டு உள்ளதை கண்டும் காணாது இருந்தவர்கள் அல்லவா? அன்று இவை யாவும் யூ.என்.பி.அரசாங்கம் மக்கள் வெறுப்புக்கு இலக்காகி உள்ளதால் ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்ந்து பொதுமக்களை பொறிக் கிடங்கிற்குள் தள்ள அறிந்தறிந்தே தொழிற்பட்டனர். யூ.என்.பி.யினால் தொடுக்க முடியாது போன கொடிய தாக்குதலை பொதுஜன முன்னணி அரசாங்கத்தைக் கொண்டு நடாத்தவென்றே இவ்வமைப்புக்கள் உழைத்தன.

தற்சமயம் இந்த அரசாங்கம் பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ளது. முதலாளித்துவக் கம்பனிகளால் தமது உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராக தொழிலாளர் முன்தள்ளப்படுகின்றனர். தற்போது புதிய ஜனநாயகக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, மார்க்சிச தொழிலாளர் போக்கு. தேசிய ஜனநாயக இயக்கம் ஆகிய இந்த அனைத்து குட்டி முதலாளித்துவ கன்னைகளும் அரசாங்கம் பற்றிய மோசடி விமர்சனங்களில் ஈடுபட்டவாறு பொதுமக்களுக்கு வலைவீச முயற்சிக்கின்றன.

## பிற்போக்கு சுலோகம்

மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை என இவர்கள் முன்வைக்கும் சூத்திரமானது மிகவும் பிற்போக்கானது. பொதுஜன முன்னணி அரசாங்கம் தற்போது சமர்ப்பித்துள்ள அரசியலமைப்புச் சட்டத் திருத்தப் பிரேரணைகள் எனப்படுவதற்கு வால்பிடிக்கும் இந்த அமைப்புக்கள் அதன் ஒரு பாகமாக "தோட்டத் தொழிலாளர் சுயநிர்ணய உரிமை" கோருகின்றன. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியற் தீர்வு, இன்றைய இனவாத யுத்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான ஒரு போர்வையாக இருந்து கொண்டுள்ளது. மறுபுறத்தில் தமிழ் முதலாளிகளுடனான சமரசத்தின் மூலம் பிற்போக்குச் சக்திகளை அரசாங்கத்தைச் சூழ அணிதிரட்டும் தயாரிப்பை பலப்படுத்த பொதுஜன முன்னணி அரசாங்கம் தருணம் பார்த்துக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் பொதுமக்களுக்கு எந்த ஒரு ஜனநாயக உரிமையும் கிடைத்துவிடாது. இதுவரை காலமும் இருந்து கொண்டுள்ள அனைத்து அடக்குமுறைச் சட்டங்களும் இந்த அரசியலமைப்பில் இடம்பெறும் அரசியலமைப்புச் தீர்மானங்களும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆசிகளுடனும் அங்கீகாரத்துடனுமே இடம்பெறுபவை என்பதைக் கூறவேண்டியதில்லை. "இடதுசாரி மாற்று வேலைத்திட்டம்" ஒன்றை கட்டியெழுப்பும் பெயரில் கூடியுள்ள இந்த வால்பிடிகளின் நோக்கமும் இத்தகைய ஒரு அரசியலமைப்புக்கே என்பதை புதிதாகக கூறவேணடியதில்லை.

இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் "சுயநிர்ணய உரிமையை" பற்றி ஏன் பேசிக் கொள்கின்றார்கள்? இதற்கு முன்னர் மலையக மக்கள் முன்னணியை அமைத்துக் கொண்டுள்ள பீ.ஏ.காதர், பீ.சந்திரசேகரன் என்போர் இத்தகைய கோரிக்கையை முன்வைத்தனர். இவர்கள் தோழிலாளர்களை ஏமாற்றி, அவர்களின் தோள்களில் ஏறி பாராளுமன்றத்துள் பாய்ந்து கொண்டதோடு பிரதி அமைச்சர் பதவியை பெற்று வயிற்றை நிரப்ப வழிபார்த்துக் கொண்டது. இதன் மூலம் தொழிலாளர்களை தாக்கி, தொழிலாளர் போராட்டத்தைக் குழப்பியடித்து வருகின்றார். தற்சமயம் புதிய ஜனநாயகக் கட்சி மலையக மக்கள் முன்னணியின் சூத்திரத்தை உருப்போடுகின்றது.

புதிய ஜனநாயகக் கட்சி, நவசமசமாஜக் கட்சி உட்பட்ட இந்தக் குழுக்கள் சுயநிர்ணய உரிமை என்ற பெயரில் தனியொரு குட்டி அரசினை ஒதுக்[illegible] மூலம் தோட்ட[illegible] நுழைந்து கொள்ள முயற்சிக்கின்றன. இது எந்த விதத்திலும் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளின் பேரிலான மனவேதனையினால் முன்வைக்கப்படும் ஒரு வேலைத்திட்டம் அல்ல. தோட்டத் தொழிலாளர்களை தொழிலாளர்களின் ஏனைய பகுதியினரிடம் இருந்து பிரித்து வைப்பதும் குட்டி முதலாளித்துவ கும்பல்களின் வயிறுகளை நிரப்பிக் கொள்வதும் இந்த சுலோகங்களில் அடங்கியுள்ள பிற்போக்கு அவசியமாகும்.

கடந்த சில ஆண்டுகளாக உலகின் பல நாடுகளிலும் சுயநிர்ணய உரிமையை ஸ்தாபிதம் செய்யும் பேரில் இயக்கங்கள் காளான்கள் முளைப்பதுபோல் தோன்றியுள்ளன. பழைய யூகோசலவாக்கியப் பிராந்தியமும் அதன் ஒரு பாகமான பொஸ்னியாவும் இதற்கு நல்ல உதாரணமாகும். இன, மத முதலாளித்துவக் குழுக்கள் அந்த அடிப்படையில் குட்டி அரசுகளை கூறுபோடும் இயக்கங்களை ஆரம்பித்தன. இதன் பெறுபேறாக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இரத்தக் களரிகளுக்குள் மூழ்கடிக்கப்பட்டதோடு அதன் ஊடாக ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜந்து ஆட்சிகள் திணிக்கப்பட்டன. ஏகாதிபத்தியவாதிகளும் இதற்கு ஊக்கம் அளித்தனர். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகின் எந்த மூலையிலும் ஊடுருவி சுரண்டலை நடாத்த இன்றைய ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களால் முடியும்.மறுபுறத்தில் தொழிலாளர்களை இன மற்றும் கோடுகள் ஊடாக பிளவுபடுத்துவதன் மூலம் படுமோசமான சுரண்டலை உருவாக்கிக் கொள்ள முடியும். ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவக் கும்பல்கள் நேரடியாக ஏகாதிபத்தியவாதிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை நடாத்துவதன் மூலம் பொதுமக்களை சுரண்டலுக்கு உள்ளாக்குவதற்கான கட்டணத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த விதத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிய சுலோகம் இன்று ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களது ஏஜன்டுகளதும் நச்சுத்தனமான ஒரு ஆயுதமாகியுள்ளது.

தேசிய சுயநிர்ணயம் என்ற சூத்திரத்துக்கு மேலதிகமாக இன்னும் பல சூத்திரங்களின் மூலம் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் இயக்கங்கள் பல நாடுகளிலும் தொடுக்கப்பட்டு உள்ளன. அமெரிக்காவின் "கலாச்சார தேசிய இயக்கம்", தேசிய அடையாள இயக்கம் என்ற வகையில் முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ பகுதியினரால் முன்தள்ளப்பட்டுள்ளதும் இந்த வகையறாக்களைச் சேர்ந்தவையே.

தோட்டத் துறையினுள் இன்று குட்டி முதலாளித்துவ கும்பல்களால் இந்த சூத்திரம் முன்தள்ளப்படுவது, ஏகாதிபத்தியவாதிகளதும் இந்த குட்டி முதலாளித்துவக் கும்பல்களதும் பிற்போக்கு இலக்குகளின் பேரிலேயேயாகும். மலையக மக்கள் முன்னணியும் இந்த குட்டி முதலாளித்துவ கும்பல்களதும் கூச்சல்களுக்கு முன்னர் எவருமே சுயநிர்ணய உரிமை பற்றிய சுலோகத்தை தோட்டத்துறை தொடர்பாக முன்வைத்தது கிடையாது. இன்று அதை ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு கையாட்களதும் நலன்களின் பேரில் அதற்குள் நுழைத்துவிட முயற்சிக்கப்படுகின்றது. தேசிய சிறப்புரிமைவாதம் பற்றிய பிரச்சாரத்தின் மூலம் தொழிலாளர்களைத் தவறான வழியில் திசைதிருப்பிவிட இவர்கள் துடிக்கின்றார்கள். தோட்டத் துறையில் வேலையின்மை, தொழில் இழப்புக்கு உள்ளான இலட்சக்கணக்கான தொழிலாளர்களை இரண்டு துட்டுக் காசிற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்றுத்தள்ளிவிடும் தரகர்களாக மாறி விடத் தமக்குள்ள தகைமையை இந்தக் குட்டி முதலாளித்துவ கையாட்கள் கணித்துக் கொண்டுள்ளனர். அத்தோடு சிங்களம் பேசும் தொழிலாளர்களில் இருந்தும் கிராமப்புற ஏழைகளில் இருந்தும் தோட்டத் துறையின் துயருறும் தமிழ் பேசும் தொழிலாளர்களை பிளவுபடுத்துவதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதன் மூலம் இவர்களைக் கசக்கிப் பிழிய முடியும் எனவும் இவர்கள் கணக்குப் பார்த்துக் கொண்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் இனவாத [illegible] உள்ளாக்கப்பட்டு, [illegible] அவர்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டு உள்ளன. ஆனால் அவற்றை சிங்களம், தமிழ் பேசும் நகர்ப்புற, தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் மட்டுமே வெற்றி கொள்ள முடியும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் 1949ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறிக்கும் இலங்கை முதலாளி வர்க்க ஆட்சியின் போதும் மிகவும் முக்கியமான படிப்பினை, ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அதன் முதலாளித்துவக் கையாட்களுக்கும் எதிராக நகர்ப்புற, தோட்டத்துறைத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தை ஒழுங்கு செய்யும் அவசியமேயாகும். அந்த ஒன்றிணைவை சிதறடிக்கும் பொருட்டு முதலாளி வர்க்கம் இனவாத பாகுபாடுகளை பாவித்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் இனவாத யுத்தத்தினை தென் மாகாணங்களின் நகர்ப்புற, தோட்டத்துறை தொழிலாளர்களைப் பிளவுபடுத்த அது கையாளும்.

புதிய ஜனநாயகக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, மார்க்சிச தொழிலாளர் போக்கு, தேசிய ஜனநாயக இயக்கம் ஆதியன இந்தப் பிளவுகளை மேலும் முன்னெடுப்பதன் மூலம் முதலாளிகளின் பிற்போக்கு அவசியங்களை இட்டுநிரப்பிவைக்க முயற்சிக்கின்றன.

## சோசலிச வேலைத்திட்டத்திற்கு எதிர்ப்பு

தோட்டத் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளையிட்டு முதலைக் கண்ணீர் வடிக்கும் இந்த பொறிக்கிடங்குகாரர்கள் தோட்டத் தொழிலாளர் இளைஞர்கள் பெருந்தொகையில் கொழும்பு அரசாங்கப் பொலிசாரினாலும் இராணுவத்தினாலும் கைது செய்யப்பட்ட போது அவர்களை விடுதலை செய்ய எந்த விதமான பிரச்சார இயக்கத்திலும் ஈடுபடாதது ஏன்? தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்துக்கு அவர்கள் நிஜ எதிர்ப்புக் காட்டுவது ஏன்? இவை தொழிலாளர்களின் எதிரில் தோன்றும் நியாயமான கேள்விகள் ஆகும். இவர்கள் இவற்றை எதிர்ப்பது உண்மையில் முதலாளிகளின் ஏஜன்டுகளாக இருந்து கொண்டுள்ளதால் ஆகும். முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு பந்தம் பிடித்துக் கொண்டு அவற்றின் பின்னால் இழுபடுவதன் மூலம் கடந்த காலத்தில் இந்த அமைப்புக்கள் தாம் முதலாளித்துவ ஏஜன்டுகள் என்பதை நன்கு காட்டிக் கொண்டுள்ளன. இ.தொ.கா. உட்பட்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்களில் இருந்து இவர்கள் எதுவிதத்திலும் வேறுபட்டவர்கள் அல்லர்.

இவர்கள் இந்த விதத்தில் தலையிடுவது, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் ஜனநாயக உரிமைகளைக் காப்பதன் பேரிலும் நகர்ப்புற, தோட்டத்துறைத் தொழிலாளர்கள் இடையே சோசலிச ஐக்கியத்தை நிர்மாணிப்பதற்கான நிலைமைகள் அபிவிருத்தி கண்டுவரும் ஒரு நிலைமையிலாகும். தம்மைப் பிளவுபடுத்திய சக்திகள் என்ன என்பதை இத்தொழிலாளர்கள் புரிந்து கொள்வதற்கான நிலைமைகள் இன்று வளர்ச்சி கண்டுள்ளன. சோசலிச வேலைத்திட்டத்திற்காக நடாத்தும் போராட்டத்தின் மூலம் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பது, ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான மார்க்கமுமாகும். சோசலிசத்திற்கான போராட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் அணிதிரட்டி, வழிநடாத்துவதற்கு எதிராக "இடதுசாரி மாற்று" எனப்படும் குட்டி முதலாளித்துவ புள்ளிகள் முன்னணிக்கு வந்துள்ளனர்.

சோசலிச சமத்துவக் கட்சி, தோட்டத் துறையிலும் நகர்ப்புறத்திலும் இத்தகைய சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் சோசலிச அனைத்துலகவாத ஐக்கியத்துக்காக போராடும் ஒரே அமைப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜ்குமாருக்கு எதிரான தாக்குதல் அரசியல் தாக்குதல்



சோசலிச சமத்துவக் கட்சியின் உடப்பு பிராந்திய கட்சி அங்கத்தவரான தோழர்.செல்லையா இராஜ்குமார் கடந்த ஜனவரி 13ம் திகதி அதே பகுதியைச் சேர்ந்த காடையர் கும்பலினால் தாக்கப்பட்டுள்ளார். இது முதலாளித்துவ அரசினாலும் பிற்போக்கு அரசியல் புள்ளிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்டதாகும் என சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றது.

ஜனவரி 13ம் திகதி தோழர்.இராஜ்குமார் தமது மீன்பிடி வள்ளத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்த வேளையில் அங்கு வந்த எம்.சின்னத்தம்பி என்ற மீன் முதலாளி இராஜ்குமாரைத் திடீரெனத் தாக்கியதோடு அவரை கால்மைல் தூரம் கடற்கரையில் இழுத்தும் சென்றுள்ளான். சின்னத்தம்பியின் கையாட்களான காளிதாஸ், சுப்பிரமணியம் என்ற இருவரும் இந்த காடைத்தனங்களில் சேர்ந்து கொண்டனர்.

தாக்கியதற்குக் காரணம் கேட்டபோது , இராஜ்குமாரின் படகு மீன்வலையைக் கிழித்துவிட்டதாகவும், புதிய மீன் வலை வாங்கித் தரவேண்டும் எனவும் சின்னத்தம்பி கூறிக் கொண்டதாகத் தெரிய வருகின்றது. இந்த மீன்வலை கிழிந்த சம்பவம் ஜனவரி 8ம் திகதி இடம்பெற்றதோடு அன்றைய தினமே அது சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டது. ஆதலால் இந்நிலையில் இராஜ்குமார் தாக்கப்பட்டமை சாதாரண சம்பவம் அல்ல.

இந்த மீன் முதலாளியான சின்னத்தம்பி அப்பிரதேச செல்வந்தராக விளங்குவதோடு பிற்போக்கு முதலாளித்துவக் கட்சிகளுடனும் பொலிசாருடனும் மிகவும் நெருக்கமான உறவு கொண்டவர். இந்தப் பிற்போக்குச் சக்திகளுக்கு இடையேயான இந்த உறவு அவர் இந்தத் தாக்குதல் பற்றி முந்தலம் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய சென்ற போது ஊர்ஜிதம் ஆகியது.

இராஜ்குமார் பொலிஸ் நிலையம் சென்றிருந்த வேளையில் அங்கு வந்திருந்த சின்னத்தம்பியுடன் பேசிய பொலிஸ் நிலைய அதிபர் கிழிந்த வலைக்கு பதிலாக புதிய வலை வாங்கிக் கொடுக்குமாறு இராஜ்குமாருக்கு கட்டளையிட்டார். இராஜ்குமார் தாக்கப்பட்டது பற்றி எந்த விதமான நடவடிக்கை எடுப்பதையும் அவர் நிராகரித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸ் நிலைய அதிபருடன் பேசச் சென்ற சோசலிச சமத்துவக் கட்சியின் பிராந்திய செயலாளர் ஆர்.எம்.தயாரத்னவுடன் ஆத்திரமூட்டும் விதத்தில் பேசிய பொலிஸ் நிலைய அதிபர் இந்த விடயத்தில் கைபோட சோசலிச சமத்துவக் கட்சிக்கு உரிமை கிடையாது என எச்சரித்துள்ளார். ஆனால் இராஜ்குமாரும் தயாரத்னவும் நீண்ட நேரம் வாதித்ததைத் தொடர்ந்து அவரின் முறைப்பாட்டை ஆர்.19060 என்ற பொலிஸ் அதிகாரியை பதிவு செய்யுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தயாரத்னவின் முறைப்பாட்டைப் பதிவு செய்து கொண்ட இந்த அதிகாரி விசாரணைக்காக பெப்பிரவரி 4ம் திகதி வருமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் பெப்பிரவரி 4ம் திகதி வருமாறு விடுத்த இந்தக் கட்டளை திட்டமிட்டுச் செய்த ஒரு மோசடி என்பது பின்னர் அம்பலமாகியது. அன்றைய தினம் முந்தலம் பொலிசுக்கு சென்ற தயாரத்னவுக்கும் இராஜ்குமாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரி சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

பெப்பிரவரி 4ம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டம் நடைபெற இருப்பது பொலிசாருக்கு ஜனவரி 13ம் திகதி தெரிந்திருக்கவில்லையா? தாம் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்ததாக பதிவு செய்யுமாறு தயாரத்ன பொலிசாரைக் கேட்டுக் கொண்டபோதும் அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டனர்.

இதைத் தொடர்ந்து பெப்பிரவரி 14ம்திகதி இது சம்பந்தமாக விசாரணை நடாத்துமாறு கோரி இரண்டு பெட்டிசங்கள் பொலிஸ் மா அதிபருக்கு இராஜ்குமாராலும் தயாரத்னவினாலும் அனுப்பிவைக் கப்பட்டன. எனினும் அதை அனுப்பி மூன்று கிழமைகள் கடந்த போதிலும் அது தொடர்பாக எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இராஜ்குமாருக்கு எதிராக இடம்பெற்ற இந்தக் குண்டர் தாக்குதல் சம்பந்தமாக ஒரு விசாரணை நடாத்துமாறு பிரதேச மக்களினால் கையொப்பம் இடப்பட்ட ஒரு பெட்டிசத்தினை அனுப்ப சோசலிச சமத்துவக் கட்சி கிளை ஏற்பாடு செய்துவருகின்றது.

தோழர். இராஜ்குமார் 1995ல் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி அமைப்பான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவராக இருந்து சோசலிச வேலைத்திட்டத்துக்கு போராடி வந்த வேளையில் 1996 ஜூன் 13ம் திகதி அரலகங்கவில பொலிசாரினால் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் பிந்துனுவவை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அவர் கைது செய்யப்படுவதற்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் நடாத்திய நீண்ட பிரச்சார இயக்கத்தின் காரணமாக இராஜ்குமார் 13 மாதங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அவரை விடுதலை செய்ய சோ.ச.க.நடாத்திய போராட்டமும் அப்பிரதேச சமூக பிரச்சினைகள் சம்பந்தமாகவும் தொழிலாளர் பிரச்சினை தொடர்பாகவும் சோ.ச.க. நடாத்தி வரும் போராட்டமும் பிரதேச மக்களினால் ஈர்க்கப்பட்டதோடு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தாக்குதலின் சாட்டில் முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் பொலிசாரும் நடாத்திவரும் பொலிஸ் அரச வேட்டைகள் சவாலுக்கு உள்ளாகி உள்ளது.

## ஜே.வீ.பி.யின் ஈராக்கு காதலும் அமெரிக்க எதிர்ப்பும்

ஈராக்குக்கு எதிரான அமெரிக்க இராணுவ தயாரிப்புக்களுக்கு எதிர்ப்பு காட்டுவதாகக் கூறி, ஜே.வீ.பி.சமீபத்தில் அமெரிக்க தூதரகத்தின் எதிரில் நடாத்திய மறியல் பிரச்சாரமும் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவின் பத்திரிகை அறிக்கையும் அதன் பிற்போக்கு அரசியல் கோலத்தையும் குத்துக் கரணங்களையும் காட்டிக்கொண்டுள்ளன.

தற்போது அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிர்ப்புக் காட்டும் ஜே.வீ.பி.கடந்த ஆண்டு மார்ச் 21ம் திகதி அமெரிக்க தூதரகத்தினுள் நுழைந்து கொண்டதோடு, தமது அமைப்பை ஒரு ஜனநாயக அமைப்பாக அங்கீகரித்து அருளும்படியும் ஏகாதிபத்திய அதிகாரிகளிடம் வேண்டிக் கொண்டனர். இதனை ஏகாதிபத்தியவாதிகள் அங்கீகரித்ததாக ஜே.வீ.பி.உஜாருடன் அறிவித்தும் இருந்தது. அத்தோடு இந்தச் சந்திப்பின் போது அமெரிக்க ஏகாதிபத்திய அதிகாரிகளுக்கும் தமக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை இவர்கள் இன்னமும் பொதுமக்களுக்கு அம்பலப்படுத்த இல்லை.அந்த விதத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் கால்களை நக்கிக் கொண்ட இவர்கள் இப்போது ஈராக்கைக் காக்கும் பேரில் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடியுடன் தமது பிற்போக்கை பூசி மெழுக முயற்சிக்கின்றனர்.

இது இந்நாட்டு மக்களுக்கு புதிய ஒன்றல்ல. ஈராக் ஈரான் யுத்தம் நடைபெற்ற வேளையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சுலோகம் கோஷித்தபடி ஜே.வீ.பி. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பின்னணியுடன் கூடிய ஈராக ஆளும் வர்க்கத்துடன் இழுபட்டுச் சென்றது. இலங்கைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு இருந்த ஈரான் கப்பலை தாக்குவதற்கு ஜே.வீ.பி.ஈராக்கிடம் இருந்து பணம் பெற்றது என்ற குற்றச்சாட்டும் இருந்து வந்தது. தற்சமயம் அது நடாத்தும் ஈராக் பாதுகாப்பு பிரச்சாரங்கள் அதில் இருந்து வேறுபட்டது அல்ல.

ஈராக்கைக் காக்கும் எந்த ஒரு நேர்மையானதும் விசுவாசமானதுமான அவசியம் இந்த பாசிச கும்பலான ஜே.வீ.பி.க்கு கிடையாது என நாம் எச்சரித்து வந்தோம். இது எமது கடந்த கால அறிக்கைகள் மூலம் மட்டுமல்லாது தற்சமயம் ஜே.வீ.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க யுத்த வெறியை தோற்கடிப்போம் என்ற மோசடி தலைப்பில் ரில்வின் சில்வா பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஈராக்கை காக்கும்படி விடுக்கும் இரங்கலை பாருங்கள்:

"தொடுக்கும் யுத்தப் பயமுறுத்தலை தோற்கடிக்கவும் பிரச்சினையை சமாதானமாக தீர்த்து வைக்க நெருக்கவும் உலகின் ஏனைய அரசாங்கங்களுடன் இணையுமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை நெருக்குகின்றோம்."

ஏகாதிபத்திய தாக்குதலை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் மூலமே தோற்கடிக்க முடியும் என வாயடித்துக் கொண்ட ஜே.வீ.பி.யினர் அந்த மோசடி போர்வைகளைக் கூட சுருக்கி மடித்துக் கொண்டு, இப்போது உலகம் பூராவும் உள்ள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் . பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் சேர்ந்து யுத்த அச்சுறுத்தலை தோற்கடிக்கும்படி வேண்டுகின்றனர். அதுவும் ஜே.வீ.பி.செயலாளரின் படி ஏகாதிபத்தியத்துடன் மோதிக் கொள்ளாமல் "சமாதானமான" வழியில் .இலங்கைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்தியவாதிகளிற்கு பலியிடும் அலுகோசுவான பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு புனித வெண்ணிற ஆடை சார்த்தவும் அதனுடன் அணிதிரளவும் ஜே.வீ.பி.செய்யும் முயற்சியே இவை.

## நள்ளிரவு குழந்தைகள்: தடையும் எதிர்ப்பும்

14ம் பக்கத் தொடர்ச்சி

இதற்கு முன்னரும் பின்னரும் இன்னும் பல இடம்பெற்றதோடு அவை கலைப் படைப்புக்களுடன் மட்டும் நின்று கொள்ளவும் இல்லை. சமீபத்தில் பேராசிரியர் தம்பையாவின் "பௌத்தம் காட்டிக்கொடுக்கப்பட்டது" (Buddhism Betrayed) போன்ற நூல்கள் சம்பந்தமாகவும் வெளியீட்டுச் சுதந்திரத்திற்கு எதிராக இவர்கள் ஆயுதம் தூக்கவில்லையா? 1980பதுகளில் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன தமது கிறிஸ்துநாதர் வாழ்க்கை( ) என்ற நூலை நிறைவு செய்கையில் கிறிஸ்துநாதர் வாழ்க்கையை அவமானம் செய்து விட்டதாக கூறி நீளங்கி தரித்த குருவானவர்கள் — —கட்டவில்லையா? அந்த விதத்தில் இது தனி ஒரு மதக்குழு சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல.கலைப் படைப்புக்களதும் மற்றும் வெளியீடுகளதும் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் எதிராக மதவாதிகள் இலங்கையினுள்ளும் பல்வேறு விதத்தில் தலையிடுவதை இவை காட்டுகின்றன.

முதலாவதாக "தணிக்கை" என்பது வர்க்க சமுதாயத்தினுள் ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கு எதிரான ஒடுக்கும் ஆளும் வர்க்கங்களின் ஒடுக்குமுறையின் ஆயுதமாகும். தணிக்கைக்கு உள்ளாகும் முக்கிய துறையான கலைத்துறை சம்பந்தமாகவும் அதன் அர்த்தம் அதுவே. ருஷ்டி சம்பந்தமான நிகழ்வுகள் கலைக்கு எதிராக மதத்தை முன்னணியில் கொண்டு இடம்பெறும் தாக்குதல்கள் மூலம் அம்பலமாகுவது என்ன. உலகத்தைப் பற்றிய எந்த ஒரு விமர்சன ஆய்வினதும் நிழல் தன்னும் ஆடுவதை இன்றைய முதலாளித்துவ அமைப்பினால் தொடர்ந்தும் சகித்துக் கொள்ள முடியாது உள்ளது. வரலாற்றில் நாற்றம் கண்ட அனைத்துப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களும் தள்ளப்பட்டதைப் போலவே இன்றைய முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் தனது உயிரைப் பிடித்து வைத்துக் கொள்ளும் நிலையில் எந்த விதமாக விமர்சன சிந்தனை ஆய்வுகளுக்கும் எதிராக மதம் உட்பட்ட கருத்தியல்வாத சிந்தனைகளில் தொங்கிக் கொண்டுள்ளன.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல் இந்தத் தாக்குதல்கள் சல்மன் ருஷ்டிக்கோ அல்லது அவரின் கலைப் படைப்புக்களுக்கோ மட்டும் ஏற்பட்டது அல்ல. சல்மன் ருஷ்டி மரண தண்டனை விதிக்கப்பட்ட அதே வேளையில் பங்களாதேஷ் பெண் எழுத்தாளரான நஸ்லிமா நஸ்லீன் எழுதிய வெட்கம் என்ற நாவலின் பேரில் ஏற்பட்ட "எதிர்ப்பின்" பேரில் அவர் ஐரோப்பாவுக்கு தப்பியோடி உயிர்பிழைக்க நேரிட்டது. (இந்த நூலும் கூட இலங்கை ஆட்சியாளர்களாலும் தடைசெய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.) வாசகர்களுக்கு பெரிதும் அறிமுகமான இந்தியத் திரைப்பட இயக்குனர் மணிரத்னத்தின் 'பம்பாய்' திரைப்படம் தாக்கப்பட்டது தெரிந்ததே. அவ்வாறே புகழ்பெற்ற இந்திய ஓவியரான எம்.எப்.ஹுசேன் அவரது சிந்தனையின் வெளிப்பாடுகள் காரணமாக இந்திய மதவாதிகளதும் இனவெறியர்களதும் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிட்டது.

கலைப் படைப்பு சம்பந்தமான விடயத்தைத் தான் ஒதுக்கிவிட்டாலும் குறைந்த பட்சம் இந்த வெளியீட்டு சுதந்திரம் சம்பந்தமான முதலாளித்துவ ஜனநாயக நிலைப்பாட்டினுள் முக்கியமாகக் கொள்ளப்படும் "அங்கீகரிக்கப்பட்ட" உரிமைகள் அழிக்கப்படுவதும் கூட சட்ட ரீதியானதாக்கப்பட்டு இருப்பதை என்ன என்பது? இந்த முதலாளித்துவச் சட்டத்தின் கீழேயே சல்மன் ருஷ்டிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது . இந்த இஸ்லாமிய நாடுகளைக் காட்டிலும் மதச்சார்பற்ற முகமூடி போட்டுக் கொண்டுள்ள நாடுகளிலும் கூட ருஷ்டியின் சாத்தானின் வசனங்கள் தடை செய்யப்பட்டது. இதன் மூலம் இந்த மரண தண்டனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீதான அரசின் தடையின் பின்னணியில்

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜனவரி 28ம் திகதி விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது. இந்தத் தடை தொடர்பான சோசலிச சமத்துவக் கட்சியினதும் தொழிலாளர் பாதையினதும் நிலைப்பாட்டை வாசகர்கள் எம்மிடம் விசாரித்து இருந்தனர்.

இதன் பேரிலான எமது அசையாத நிலைப்பாடு: பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தமையை சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் எதிர்க்கின்றன; வன்மையாகக் கண்டனம் செய்கின்றன. விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக எந்தவிதமான அரசியல் நப்பாசைகளுக்கும் இடம் வைக்காதும் தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கைகளில் உறுதியாகக் காலூன்றியுமே இந்த அரசியல் முடிவுக்கு வந்துள்ளோம். சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அரசியலை அடியோடு எதிர்க்கின்றன.

பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளை தலதா மாளிகை மீதான விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலுடன் தடைசெய்தது. இதன் ஒரு நோக்கம், விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலின் ஆசீர்வாதங்களோடு, யூ.என்.பி.யுடனும் இனவாத இயக்கத்துடனும் சிங்கள இனவாத தீவைப்புக்களை போட்டிக்கு முன்னெடுத்துச் செல்வதாகும். இந்த தடை உத்தரவு தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பமாகுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் வெளியாகியது. தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் பரந்த அளவிலான ஒரு பதட்ட நிலை சூடிபிடித்துக் கொண்டுள்ள ஒரு நிலையில் இது வெளியாகியது.

வடக்கு-கிழக்கில் இனவாத யுத்தத்தை உக்கிரமான மட்டத்துக்கு உயர்த்தியுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவக் கட்சிகளும் இனவாத இயக்கங்களும் யுத்தத்தை மக்களை சிங்கள இனவாதத்தினுள் மூழ்கடிக்கவும் இராணுவமயமாக்கத்தை நாடுபூராவும் அபிவிருத்தி காணச் செய்யவும் பயன்படுத்தின. ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க பொதுஜன முன்னணி அரசாங்கமும் இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை அபிவிருத்தி செய்ய தலைகீழாக நின்றுவருகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை இந்த கொடிய அடக்குமுறை இயக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு நடவடிக்கையாகும்.



பிரபாகரன்

அரசாங்க அதிகாரத்தில் இருந்து கொண்டுள்ள முதலாளி வர்க்கத்தின் குழுக்கள் தமது முதலாளித்துவ சகாக்களுக்கு எதிராக அரச காடைத்தனங்களைக் கையாளும் போது அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொழிலாளர் வர்க்கத்தின் விதிமுறை அல்ல. விடுதலைப் புலிகள் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் இனவாதக் கோணத்திலோ அல்லது ஜே.வீ.பி.அமைப்பு சம்பந்தமாக. தாம் கட்டுப்பாடு இழந்து போன ஒரு நிலையிலோ அல்லது அன்று சிரிமா பண்டாரநாயக்கவுக்கும் இன்று விஜேபால மெண்டிசுக்கும் எதிராக ஊழல் ஒழிப்பு மோசடிகளில் ஈடுபட்டோ முதலாளித்துவ எதிர்ப்பாளர்களுக்கு எதிரான முதலாளித்துவ அரசாங்கங்களின் தடைகளும் வேட்டைகளும் இடம்பெறலாம். அவை முதலாளித்துவ கும்பல்களுக்கு இடையே வசதிவாய்ப்புக்களை பங்கு போட்டுக் கொள்ளும் நாய்ச் சண்டையுடன் மட்டும் நின்று கொள்வதில்லை. உண்மையில் அவை பயங்கரவாதிகளை அடக்கும் சாட்டில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் மீதும் பாய்ந்து விழுவதற்காக முதலாளித்துவ அரசாங்கமும் அரசும் ஆளும் வர்க்கமும் தமது கரங்களை பலப்படுத்தச் செய்யும் ஏற்பாடுகளாகும்.

முதலாளித்துவ அரசாங்களின் பிற்போக்கு உபாயங்களுக்கு கைகொடுப்பது தொழிலாளர் வர்க்கத்தின் விதிமுறை ஆகாது. அத்தகைய ஆதரவு வழங்குவதும் தோள்கொடுப்பதும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜக் கட்சிகளதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் நானாவித தீவிரவாதிகளதும் முதலாளி வர்க்கத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். முதலாளிகளிடையே 'முற்போக்காளர்கள்' தேடும் தோரணையில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை முதலாளி வர்க்கத்துக்கு தோள்கொடுக்க வைத்து பலிகொடுப்பது அவர்களின் அரசியல் வேலைத்திட்டங்களில் அடங்கும். விடுதலைப் புலிகள் சம்பந்தமாக இப்பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இந்த அமைப்பு, இனவாதத்தைத் தூண்டுவதன் மூலம் முதலாளி வர்க்கத்தின் தடைக்கு முதலிடம் கொடுத்துள்ளது. பற்றி வீரக்கோன் ரூபாவாஹினியில் தோன்றி, அரசாங்கத்தின் விடுதலைப் புலிகள் அமைப்புத் தடைத் தீர்மானம் பொறுத்திருந்து செய்த ஒன்று எனக் கூறினார்.

தொழிலாளர் வர்க்கம், வரலாற்று முற்போக்கு பாத்திரத்தினை வகிக்க வேண்டிய ஒரு வர்க்கம். அது ஏனைய ஒடுக்கப்படும் மக்களையும் தன்னைச் சூழ அணிதிரட்டிக் கொண்டு, நாற்றம் கண்டுபோன முதலாளித்துவத்தில் இருந்து தாம் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டியதும் போராடக் கூடியதுமான வர்க்கமுமாகும். அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பாகமான அதற்கு மாற்று வேலைத்திட்டம்-அதாவது அனைத்துலக சோசலிச வேலைத்திட்டம் இருந்து கொண்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ அரசியலின் சகல வடிவங்களுக்கும் எதிராகப் போராட முடியும். முதலாளிகளதும் இனவாதிகளதும் அல்லது குட்டி முதலாளிகளதும் வேலைத்திட்டங்களுக்கு தோள் கொடுத்தால் தொழிலாளர் வர்க்கத்தின் இரு கைகால்களும் கட்டப்பட்டு, முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் தாக்குதல்களுக்கு பலியாக்கப்படும். இலங்கையிலும் மற்றும் சகல நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கத்துக்கு இது தொடர்பாக இரத்தம் தோய்ந்த படிப்பினை இருந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அரசியலுக்கு எதிராக தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராட வேண்டும். தெற்கின் சிங்கள முதலாளி வர்க்கத்தின் இனவாத யுத்தத்தை எதிர்த்து தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யப் போராடுவதன் மூலம் வடக்கு-கிழக்கு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுடன் சோசலிச ஐக்கியத்தை கட்டியெழுப்புவதே விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத அரசியலுக்கு குழிபறிப்பதற்கான வழியுமாகும்.

முதலாளி வர்க்கத்தின் இன்றைய விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை, ஒரு பிற்போக்கு உபாய தில்லுமுல்லுமாகும்.யூ.என்.பி.யும் பொதுஜன முன்னணியும் இந்திய முதலாளி வர்க்கமும் விடுதலைப் புலிகளுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு ஆயத்தமாகி வரும் அதேசமயம் அதனுடன் இழுபறிகளிலும் ஈடுபட்டுக் கொள்கின்றார்கள். ஏகாதிபத்தியவாதிகள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு காட்டிக் கொண்ட அதே வேளையில் அதற்கு சவுக்கடியும் கொடுத்துள்ளனர். விடுதலைப் புலிகள் மறுபுறத்தில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் வசதிவாய்ப்புக்களைக் காப்பதற்கு முடிந்த சகல கொடுக்கல்வாங்கல்களுக்கும் தயாராக உள்ளது.

இப்போது விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலின்படி அவ்வாறு தடைசெய்யப்பட்ட அமைப்பினதும் அங்கத்தவர்களதும் எந்த ஒரு அறிக்கையையும் பிரசுரிப்பதும் குற்றமாகின்றது. அங்ஙனம் குற்றம் செய்யும் ஒருவர் ஏழு வருடம் தொடக்கம் பதினைந்து ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படுவார். இந்தச் சட்டம் மிகவும் கொடூரமான முறையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் மீது பாய்ந்து விழுவதற்கு ஆளும் வர்க்கம் தயாராகி வருவதைக் காட்டிக் கொண்டுள்ளது. நாளை தொழிலாளர் வர்க்க அமைப்புக்களுக்கு எதிராகவும் இந்தச் சட்டமே கொணரப்படலாம்.

தொழிலாளர் வர்க்கம் தனது சுயாதீனமான அரசியல் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஏதாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு தயாரிப்புக்களுக்கு எதிரான போராட்டத்துக்கு தயாராக வேண்டும். இதற்கு அவசியமான அரசியல் வேலைத்திட்டத்தை தயார் செய்வது சோசலிச சமத்துவக் கட்சியே.

# மருதானை விடுதலைப் புலிகளின் பயங்கரவாத குண்டு வெடிப்பு

## சோசலிச சமத்துவக் கட்சியின் அறிக்கை

மார்ச் 5 வியாழக்கிழமை தமிழ் ஈழம் விடுதலை புலிகள் அமைப்பினால் கொழும்பு நகரின் மத்தியில் பஸ் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

கொழும்பு நகரின் முக்கிய புகையிரத நிலையமான மருதானை புகையிரத நிலையத்துக்கு அருகில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டினால் 38 பேர் ஸ்தலத்திலேயே இறந்ததோடு, அப்பாவி பொதுமக்கள் 250 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் பெருந்தொகையான பெண்களும் பாடசாலை சென்று திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களும் அடங்குவர். உயிர்பிழைத்த எவரினதும் அடையாளமும் இல்லாத விதத்தில் ஒரு டசினுக்கும் அதிகமான ஆரம்ப பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு சென்றிருந்த ஒரு வான் தூள்தூளாகிப் போயிற்று.

குண்டு வெடிக்க வைக்கப்பட்டது நகரில் பெரிதும் ஜனநெருக்கடி மிகுந்ததும் ஜனநடமாட்டம் உள்ள வேளையிலுமாகும். ஆரம்ப பாடசாலை மாணவர்கள் வீடுதிரும்பும் வேளையில் இந்தக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதால் ஆரம்ப பாடசாலை, மாணவர்களும் குண்டுத் தாக்குதலுக்கு பலியானவர்களிடையே இருந்திருப்பது நிச்சயம். வீதி சிக்னலுக்கு இருபுறமும் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 300 வாகனங்கள் இதனால் சேதம் அடைந்ததோடு பொருட்களை வாங்கச் சென்றிருந்த பொதுமக்கள் மீது கடைகள் தகர்ந்து வீழ்ந்தன.

தன்னியக்கமாக வெடிக்க வைக்கவென வாகனச் சாரதியினால் செலுத்திச் செல்லப்பட்ட வாகனத்தில் 25 பயணிகளை எடுத்துச் செல்ல முடியும் எனவும் அதன் இரு புறத்திலும் வெடிக்கும் திரவியங்கள் நிறைத்த இரண்டு குண்டுகள் ஆகுதல் பொருத்தப்பட்டு இருந்திருக்க வேண்டும். மோட்டார் வாகனப் பொலிசார் வாகன விபத்து தொடர்பாக சாரதியை கைது செய்ய முயற்சித்த வேளையில் இந்த தன்னியக்க குண்டு வெடிக்க வைக்கப்பட்டது.

இலங்கை வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு எதிராக பொது ஜன முன்னணி அரசாங்கம் யுத்தத்தை உக்கிரமாக்கியதன் பின்னர் 1995 ஏப்பிரலில் இருந்து கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளினால் எட்டாவதாக வெடிக்க வைக்கப்பட்ட குண்டு இதுவாகும்.1995 அக்டோபரில் இந்த குண்டுத் தாக்குதல் தொடரில் முதலாவது குண்டு, இராணுவ தலைமையகத்துக்கு இலக்கு வைக்கப்பட்ட போதிலும் அதனால் இராணுவத்துக்கு எந்தவிதமான தீங்கும் இல்லாது போனாலும் 20 பொதுமக்கள் ஸ்தலத்திலேயே மரணமாகினர்.

அதே மாதத்தில் கொழும்பு பெற்றோலியம் கூட்டுத்தாபன தலைமை நிலையத்துக்கு தொடுக்கப்பட்ட தாக்குதலினால் 20 பேர் இறந்தனர். மூன்று மாதங்களுக்குப் பின்னர் மத்திய வங்கி மீது விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் மத்திய வங்கியிலும் அயல் அலுவலகங்களிலும் தொழில் புரிந்த 86 ஊழியர்கள் இறந்ததோடு, 1000க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அதே வருடம் ஜூலையில் தெகிவளை புகையிரத நிலைய குண்டினால் 57 பேர் இறந்ததோடு 300க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

அதன் பின்னர் 15 மாதங்களுக்குப் பின்னர் கடந்த ஆண்டு அக்டோபரில் விடுதலைப் புலிகள் உலக வர்த்தக நிலையத்திலும் கலதாரி ஹோட்டல் அயலிலும் நடாத்திய மற்றொரு குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது . இதற்கும் பல பொதுமக்கள் பலியானார்கள்.

இதற்கு அடுத்த மாதம் கொழும்பு தலைமை மின்சாார நிலையத்தின் இரண்டு எண்ணெய் தாங்கிகளுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த ஆண்டு பெப்பிரவரி 6ம் திகதி பாதுகாப்பு படையினரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் தன்னியக்க குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. இதனால் பாதுகாப்பு படையினரால் நிறுத்தப்பட்ட வான் பயணிகள் உட்பட்ட ஒன்பது பேர் இறந்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்புக்கள், யுத்தப் பிராந்திய மக்களின் உயிர், சொத்துக்களின் மீது திணிக்கும் பேரழிவுகளுக்கு மேலாக முதலாளித்துவ அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தும் இனவாத யுத்தத்தின் பெறுபேறாக நாட்டின் ஏனைய இடங்களிலும் இடம்பெறும் உயிர்ப்படுகொலைகளைக் காட்டிக் கொண்டுள்ளது. அதற்கு இடையே இந்தக் குண்டு வெடிப்புக்கள், நாட்டின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தனியாக ஒரு முதலாளித்துவ அரசினை நிறுவும் முயற்சியில் பயங்கரவாத விதிமுறைகளைக் கையாளும் விடுதலைப் புலிகளின் பிற்போக்கு அவஸ்தை அரசியலினை அம்பலமாக்குகின்றது.

கொழும்பில் பொதுமக்கள் மீதான விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலும் , சமீபத்தில் கண்டி தலதா மாளிகைக்கு விடுதலைப் புலிகள் நடாத்திய குண்டுத் தாக்குதலும் தென்மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவாத தாக்குதல்களை கிளறிவிடும் அவசியத்துடன் செய்யப்படுபவை என்பதை காட்டிக் கொண்டுள்ளன. அத்தகைய ஒரு நிலை தமது பிரிவினைவாத நிகழ்ச்சிநிரலுக்கு கைகொடுக்கும் என விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் கணக்குப் பார்க்கின்றார்கள். ஜனநாயகத்தை உருவாக்கும் பேரில் அவர்கள் நடாத்தும் நாற்றம் கண்ட உபாயங்கள் அத்தகையவையாக உள்ளன.

பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான தமது இராணுவத் தாக்குதல்களுக்கு "சமாதானத்துக்கான யுத்தம்" எனப் பெயரிட்டுக் கொண்டுள்ளதோடு விடுதலைப் புலிகள்

(18ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சோசலிச வெப் நிலையத்துக்கு நல்வரவு கூறுவோம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

இயக்கவியல் வழியில் அறிவும் உண்மையும் ஸ்தாபிதம் செய்யப்படும். இது WSWSன் நிரந்தர பண்பாக விளங்கும். இந்த நிலையத்துக்கு பங்களிப்புச் செய்ய விரும்புபவர்களிடம் இருந்து புத்திஜீவி நேர்மையும் வரலாற்று உண்மைக்கான பங்களிப்புமே வேண்டப்படும்.

## உலக சோசலிச வெப் நிலையமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

ஆசியாவில் ஆரம்பமான நிதி நெருக்கடி துரிதமான முறையில் உலகின் ஏனைய பொருளாதாரங்களையும் துரிதமாக ஒட்டி உள்ளடக்கிக் கொண்டுள்ளமையானது தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தின் அவசியத்தை வேண்டி நிற்கின்றது. ட்ரான்ஸ்நஷனல் உற்பத்தியும் பூகோளரீதியான நிதிச் சந்தைகளும் முதலாளித்துவத்தின் தோற்றத்தை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் மாற்றிவிட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களில் முன்னேறிய நாடுகளில் இருந்துவந்த வரையறுக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலைகள் கிழித்து எறியப்பட்டுள்ளதோடு தொழிலாளர்கள் வேலைநீக்கங்களுக்கும் வருமான இழப்புக்களுக்கும் உள்ளாகினர். தொழிலாளர்களைச் சுரண்ட பின்தங்கிய நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்களும் ஏனைய மலிவு உழைப்பு மேடைகளும் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் தூக்கி வீசப்பட்டன. தொழிலாளர் வர்க்கத்தின் பழைய அமைப்புக்கள் -அவை தம்மைக் கம்யூனிஸ்டுகள் அல்லது சோசலிஸ்டுகள் அல்லது தொழிற்கட்சியினர் என அழைத்துக் கொண்டாலும் அவை தேசிய அரசுடன் இணைந்தே காணப்பட்டன. இவை தொழில், வாழ்க்கைத் தரம், அடிப்படை உரிமைகள் மீதான இந்த அனைத்துலக ரீதியான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க இலாயக்கற்றவையாக விளங்கின.

ஆசியாவிலும் அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அங்கத்தவர்களின் கூட்டு முயற்சியால் பிரசுரிக்கப்படும் WSWS உலக சோசலிச வெப் நிலையத்தின் ஸ்தாபிதத்தினை வர்க்கப் போராட்டத்தின் அனைத்துலகப் பண்பின் தொடக்கப் புள்ளியாகக் கொள்ளும். ஒவ்வொரு நாட்டிலுமான அரசியல் அபிவிருத்திகளை முதலாளித்துவத்தின் உலக நெருக்கடியினதும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் எதிர்கொள்ளும் அரசியல் பணியினதும் நிலைப்பாட்டில் இருந்தும் மதிப்பீடு செய்யும். இந்த முன்நோக்கில் இருந்து பெருக்கெடுக்கும் விதத்தில் அது சகல வகையறாக்களைச் சேர்ந்த சோவினிஸ்டுகளையும் தேசிய குறுகிய பிராந்தியவாதங்களையும் வன்மையாக எதிர்க்கும்.

உலக சோசலிச வெப் நிலையம் ஒரு அனைத்துலக ரீதியில் தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் ரீதியில் கல்வி புகட்டவும் ஐக்கியப் படுத்தவும் முன்னொரு போதும் இல்லாத ஒரு ஆயுதமாகும். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் தொழிலாளர்களுக்கு எதிரான யுத்தத்தினை ஒழுங்கு செய்கையில் இது தொழிலாளர் வர்க்கம் தமது போராட்டத்தினை இவற்றுக்கு எதிராக ஒன்றிணைக்க உதவும். இது ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களிடையேயான கலந்துரையாடல்களுக்கு வசதி செய்கின்றது. ஒரு பொது மூலோபாயத்தினை பரப்பவும் அனுபவங்களை ஒப்பிடவும் இடமளிக்கின்றது.

இன்டர்நெட்டின் இந்த விஸ்தரிப்புடன் உலக சோசலிச வெப் நிலையத்துக்கான உலக வாசகர்களின் தொகையும் வளர்ச்சி பெறும் என நா.அ.அ.கு.எதிர்பார்க்கின்றது. தொடர்புச் சாதனங்களின் துரிதமானதும் பூகோளரீதியானதுமான ஒரு வடிவம் என்ற ரீதியில் இன்டர்நெட் அசாதாரணமான ஜனநாயக, புரட்சிகரத் தாக்கங்களைக் கொண்டுள்ளது. அத்தோடு இது பிரமாண்டமான உலக புத்திஜீவி வளங்களுக்கான வசதிகளையும் - நூல்நிலையங்கள் தொடக்கம் சுவடிகள் காப்பகங்கள், தொல்பொருட் காட்சிச்சாலைகள் வளங்களுக்கான வசதிகளையும் தருகின்றது. இதுவரை காலமும் வெகுஜனத் தொடர்புச் சாதனக் கும்பல்களும் அரசாங்கங்களும் இதைக் கிடைப்பதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அத்தோடு பிரசுர சாதனங்களின் உற்பத்திச் செலவும் பெரிதும் குறைவாக உள்ளது. கணனிகள் சமூகத்தின் பெரும் பகுதியினரின் வீடுகள், பாடசாலைகள், வேலைத்தலங்களுக்குள் விருத்தி காண்பதானது இலட்சோப இலட்சம் மக்களுடன் மலிவான விதத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான சாத்தியங்களைத் திறந்துள்ளது.

அரசியல் வாழ்க்கையினுள் இப்போது காலடி வைத்துக் கொண்டுள்ள ஒரு புதிய தலைமுறையினர் இன்டர்நெட் தொடர்புச் சாதனத்தின் ஊடாக இதன் விளக்கத்தைப் பெறுவர். ஏற்கனவே 800 இலட்சம் மக்கள் வெப்பை தரிசிக்கும் வாய்ப்புக்களைக் கொண்டுள்ளதோடு, அடுத்த இரண்டு வருடங்களுள் இப்புள்ளி 1000 இலட்சத்துக்கும் மேலாக அதிகரிக்கும் என நம்பப்படுகின்றது. இந்தத் தொழில்நுட்பத்தின் மைய முக்கியத்துவம், நவீன பொருளாதார வாழ்க்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் இது மிகவும் பரந்ததும், பாவனைக்கு இலகுவானதுமாக மாறும் என எதிர்ப்பார்க்க முடியும்.

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ள உலக சோசலிச வெப் நிலையம் ஒரு ஆழமான அரசியல் வரலாற்றின் அடிப்படையில் எழுகின்றது. இது 1923ல் மாஜி.சோவியத் யூனியனில் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வளர்ச்சிக்கு எதிராக லியொன் ட்ரொட்ஸ்கியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசியல், கோட்பாட்டு போராட்டத்தின் வரலாற்று தொடர்ச்சியினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ரூஷ்யப் புரட்சியிலும் உள்நாட்டு யுத்தத்திலும், பொருளாதாரத்தை மீள நிர்மாணிப்பதிலும் ஒரு தலைமைப் பாத்திரம் வகித்ததன் பின்னர் ட்ரொட்ஸ்கி 1920பதுகளின் ஆரம்பத்தில் எழுந்த புதிய அதிகாரத்துவத்துக்கு எதிரான சோசலிச எதிர்ப்பின் முன்னணிப் புள்ளியாக விளங்கினார். அவர் சோவியத் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட வசதிவாய்ப்புக்கள் படைத்த ஸ்டாலினிச இயந்திரத்துக்கு எதிரான ஒரு அரசியல் போராட்டத்தை நடாத்தினார். ஸ்டாலினிஸ்டுகள் அக்டோபர் புரட்சியின் இலட்சியங்களை காட்டிக் கொடுத்ததோடு , இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் குற்றங்களைத் தயார் செய்தனர். ட்ரொட்ஸ்கியின் வாழ்நாள் வேலைகளில் உச்சக் கட்டமானதாக ஒரு ஸ்டாலினிச ஏஜன்டினால் அவர் சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னதாக - 1938ல் நான்காம் அகிலத்தை ஸ்தாபிதம் செய்தமை விளங்கியது.

1991ல் ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் இறுதி வீழ்ச்சியானது , ட்ரொட்ஸ்கியினதும் நான்காம் அகிலத்தினதும் மிகவும் ஆழமான போராட்டத்தை ஊர்ஜிதம் செய்வதாக விளங்கிற்று. 1936க்கு முன்னரே ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிச அதிகாரத்துவம் முதலாளித்துவப் புனருத்தாரணத்தை நோக்கி தவிர்க்க முடியாத விதத்தில் செல்லும் ஒரு பாதையில் பயணம் செய்வதாக வலியுறுத்தினார். இது அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர, மனித சமூக சமத்துவத்தின் அபிலாசைகளுக்கு ஒரு நனவான அரசியல் எதிரியாகிவிட்டதாக அவர் விளக்கினார்.

சோசலிசத்தினதும் மார்க்சிசத்தினதும் மரணத்தைப் பற்றிய சகல பிரகடனங்களும் லியொன் ட்ரொட்ஸ்கியினதும் நான்காம் அகிலத்தினதும் முக்கியத்துவத்தை சிடுமூஞ்சியான வகையில் தவிர்த்துக் கொள்கிறார்கள் அல்லது தட்டிக் கழிக்கின்றார்கள்.

முதலாளித்துவத்துக்கு முண்டு கொடுப்பவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள கடைகெட்டதும் வரலாற்றுரீதியில் நேர்மையற்றதுமான மதிப்பீடுகளின் அடிப்படையில் செய்யப்பட்டவற்றில் இந்த அரசியல் பாரம்பரியங்கள் - ட்ரொட்ஸ்கியின் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் ஸ்டாலினிசத்துக்கான அனைத்துலக சோசலிசப் பதிலீட்டை ஒருவர் காணக்கூடியதாக உள்ளது. பிற்போக்கு வரலாற்றாசிரியர்கள் இது ஒரு போதும் இருந்தது கிடையாது என வலியுறுத்துகின்றார்கள்.

உலக சோசலிச வெப் நிலையம் இந்த வரலாற்றை பரந்த ரீதியில் வெளியிட்டு வைக்கும். மதிப்பிற்குரிய நூல்களையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் மர புரிமைகள் பற்றிய பத்திரங்களையும் இந்நிலையத்தில் இருந்து கொள்வனவு செய்ய முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட சாதனங்கள் விஞ்ஞான சோசலிசத்தின் ஸ்தாபகர்களான மார்க்ஸ், எங்கேல்ஸ், அக்டோபர் புரட்சி, ஸ்டாலினிசத்துக்கு எதிரான போராட்டங்கள் பற்றிய வரலாற்றுக் கண்காட்சி சாதனங்கள் ஆடியோ, வீடியோ உருக்களில் நேராகவும் வழங்கப்படும்.

## உலக சோசலிச வெப் நிலையத்தை கட்டியெழுப்புவோம்!

இந்த உலக சோசலிச வெப் நிலையம் ஏற்கனவே பூகோளத்தின் ஒவ்வொரு கண்டத்தில் இருந்தும் வாசகர்களைக் கவர்ந்து கொண்டுள்ளது. எதிர்வரும் மாதங்களிலும் வருடங்களிலும் இது தலைநீட்டும் தொழிலாளர் வர்க்கத்தின் சோசலிச இயக்கத்தின் ஒரு முக்கிய கவர்ச்சி முனையாக மிளிரும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

உலக சோசலிச வெப் நிலையம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அதனுடன் இணைந்த அரசியல் கட்சிகளதும் முயற்சியால் உருவானது. சகல வாசகர்களும் இந்தக் கட்சிகளில் ஒன்றில் சேரும்படி அல்லது அனைத்துலக குழு அதன் கட்சிகளைக் கொண்டிராத நாடுகளில் புதி'ப கட்சிகளை ஸ்தாபிப்பது பற்றி விசாரிக்கும்படி வேண்டப்படுகின்றார்கள். உலக சோசலிச வெப் நிலையத்தில் பிரசுரத்திற்காகக் கட்டுரைகளை சமர்ப்பிக்கும்படி நாம் ஊக்குவிக்கின்றோம்.பூகோளம் பூராவும் இருந்து கொண்டுள்ள தொழிலாளர்களதும் சோசலிஸ்டுகளினதும் கட்டுரைகளையும் கடிதத் தொடர்புகளையும் ஒன்றிணைப்பதே இந்நிலையத்தின் நோக்கம்.இந்த நிலையத்தை பராமரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் நிதிப் பங்களிப்புக்கள் அவசியமாகியுள்ளது.

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சு இயந்திரத்தினை கட்டன்பேர்க் கண்டுபிடித்தமை, புத்திஜீவி வாழ்க்கை மீது தேவாலயம் (church) கொண்டிருந்த ஆதிக்கத்தை உடைக்கவும் நிலவுடமை நிறுவனங்களை குழிபறியச் செய்யவும் அதைத் தொடர்ந்து வந்த விழிப்புணர்ச்சிக்கும் ஒரு முக்கிய பங்களிப்பு செய்ததைப் போல இன்டர்நெட் புரட்சிகர சிந்தனையின் மறுமலர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக உதவியுள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, இந்தத் தொழில்நுட்பத்தை கைப்பற்றவும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் விடுதலைக்கான ஒரு ஆயுதமாகக் கையாளுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த உத்வேகத்தோடு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உங்களை உலக சோசலிச வெப் நிலையத்துக்கு அழைப்பதோடு இதை உங்களை ஆதரிக்குமாறும் அதன் அபிவிருத்தியில் பங்கு கொள்ளுமாறும் வேண்டுகின்றது.

# மருதானை விடுதலைப் புலிகளின் ....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

தமது இராணுவத் தாக்குதல்களுக்கு "தேசிய விடுதலை யுத்தம் "எனப் பெயர் சூட்டிக் கொண்டுள்ளனர்.

சிங்கள, தமிழ் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் அறிக்கை மோசடியானது. அவர்களின் இலக்கு சமாதானம் அல்ல. மோசடி விடுதலையும் அல்ல. பொதுஜன முன்னணி அரசாங்கமும் விடுதலைப் புலிகள் தலைமை என்ற இரண்டும் சிங்கள, தமிழ் மக்களுக்கு பிளவினையும் மரணத்தையும் மேலும் மேலும் நெருக்கமாக்குகின்றன.

1977தொடங்கி 17 ஆண்டு காலம் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், தொழிலாளர்களதும் கிராமப்புற இளைஞர்களதும் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு ஈடாட்டம் கண்டு போகும் போது ஏகாதிபத்தியவாதிகள் தனித் தமிழ் அரசு கோரிக்கைக்கான விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கு ஆதரவு காட்டினர். ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் இலாபத்தை உத்தரவாதம் செய்ய கொழும்பு அரசாங்கம் தோல்வி காணும் ஒரு நிலையில் வடக்கு-கிழக்கில் ஒரு புதிய முதலாளித்துவ அரசாங்கத்தை ஸ்தாபிதம் செய்வதே அவர்களின் இலக்காக விளங்கியது.

இப்போது எப்படி என்றாலும் ஏகாதிபத்தியவாதிகளின் உதவி முன்னைய அரசாங்கத்தைக் காட்டிலும் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை நடாத்துகின்றதும் தொழிலாளர்., கிராமப்புற ஏழைகளின் போராட்டங்களுக்கு எதிராக மிகவும் உக்கிரமான முறையில் பாய்ந்து விழுகின்றதுமான பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு மாற்றப்பட்டு உள்ளது. பொதுமக்கள் மீது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்தத் தாக்குதல்கள், மாஜி.ட்ரொட்ஸ்கிவாதிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியினதும் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் நவசமசமாஜக் கட்சியினதும் மற்றும் தொழிற்சங்கவாதி அதிகாரத்துவங்களதும் முண்டு கோலுடனேயே இடம்பெறுகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, அவுல்திரேலியா போன்ற சகல ஏகாதிபத்திய சக்திகளும் விடுதலைப் புலிகளின் புதிய குண்டுத் தாக்குதலை கண்டனம் செய்யவும், பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் "சமாதான முயற்சிக்கு " தமது ஆதரவை காட்டவும் முன்வந்துள்ளன.

சுயநிர்ணயம் என்ற முதலாளித்துவ பதாகையின் கீழ் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் இனக்குழுக்களும் முட்டுச் சகதிக்குள் தள்ளப்பட்டுள்ள ஆபத்தினை அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஜனநாயக உரிமைகளையும் சமூக சமத்துவத்தையும் கைவரப்பெற பிரார்த்திக்கும் ஒடுக்கப்படும் மக்களிடையே உள்ள ஒரே மார்க்கம், பாட்டாளிவர்க்க அனைத்துலகவாத சோசலிசத்தின் பதாகையைச் சூழ அணிதிரள்வதேயாகும். இலங்கையிலும், ஈழத்திலும் தமிழ், சிங்கள தொழிலாளர் வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் ஐக்கியப்படுத்தி அணிதிரட்ட சோசலிச சமத்துவக் கட்சி போராடுவது இந்த முன்நோக்கினதும் வேலைத் திட்டத்தினதும் அடிப்படையில் ஆகும். இனவாத யுத்தத்தையும் மக்கள் படுகொலைகளையும் நிறுத்தக் கூடிய ஒரே மார்க்கம், இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசினை அமைக்கப் போராடுவதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

9ம் பக்கத் தொடர்ச்சி

அறிக்கை வெளியிட்டதோடு தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும்மக்களதும் பாதுகாப்பின் பேரில் பொதுமக்கள் இயக்கத்தை அணிதிரட்ட போராடிய ஒரே அமைப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமேயாகும். தணிக்கை அதிகாரியினால் அறிக்கைகள் வெட்டித் தள்ளப்படும் நிலையில் 1981 ஆகஸ்டு 25ம் திகதிய "கம்கறு மாவத்த" வில் "அவசரகாலச் சட்டம் தொழிலாளர் வர்க்கத்தை வேட்டையாடவே" என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்ட பு.க.க.பின்வருமாறு குறிப்பிட்டது:

"இது சாதாரண காலத்து அவசரகாச் சட்டம் அல்ல. இன்றைய நிலைமையை உருவாக்க யூ.என்.பி.திட்டமிட்டு தொழிற்பட்ட விதத்தை நாம் தொடர்ந்து தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் சுட்டிக் காட்டி வந்தோம். தொழிலாளர் வர்க்கத்தின் செயற்பாட்டுக்கு கால்கட்டுப் போடவும் வாய்ப்பூட்டு மாட்டவும் கல்வி வெள்ளை அறிக்கை மூலமும் சுகாதார வெள்ளை அறிக்கை மூலமும் பொதுமக்கள் மீது திணிக்கவும் தமிழ் மக்களை நசுக்கித் தள்ளவும் திட்டவட்டமான முறையில் ஆயுதப் படைகளை வீதிகளில் இறக்கவும் பொலிசாருக்கு அதிகாரம் வழங்குவதும் இந்த அவசரகாலச் சட்டத்தின் அர்த்தமாகும்.

"யூ.என்.பி.அரசாங்கத்துக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் தமிழ் தேசிய இனத்தினரையும் ஒன்றுதிரட்டி அரசாங்கத்தின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதன் மூலம் தமது பாதுகாப்பினை தமது கரங்களுக்குள் கொணர்வதற்கு பொதுமக்களைத் தயார் செய்ய வேண்டிய காலத்தில் சமசமாஜ, ஸ்டாலினிசத் தலைவர்கள் நேரடியாக யூ.என்.பி.அரசாங்கம் பக்கம் சென்றுள்ளார்கள்.

"கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதியான சரத் முத்தேட்டுவேகமவை பாராளுமன்றத்துக்கு அனுப்பியது யூ.என்.பி.அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு அல்ல. யூ.என்.பி.அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்களைத் தயார் செய்வதற்கு. அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவதாக் வாக்குறுதியளித்து பாராளுமன்றத்தினுள் நுழைந்து கொண்டதன் பின்னர் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களின் முழுப் பக்க பலத்துடனும் அவர் செய்யும் நடவடிக்கைகளைப் பாருங்கள். அவசரகாலச் சட்ட ஆட்சிக்கு முழு ஆதரவு வழங்கி அவர் கூறியவற்றை "அத்த" பத்திரிகை பின்வருமாறு அறிக்கை செய்திருந்தது:

"அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக தமது கட்சி எதிர்ப்புக் காட்டாது போனாலும் அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்தத் தாமதித்தது. ஆதலால் அதற்கான காரணத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என கலவானை பா.உ. தெரிவித்தார்" பத்திரிகை தணிக்கை, தொழிலாளர் கூட்டத் தடை இராணுவம் வீடுகளுக்குள் புகுந்து சோதனை நடாத்துதல் ஆதியன இதற்கு முன்னர் அமுல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஸ்டாலினிஸ்டுகள் கூறுகின்றார்கள்.

"கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களுக்கு நாம் பின்வருமாறு கூறுவோம்: இந்தத் துரோக விதிமுறை உங்களது அடிப்படை உரிமைகளை அரசாங்கத்துக்கு பலி கொடுப்பதாகும். இராணுவ சர்வாதிகாரத்துக்கு வழி வகுப்பதாகும்.

"யூ.என்.பி.ஆட்சியின் கீழ் அவர்களால் உருவாக்கப்பட்ட கடைகெட்ட நடவடிக்கைகளின் பெறுபேறாக சுமார் 20000 தோட்டத் தொழிலாளர்கள் அகதிகளாகி உள்ள நிலைமையில் தமிழ் தேசிய இனத்தவர்களின் பல உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ள ஒரு நிலைமையில் தமிழ் தேசிய இனத்தவர்களின் சொத்துக்கள் தவிடுபொடியாக்கப்பட்டு உள்ள ஒரு நிலைமையில் ஸ்டாலினிஸ்டுகள் பலவீனமான விதத்தில் கூறக் கூடியதெல்லாம்: "நாட்டின் பிரிவினையை நாம் எதிர்க்கின்றோம் "என்பது மட்டுமே.

".. முத்தேட்டுவேகமவும் மற்றும் ஸ்டாலினிச , சமசமாஜ தலைவர்களும் ஈழம் பிரச்சாரத்துக்கு எதிரான சிலுவை யுத்தத்தில் இறங்கி இருந்தாலும் இலங்கையின் தொழிலாளர் வர்க்கம் அதில் கலந்து கொள்வதை முழுமனே நிராகரிக்கின்றது. தாதிமார் போராட்டம் , வங்கி ஊழியர் போராட்டம், மாணவர் போராட்டம் போன்றவை சுட்டிக்காட்டியுள்ளது என்னவெனில், யூ.என்.பி.காரர்கள் சிங்கள முதலாளிகளுடன் ஒரே தேசிய இனமாக ஒரே படுக்கையில் படுத்து எழும்ப வேண்டிய அவசியம் தொழிலாளர் வர்க்கத்துக்குக் கிடையாது.

"நாம் தொழிலாளர் வர்க்கத்துக்கு பின்வருமாறு கூறுவோம்: ஸ்டாலினிஸ்டுகளதும் சமசமாஜிஸ்டுகளதும் ஜே.வீ.பி.காரர்களதும் இனவாதமானது ஆளும் வர்க்கத்துடன் யூ.என்.பி.அரசாங்கத்துடன் இத்தலைவர்களுக்கு இருந்து கொண்டுள்ள உறவுகளின் கண்டிப்பான வெளிப்பாடாகும்.

"இத்தலைவர்கள் தமிழ் தேசிய இனம் தொடர்பாகக் காட்டும் கடைகெட்ட குரோதத்தை, தொழிலாளர் வர்க்கம் சம்பந்தமாகவும் காட்டுகின்றார்கள். எனவேதான் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கி, உங்கள் கூட்டங்களை தடைசெய்யவும் உங்களுக்கு அவசியமான செய்திகள், உங்களைப் பற்றிய செய்திகளைத் தடைசெய்யவும் இத்தலைவர்கள் இப்போது செயற்படுகின்றனர்.

"முதலாளி வர்க்கத்தில் இருந்து பிரிந்து தொழிலாளர் வர்க்கத்தினதும் தமிழ் மக்களதும் அடிப்படை உரிமைகளை காக்கும் பொருட்டு போராடுமாறு இத்தலைவர்களை நெருக்குமாறு நாம் தொழிலாளர் வர்க்கத்துடன் இணைகின்றோம். ஆனால் இன்று தீர்க்கமான விடயம், இந்தத் தலைவர்களை வெளியேற்றி, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சிக்கான போராட்டத்தை வழிநடாத்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டியெழுப்ப இணைவதேயாகும்."

நான்காம் அகிலத்தின் இடைமருவு வேலைத்திட்டத்திற்கு இணங்க வேலைத்திட்டத்தை தயார் செய்து கொண்டு பொதுமக்களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தீர்க்கமானதும் கஷ்டமானதும் ஆபத்தானதுமான போராட்டத்தை முன்னெடுத்த வரலாறு கொண்டது. இந்த வரலாற்று அனுபவங்களுக்கும் படிப்பினைகளுக்கும் புறமுதுகுகாட்டி இன்றைய இனவாத யுத்தத்தின் நிலைமைகளின் கீழ் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும் விடுதலைக்கான பாதையை தேடிக் கொள்ள முடியாது. சோசலிச சமத்துவக் கட்சியின் பலமும் தொடர்ச்சியும் இந்த விடயங்களில் தங்கியுள்ளது.

தொடரும்.

# தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகள்

7ம் பக்கத் தொடர்ச்சி

மாட்டிக்கொண்டுள்ளதும் உலக முதலாளித்துவத்தின் இந்த இலாப வெறி அவசியங்களுடனேயேயாகும்.

தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளையும் தட்டிப் பறித்துக் கொண்டு வாழ்க்கை நிலைமைகளை ஒடுக்கித் தள்ளி, இலாபம் சுரண்ட ஏகாதிபத்திய முதலாளிகளும் அதன் சகல கையாட்களும் திரும்பியுள்ளனர். இலாப மட்டத்தை காக்கும் இந்த போராட்டத்தில் முதலாளித்துவ உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டு உள்ளது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலாப உழைப்பும் இலாபமான வளங்களும் உட்பட்ட உற்பத்தி செலவுகளின் குறைந்த இடங்களைத் தேடியும் அத்தகைய இடங்களை உருவாக்கியும் உலகின் சகல இடங்களிலும் குவிந்து கொண்டுள்ளனர். இலங்கையின் முதலாளித்துவ அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கை எனப்படுவதன் கீழ் அரச துறைகளை தனியார்மயமாக்குகின்றது. சேமநல சேவைகளை வெட்டுகின்றது. சம்பளம், தொழில், சேவை உரிமைகளை ஒழித்துக் கட்டுகின்றது. வேலைத்துரிதப் படுத்தலும் வளங்களை கொள்ளை இலாபத்துக்கு விற்றுத் தள்ளுவதும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனைத்து சலுகைகளும் வழங்குவதும் இடம் பெறுகின்றது.

உலக முதலாளி வர்க்கத்தினதும் அதன் ஒரு பாகமாக இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் நெருக்கடி உக்கிரம் அடையும் அளவுக்கு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை பிடுங்குவதும் சுரண்டுவதும் வெறிபிடித்த கட்டங்களை எட்டிப்பிடித்துள்ளது. முதலாளிகள் சுவர்க்கங்களாக வர்ணித்து வந்த தென்கிழக்கு ஆசியாவின் சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேஷியா முதலான நாடுகளின் பொருளாதாரங்கள் வீழ்ச்சி கண்டு, ஏகாதிபத்திய அமைப்பிலேயே பெரும் நெருக்கடி உருவாகும் நிலைமையினுள் முதலாளிகள் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் வாழ்க்கை உரிமைகளை மேலும் மேலும் நசுக்கத் திரும்பியுள்ளனர்.

தோட்டங்களை தனியார்மயமாக்கி, சம்பளம், வாழ்க்கை நிலைமைகள், தொழில்களை நசுக்கித் தள்ளி தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் திட்டவட்டமான உதவியோடு முதலாளி வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தோட்டத் தொழிலாளர்களை தாக்குவது இத்தகைய ஒரு நிலைமையினுள்ளேயே. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தோட்டத் தனியார்மயம் முழுமனே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கொழும்பு பங்கு முதல் சந்தையின் ஊடாக தோட்டத்துறை உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் பிடிக்குள் கொணரப்பட்டுள்ளது. முதலாளிகள் தோட்டங்களை கொள்ளை இலாபத்துக்கு வாங்கினர். சிறப்பாக தேயிலைத் தோட்டங்களின் உரிமையை தட்டிக் கொண்டுள்ள கம்பனிகள் பிரமாண்டமான இலாபம் கறந்து கொண்டுள்ளன. முதலாளிகளும் அரசாங்கமும் இவை வெறுமனே சந்தையில் தேயிலை விலை அதிகரித்ததன் காரணத்தினால் ஏற்பட்டவை எனக் காட்ட தலைகீழாக நிற்கின்றன. இது பொய்யாகும். 1992 தொடக்கம் தோட்டத் தனியார்மய வேலைகள் துரிதப்படுத்தப்பட்டது. இது இலாபம் கறப்பின் பின்னணியில் இருந்து கொண்டுள்ளது. சில கம்பனிகள் மலையெனக் குவிததுக் கொண்டுள்ள இலாபம் வருமாறு :

| தோட்டங்கள் | 1996 | 1997 | இலாப உயர்வு வீதம் |
|---|---|---|---|
| 1.மஸ்கேலியா | 226 | 147.2 | 551 |
| 2.போகவந்தலாவை | 281 | 109.2 | 287 |
| 3.கொட்டகலை | [illegible] | 81.2 | 199 |
| 4.[illegible] | [illegible] | 120.9 | 186 |
| 5.கேகாலை | 40.1 | 60.4 | 50 |

(1997 புள்ளிவிபரங்கள் செப்டம்பர் வரையிலானவை)

இந்த இலட்சணத்தில் பிரமாண்டமான அளவில் இலாபத்தைக் குவித்துக் கொண்டே தொழிலாளர்கள் சம்பளக் கோரிக்கையை முன்வைத்த போது தோட்ட முதலாளிகள் சங்க செயலாளர் எஸ்.கே. செனவிரத்ன, அந்த சம்பள கோரிக்கையை வழங்கினால் ஆண்டொன்றுக்கு 260 கோடி ரூபா செலவிட வேண்டி நேரிடும் எனவும் ஆதலால் அந்தக் கோரிக்கையை எந்த விதத்திலும் அமுல்செய்ய முடியாது எனவும் துள்ளிப் பாய்ந்தார். இந்த முதலாளிகள் ஐலண்ட் போன்ற முதலாளித்துவ பத்திரிகைகளை கொண்டு கென்யாவிலும் இந்தியாவிலும் போல் இலங்கையிலும் தொழிலாளர்களின் உற்பத்தி விளைதிறன் இல்லாததால் சம்பள உயர்வு அல்ல சம்பள வெட்டுச்செய்ய வேண்டும் என ஊளையிட்டனர்.

தொழிற்சங்கத் தலைவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர் முதலாளித்துவக் கம்பனிகள் இப்போது தொழிலாளர்களை உயிர்வாங்கி, வேலைவாங்குவதன் மூலம் உற்பத்தி விளைதிறனை அதிகரிக்கும் அதே வேளையில் தொழில், சேவை நிலைமைகளை வெட்டித் தள்ளி, இலாபம் சுரண்டும் நிலைமைகளை மேலும் மேலும் ஊர்ஜிதம் செய்யத் துடிக்கின்றனர். இலங்கை முதலாளிகள் சம்மேளத்தின் பணிப்பாளர் நாயகம் பிராங்கிளின் அமரசிங்க "தோட்ட வேலைநிறுத்தம்: தீர்க்கப்படுவதற்கு எஞ்சியுள்ள பிரச்சினைகள் சில " என்ற தலைப்பில் சமீபத்தில் டெயிலி நியூஸ் பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "உற்பத்தி விளைதிறனில் கூடிய முன்னேற்றம் இடம்பெறாது போனால் முதலாளிகள் கூடிய சம்பளம் வழங்குவதையிட்டு முதலாளிகளின் வல்லமை, இயலாமை பற்றி நீண்ட காலமாக முதலாளிகளின் சம்மேளனம் தொழிற்சங்கங்களை எச்சரித்தது. பூகோளமயமாக்கமும் சந்தையில் பரந்த தெரிவுக்கான நிலைமைகள் இருப்பினும் இதைக் கட்டாயமாக்கி உள்ளது. உலக வங்கியின் தீர்க்கதரிசனத்தின்படி சந்தைக்குள் புதிதாக நுழைவோர் எமது சந்தை பங்கை மேலும் ஆக்கிரமித்துக் கொள்வர்."(1998 பெப்பிரவரி 24)

இப்போது முதலாளிகளின் கூச்சல் "இலாபத்தை உச்சமாக்கிக் கொள்ள விளைதிறனை உயர்த்துவதாகும்".

தோட்டத் தொழிற்சங்கங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பாவித்து தொழிலாளர்கள் மீது தமது திட்டங்களை திணிப்பது தோட்டக் கம்பனிகள் ஏற்கனவே ஆரம்பித்து உள்ளன. முன்னர் ஒரு தொழிலாளி நாளொன்றுக்கு கொய்ய வேண்டிய தேயிலைக் கொழுந்தின் அளவு 13 கிலோவுக்கும் 17 கிலோவுக்கும் இடைப்பட்டதாக விளங்கியது. இப்போது தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு கொய்ய வேண்டிய சாதாரண கொழுந்தின் அளவு 17 கிலோ ஆக இருக்க வேண்டும் என பல தோட்டங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இல்லாது போனால் வெள்ளிக்கிழமையன்று ஏழாவது நாளில் அல்லது அடுத்தக சனி , ஞாயிறு தினங்களில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. விலைப் போணஸ் என வருணிக்கப்பட்ட ரூபா.6ல் சில தோட்டங்களில் 40 சதம் வெட்டப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் தொழிலாளர்களின் வேலைகளுக்கும் சேவை நிலைமைகளுக்கும் இடம்பெறப் போகும் தாக்குதல் பற்றிய ஒரு சிறு அறிகுறி மட்டுமே. இந்த உடன்படிக்கையின் மூலம் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளுக்கு அணுவளவும் நன்மை ஏற்படவில்லை. உரிமைகளை சுதந்திரமாக தாக்கத் தோட்ட தொழிற் சங்கங்கள் கம்பனிகளுக்கு ஆதரவு வழங்கியதேயாகும்.

மிகுதி அடுத்த இதழில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் மாணவர்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறை உக்கிரம்

பேராதனை பல்கலைக் கழகத்தின் தமிழ் மாணவர்கள் சுதந்திரமான முறையில் கல்விபெறும் உரிமை உட்பட்ட அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் நிலைமைக்கு இடைவிடாது முகம் கொடுத்துள்ளனர். இந்த வருடத்தினுள் பல்கலைக் கழகத்தினுள் பொலிசார் பலதடவை பாய்ந்துள்ளதோடு பல தமிழ் மாணவர்கள் பொலிஸ் கூடுகளில் தள்ளப்படும் சித்திரவதைகளுக்கும் உள்ளானார்கள்.

கடந்த பெப்பிரவரி 16ம் திகதி இரவு 10.30க்கு நூற்றுக்கும் அதிகமான பொலிசார் பேராதனை பல்கலைக் கழகத்தினுள் நுழைந்ததோடு , விடுதலைப் புலிகளைத் தேடும் சாட்டில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இதில் மூன்று தமிழ் மாணவர்களும் மூன்று ஊழியர்களும் பேராதனைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். மூன்று மாணவர்களும் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் கைது செய்யப்பட்ட ஊழியரில் ஒருவர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அடுத்து பெப்பிரவரி 21ம் திகதி திருகோணமலையில் இருந்து தமது உறவினரைச் சந்திக்க வந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் இரண்டு பல்கலைக் கழக மாணவர்களுடன் பேசிக் கொண்டிருந்த வேளையில் பல்கலைக் கழக் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு பேராதனை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பேராதனைப் பொலிசாரினால் கண்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்தாகத் தெரிகின்றது.

இதைத் தொடர்ந்து குச்சவெளி பகுதியைச் சேர்ந்த பூபாலசிங்கம் சிவகுமாரன் என்ற மாணவன் பேராதனைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.இந்த மாணவன் இதுவரை விடுதலை செய்யப்படாததோடு பல்கலைக் கழக் நிர்வாகம் இந்த கைது பற்றிக் குறிப்பிடுகையில் "கைது செய்யப்பட்ட மாணவன் ஏற்கனவே விரிவுரைகளில் கலந்து கொள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டவர். ஆதலால் அவர் பல்கலைக் கழக பூமியில் தங்கி நிற்பது சட்டவிரோதமானது" என்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தினுள் இயங்கும் ஜனதா மித்துரோ அமைப்பினதும் பாசிச ஜே.வீ.பி.யினதும் மாணவர் கும்பல்கள் தமிழ் மாணவர்களுக்கு எதிரான இனவாத அரச ஒடுக்குமுறையுடன் அணிதிரண்டு கொண்டுள்ளனர். தலாதா மாளிகை குண்டு தாக்குதலுக்கு உள்ளானதற்கு மறுநாள் கண்டி நகரில் உள்ள இந்து கோவில்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவாத தாக்குதல்களில் இந்த இனவாதக் கும்பல்களின் வழிநடாத்தலின் கீழ் பேராதனை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 80மாணவர்கள் கலந்து கொள்ளச் செய்யப்பட்டனர். அன்றைய தினம் கண்டி நகரில் தமிழ் மக்கள்ஞ்கு எதிராக இடம்பெற்ற இனவாத ஊர்வலங்களில் கலந்து கொண்டவர்கள் எடுத்துச் சென்ற பதாகைகளும் சுவரொட்டிகளும் பேராதனைப் பல்கலைக் கழகத்தினுள்ளேயே தயார் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. இந்த இனவாதக் கும்பல்கள் தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையினரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் காட்டுவதன் மூலம் பல்கலைக்கழகத்தினுள் அரச ஒடுக்குமுறைக்கு அழைப்பு விடுப்பவர்களாக இருந்து கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதன் பின்னர் மாணவர் அடையாளப் பத்திரத்தில் விலாசம் யாழ்ப்பாணம் என்றிருப்பின் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் என பொலிசார் கூறுவதாக தமிழ் மாணவர்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர். விலாசம் வேறுவிதமாக இருப்பின் அவரை விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபராகக் கணிக்கும் விதிமுறையும் நடைமுறையில் இருந்து கொண்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு



### லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-போர்ன்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

| சிலாபம் மெல்புர சனசமூக நிலையம் | கம்பஹா சுபத மாவத்த | கொழும்பு பொது நூல் நிலையம் |
|---|---|---|
| மார்ச் 15 | மார்ச் 22 | மே 10 |
| மார்ச் 29 | ஏப்பிரல் 05 | மே 24 |
| ஏப்பிரல் 5 | ஏப்பிரல் 26 | ஜூன்07 |
| ஏப்பிரல் 12 | மே 10 | |
| ஏப்பிரல் 26 | மே 24 | |
| மே 17 | ஜூன் 7 | |
| மே 31 | ஜூன் 21 | |
| ஜூன் 21 | ஜூலை 5 | |
| ஜூலை 5 | ஜூலை 19 | |




சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்ப்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.